Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 26 புதன்கிழமை (09.04.2014) பக்கங்கள் 20 ஓசை – 190

## யாழில் இருவர் கைது

பருத்தித்துறையினைச் சேர்ந்தவரும் புனர்வாழ்வு பெற்றவருமான பத்திரிநாதன் அலன் மன்ரோ (வயது-30) என்பவர் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இவர், யாழ்.பருத்தித்துறை முனை இறங்குதுறையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்ட ஐந்து மீனவர்களை விட மேலதிகமாகத் தேடப்பட்டு வந்த நபரென பொலிஸார் தெரிவித்தனர்.குறித்த நபர் கிளிநொச்சிக்குச் சென்றுகொண்டிருக்கையில் கைதுசெய்யப்பட்டதாகவும் இவரையும் வவுனியாவிற்குக் கொண்டு சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அவுஸ்ரேலியாவிலுள்ள புலி உறுப்பினர்களிடம் நிதியினைப் பெற்று படகு ஒன்றினை கொள்வனவு செய்து மீன்பிடியில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டிலேயே குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

அதேவேளை ஊர்காவற்

19 ஆம் பக்கம் பார்க்க

## தமிழரசுக்கட்சியை தடைசெய்யக்கோரி வழக்கு

(கொழும்பு)

இலங்கைத் தமிழரசுக் கட்சியை தடை செய்யுமாறு கோரி உயர்நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழரசுக் கட்சி, நாட்டில் தனி இராச்சியமொன்றை உருவாக்கும் நோக்கில் நிறுவப்பட்ட கட்சி என தீர்ப்பளிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாட்டுக்குள் வேறு இராச்சியமொன்றை அமைப்பதற்கு எந்த வகையிலும் இலங்கைப் பிரஜைகள் ஒத்துழைப்பு வழங்கக் கூடாது என அரசியல் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் தமிழரசுக் கட்சியும் செயற்பட வேண்டுமென நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என கோரப்பட்டுள்ளது.

களனி பொல்ஹேன என்னும் இடத்தைச் சேர்ந்த ஹிக்கட்டுவ கோரலகே தொன் சந்திரசோம என்பவரினால் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா, தேர்தல் ஆணையாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். தனிப்பட்ட நபரோ அல்லது அரசியல் கட்சியொன்றோ நாட்டை பிளவுபடுத்தும் வகையில் செயற்பட்டால் அதற்கு எதிராக வழக்குத் தொடர முடியும் என மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# இரணைமடு குடிநீர் திட்டத்தை மாகாணசபை அமுல் செய்யத் தவறினால் மத்திய அரசு பொறுப்பெடுக்கும்



(வலிமேற்கு)

இரணைமடுக் குடிநீர்த் திட்டத்தை வடக்கு மாகாண நிர்வாகம் முறையாக அமுல்செய்யத்தவறினால் மத்திய அரசு இக்குடிநீர்விநியோகத்திட்டத்தை கையில் எடுத்து நடைமுறைப் படுத்தும் என்று யாழ். கிளிநொச்சி குடிநீர் மற்றும் சுகாதாரத் திட்டத்தின் சமூகவியல் நிபுணர் திரு.ரி. பாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் முதலாவது பாரிய அபிவிருத்தித்திட்டம் யாழ். கிளிநொச்சி, இரணைமடு குடிநீர் திட்டம். இத்திட்டத்தை எதிர்பார்த்து வடக்கில் உள்ள 90 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 3இலட்சம் மக்கள் எதிர்பார்த்திருக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படவேண்டிய காலத்தின் தேவையாக யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டம் மாறியுள்ளது. என்றும் அவர் தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச சபையில் சர்வதேச நீர்த்தினம் நேற்று பிரதேசசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் சிறப்பு அதிதியாகக்கலந்து கொண்ட சமூகவியல் நிபுணர் ரி.பாலசுப்பிரமணியம் தெரிவிக்கையில்,

முப்பது வருடங்களின் பின்னர் வடமாகாண சபை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபைக்கு முதன் முதலில் அதாவது 2300கோடி ரூபா செலவில் முன்னெடுக்கக் கூடிய பாரிய அபிவிருத்தித் திட்டம் இதுவாகும்.

இத்திட்டத்தை பூர்த்தியாக்கி குடிதண்ணீரை வழங்க வேண்டிய சவாலுடன் கூடிய இத்திட்டத்தை எதிர்பார்த்து 3 இலட்சம்

19 ஆம் பக்கம் பார்க்க

## இரணைமடு திட்டத்தில் நன்மைகளைவிட தீமைகளே அதிகம்



(கிளிநொச்சி)

இரணைமடு குடிநீர்த் திட்டத்தால் நன்மைகளைவிட தீமைகளே அதிகம் விளையும் என்னும் அரசின் அபிவிருத்தித்திட்டங்கள் எல்லாவற்றுக்கும் பின்னால் ஏதோவொரு அரசியல் ஒளிந்து கொண்டிருக்கிறது. இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிநீர் விநியோகிக்கும் திட்டத்தின் பின்னாலும் அரசியல் உள்ளது. அரசின் இந்த நுண்அரசியல் ஆபத்தானது. இதனைச் சரியான முறையில் எதிர்கொள்ளாவிடில், குடிநீர்த்திட்டத்தின் நன்மைகளைவிடப் பாதிப்புகளையே நாம் அதிகம் எதிர்கொள்ள நேரிடும் என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் எச்சரித்திருக்கிறார்.

கிளிநொச்சி மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (08.04.2014) விவசாயிகளுக்கு நிலக்கடலை விதைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பிரதி விவசாயப் பணிப்பா

19 ஆம் பக்கம் பார்க்க

## யாழில் அதிகரிக்கும் வீதி விபத்துக்கள்

### தடுக்க யாழ். பொலிஸார் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த காலாண்டில் 11பாரிய விபத்துச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளதாக யாழ். போக்குவரத்துப் பொலிஸ் பொறுப்பதிகாரி கே. சமிந்த டி சில்வா தெரிவித்தார்.

மரணங்களை ஏற்படுத்திய 11 பாரிய விபத்துக்களும், சாதாரண காயங்களை ஏற்படுத்திய 24விபத்துக்களும், 38 சிறிய விபத்துக்களும் இடம் பெற்றுள்ளன. அத்துடன் பாரிய சேதங்களை ஏற்படுத்திய 4விபத்துக்களும் பதிவாகியுள்ளதுடன் 2013ஆம் ஆண்டின் முதற காலாண்டில் 12 பாரிய விபத்துக்

19 ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியுடன் பாக். தளபதி சந்திப்பு

பாக்கிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ரஷாட்மவிற்கும் மகிந்தராஜபக்ஷவிற்குமான சந்திப்பொன்று அலரி மாளிகையில் நேற்று பிற்பகல் நடைபெற்றது இச்சந்திப்பின்போது மூன்று தசாப்த கால கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தமைக்காக இராணுவத் தளபதி ஜனாதிபதிக்கு பாராட்டுத் தெரிவித்தார்.

இலங்கைக்கும் பாகிஸ்தா

19 ஆம் பக்கம் பார்க்க

## இலங்கைக்கு இராணுவ ஆலோசனை; இந்திய அதிகாரிகள் மீது வழக்கு

(புதுடில்லி)

வடக்கில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது இலங்கைப்படைகளுக்கு இராணுவ ஆலோசனை வழங்கிய இந்திய பாதுகாப்புதுறை அதிகாரிகளுக்கு எதிராக வழங்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி இந்திய அதிகாரிகள் மீது விசாரணை நடாத்துவதற்கு விசாரணைக்குழு ஒன்றை அமைக்கவேண்டும் என்று கோரியே புதுடில்லியில் உள்ள சுப்ரீம் கோட்டில்

19 ஆம் பக்கம் பார்க்க



வெற்றிக்கிண்ணத்தை வசப்படுத்திய வீரர்களுக்கு ஜனாதிபதி கைலாகு கொடுத்து வாழ்த்துத்தெரிவிக்கும்போது....



## அரசின் அணுகுமுறையே அபிப்பிராயத்தைக் கெடுத்தது

### முன்னாள் அமெரிக்க தூதுவர் பற்றீசியா

(கொழும்பு)

அரசின் தவறான செயற்பாடுகளே இலங்கை தொடர்பாக தவறான சமிக்ஞைகளை சர்வதேசத்துக்கு வழங்கிக்கொண்டிருக்கிறது என்று இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் பற்றீசியாபட்டினிஸ் தெரிவித்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் நாடு திரும்ப விரும்பாமைக்கு இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகளே காரணம் என்றும் இலங்கைக்கான முன்னாள் அமெரிக்க தூதுவர் பெட்ரீசியா ஏபுட்டினிஸ;(Patricia A. Butenis), இலங்கை அரசாங்கத்திடம் தெரிவித்திருந்ததாக விக்கிலீக்ஸ் மேலும் தெரிவித்துள்ளது.

19 ஆம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாண பல்கலைக்கழக விளையாட்டுத்துறையினர் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத் துறையின் வீர, வீராங்கனைகள் 14 பேர் இன்று கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இலங்கை பல்கலைக்கழக விளையாட்டுச் சங்கத்தால் நடத்தப்படவுள்ள சிறந்த வீர, வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் வைத்தே இவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

2012, 2013 ஆம் ஆண்டுக்காக நடைபெறும் கௌரவிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசநாயக் காவும் சிறப்பு விருந்தினராக உயர் கல்வி அமைச்சின பிரதி அமைச்சர் நண்டிமித்ரா எக்கநாயக்காவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

2012 ஆம் ஆண்டுக்கான சிறந்த வீர, வீராங்கனைகளாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கே..ஜங்கரன் (கூடைப்பந்தாட்டம், தடகளம்), இ.ஜெயரூபன் (வளைகோலாட்டம் - எல்லே), ரி.ரிரோன் கொடுதோர், எஸ்.ஞானரூபன், பி.பி. சிறின்டெசிலன் (உதைபந்தாட்டம்), வி. நிசாந் (தடகளம்), பி.கிருஸ்ணகுமார் (பழுத்தூக்கல்) ஆகியவற்றில் ஏழு பேரும் - 2013 ஆம் ஆண்டுக்காக எஸ். ஞானரூபன், பி.பி.சிறின்டெசிலன், சி.மயூரன் (உதைபந்தாட்டம்), இ.ஜெயரூபன் (வளைகோலாட்டம் - தடகளம்), என். மினோசினி (கூடைப்பந்தாட்டம்), டி.கே.டிசநாயக்கா, கே.கிருஸ்ணபிரியா (எல்லே), என்.ஜனார்த்தனன், எஸ்.ஜயதி, எஸ். பிரதாப் (வளைகோலாட்டம்) ஆகியவற்றில் 10 பேரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

# "மகாபொல" புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின் ஏற்பாட்டில் 2011/2012 ஆம் ஆண்டு கல்வியாண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான மகாபொல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி முற்பகல் 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் புலமைப்பரிசு பெறும் மாணவர்கள் காலை 8.15 மணிக்கு மாவட்ட செயலகத்திற்கு வருகைதரவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுக்கான அழைப்புக்கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

# அபிவிருத்தித் திட்டம் தயாரிப்பு

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் மக்கள் பங்கேற்பு அபிவிருத்தித் திட்டம் தயாரிக்கும் நடவடிக்கை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் ம.ஜெயகாந்தன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டத்தின் இறுதிக்கட்ட கலந்துரையாடல் அனலைதீவு வடக்கு ஜே/37, அனலைதீவு தெற்கு ஜே/38 கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு நாளை மறுதினம் பிற்பகல் 6 மணிக்கு பிரதேசசபை உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இறுதியாக 12 ஆம் திகதி சனிக்கிழமை எழுவைதீவு ஜே/39 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு பிற்பகல் 3 மணிக்கு எழுவைதீவு பொது நோக்கு மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

# விபத்து குறித்த செயலமர்வுகள் அடுத்த தவணையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

விபத்துக் குறித்து பாடசாலை மாணவர்களுக்கான செயலமர்வுகள் அடுத்த தவணை ஆரம்பமானதும் இடம்பெறும் என யாழ். மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி சமிருத டி.சில்வா தெரிவித்தார்.

கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் இருந்து பாடசாலை மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கென பயிற்சிகள் அளிக்கப்பட்ட பிரிவினர்களால் வீதி விபத்துக்கள் செயல்முறையாக செய்து காண்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அடுத்த அடுத்த தவணை ஆரம்பித்ததும் மாணவர்களுக்கு விபத்துச் செயன்முறை செய்து காண்பிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# குருபூசைதினம்

யோகர் சுவாமிகளின் 50 ஆவது குருபூசைத் தினம் நாளை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலும், யோகர் சுவாமிகின் சமாதிக் கோயிலிலும் நடைபெறவுள்ளது.

நாளை காலை 8 மணிக்கு நல்லூர் தேரடியில் இருந்து ஆரம்பமாகும் யாத்திரை பருத்தித்துறை வீதி, கச்சேரி, நல்லூர் வீதியூடாக ஸ்ரான்லி கல்லூரியைக் கடந்து மாம்பழம் சந்தியூடாக சமாதிக் கோயிலைச் சென்றடையவுள்ளது.

இதனைத் தொடர்ந்து கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திலும், யோகர் சுவாமிகளது சமாதிக்கோயிலிலும் நடைபெறவுள்ள குருபூசையிலும், மகேஸ்வரபூசையிலும் பக்தர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எஸ்.பி)

# சடலம் ஒப்படைப்பு

யாழ்.நகரப்பகுதியில் நஞ்சருந்தி உயிரிழந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையின் சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முதலாம் குறுக்கு வீதி பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் டினோஜன் (வயது - 27) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு நஞ்சருந்தி உயிரிழந்துள்ளார் என்று யாழ்.போதானா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (பா)

# டெங்குத் தொற்றுக்கு இலக்கானவர் யாழ்.வைத்தியசாலையில் அனுமதி

யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து நேற்று ஒருவர் டெங்குத் தொற்றிற்கு இலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக வைத்தியசாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்சமயம் இந்நோயின் தாக்கம் மேலும் அதிகரிக்கக்கூடிய சூழல் தென்படுவதாகவும் சுகாதாரப்பகுதியினர் எச்சரித்துள்ளனர்.

எனவே டெங்கு நோயைப் பரப்பவல்ல நுளம்புகள் பெருகுவதற்கு ஏதுவான இடங்களை சிரமதானம் மூலம் சுத்தமாக வைத்திருந்து இந்த நோயின் தாக்கத்தைக் குறைக்க முடியும் என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

சிறுவிளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக்**

*றீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக்; பொலித்தீன், என்பன விலைக்கு வாங்கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3376)

ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1049

திகதி 07.04.2014

வெற்றி எண்கள்: 19 27 47 64 — ஆங்கில எழுத்து: X

ஜக்பொட் பரிசு ரூ. 2,64,48,880/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
| --- | --- | --- | --- |
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால | 0 | 2,64,48,880/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 5 | 50,000/= | ரூ. 2,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 267 | 1,000/= | ரூ. 2,67,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 477 | 1,000/= | ரூ. 4,77,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11770 | 60/= | ரூ. 7,06,200/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6025 | 40/= | ரூ. 2,41,000/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 155288 | 20/= | ரூ. 31,05,760/= |
| ஆங்கில எழுத்து | 22677 | 20/= | ரூ. 4,53,540/= |
| | | மொத்தம் ரூ. | 65,00,500/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 8 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
| --- | --- |
| குருநாகல் | 606047930-2-12 |
| திருக்கோணாமலை | 606053910-4-34 |
| கேகாலை | 606053196-3-43 |
| அம்பாறை | 606054391-0-00 |
| கொழும்பு | 606040494-5-25 |
| கொழும்பு | 606052110-0-10 |
| மாத்தளை | 606044963-6-06 |
| இரத்தினபுரி | 606043784-5-25 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 69,00,500/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 26,751,960/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.04.10 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3388)

நாளை ஆரம்பமாகிறது

திருமறைக்கலா மன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகை

வேள்வித் திருமகன்

(திருப்பாடுகளின் காட்சி)

காலம் : ஏப்ரல் 10, 11, 12, 13 - 2014

(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு) நான்கு நாட்களுக்கு

நேரம்: மாலை 6.45 மணி (வெள்ளிக்கிழமை மட்டும் மாலை 7.30 மணி)

இடம்: திருமறைக்கலாமன்ற அரங்கு.

பார்வையாளர்கள் ஆசனங்களுக்கான பதிவுகளை யாழ்.திருமறைக்கலாமன்ற அலுவலகத்தில் மேற்கொள்ளலாம்.

இறைமகனின் பாடுகளின் பயணத்தில் இணைந்திட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238,பிரதான வீதி யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2393

(C/3387)

- திருமறைக்கலா மன்றம்

# திருட்டு முயற்சி தோல்வி

(சாவகச்சேரி)

சிவில் பாதுகாப்புக் குழுத்தலைவர் ஒருவரின் வீட்டில் நேற்று அதிகாலை இடம்பெற்ற திருட்டு முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடமியன் கிராம சிவில் பாதுகாப்பு குழுத்தலைவரின் வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன் இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை 3 மணியளவில் வீட்டின் ஜன்னல் திறாங்கை உடைத்து திருடர்கள் உள்நுழைய முற்பட்ட வேளை வீட்டில் இந்தவர்கள் சத்தம் கேட்டு கூக்குரலிட்டதை அடுத்து திருடர்கள் தப்பியோடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக குறித்த சிவில் பாதுகாப்புக் குழுத்தலைவர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தப்பியோடிய குறித்த திருடர்கள் குறித்த வீட்டிற்கு அயலில் உள்ள வயல் வெளியில் காயவைத்த 5 கிலோ செத்தல் மிளகாயை திருடிக் கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (130)

# சுதந்திரமான மகிழ்ச்சியான வாழ்வுவாழ

# மும்மொழிக் கற்கைநெறி வழிவகுக்கும்



## நல்லை ஆதீன குரு முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மக்கள் மும்மொழிகளையும் திறம்படக் கற்று நாட்டில் சுதந்திரமான, மகிழ்ச்சியான நல்வாழ்வை வாழ வடமாகாண ஆளுநர் செயலகத்தின் இந்த மும்மொழிக் கற்கை நெறித் திட்டம் வழிவகுக்கும் என நல்லை ஆதீனக் குரு முதல்வூர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கோப்பாய் கல்வியியல் கல்லூரியில் இடம்பெற்ற மும்மொழிக் கற்கை நெறியின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு ஆசியுரை நிகழ்த்துகையிலேயே சுவாமிகள் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இனி வரும் காலங்களில் தனது மனித வாழ்க்கையில் முன்னேற்றமடைய மும்மொழிகளையும் கற்க வேண்டிய நிலை இருக்கின்றது. இது மாணவர்களானாலும் சரி பெரியவர்கள், ஆசிரியர்கள், அரச ஊழியர்களாலும் இம் மும்மொழிகளைக் கற்றுத் தேர்ந்தால் சிறப்பான, மகிழ்வான, சுதந்திரமான வாழ்வை நோக்கிச் செல்லக்கூடியதாக இருக்கம்.

இது மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கான படிக்கட்டுக்களாகவே இருக்கின்றன. இதில் நாமும், எமது சிறார்களும் கலந்து கொள்ள வேண்டும். அதன் மூலம், மும் மொழிகளிலும் சரளமாகப்பேச, வாசிக்க, எழுத கற்றுக் கொள்ளவேண்டும். இதன் மூலம் தான் இனங்களுக்கிடையிலான நல்லுறவு வளம் பெறும். இம் மொழிக் கற்கையை முன்னெடுக்கும் வடமாகாண ஆளுநர் செயலகத்திற்கு பாராட்டுக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார். (இ)



அருணோதயக்கல்லூரியில் இருந்து இவ்வருடம் இடமாற்றம் பெற்றுச்சென்ற 17 ஆசிரியர்க ளுக்கான பிரிவுபசார விழா கல்லூரி அதிபர் நா.கேதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர் குழுவினரைக் காணலாம். (63)

# அபிவிருத்திச் சங்கத்தின் புதியநிர்வாகத் தெரிவு

யாழ்.மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய அபிவிருத்திச் சங்கக் கூட்டம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் அதிபர் வே.கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக வே.கந்தசாமி, உபதலைவராக செல்வி.வி.நாகம்மா, செயலாளராக திருமதி செ.சுதாசினி, பொருளாளராக க.சுரேஸ்கரன், மற்றும் ச.சிவநாவலன், கிருஷ்ணமூர்த்தி, இராஜரட்ணம், திருமதி சுரேந்திரா ஆகியோர் உள்ளடங்கிய ஆசிரியர் குழாமும் தெரிவு செய்யப்பட்டது.

அத்துடன் பெற்றோர் தரப்பில் பாலசுப்பிரமணியமும், திருமதி இ.சிவனேஸ்வரியும், பழைய மாணவர் தரப்பில் வ.மகாலிங்கம், சோ.பாலச்சந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை இப்பாடசாலையில் பரிசளிப்பு விழாவை நடாத்துவது குறித்தும் ஆராயப்பட்டதுடன் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. இதில் சோ.பாலச்சந்திரன், தேவரஞ்சினி, சந்திரவதினி, அ.பற்குணநாதன் ஆகியோர் குழுவில் அங்கத்தவராகத் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

# வற்றாப்பளை கண்ணகி அம்மனின் பங்குனித்திங்கள் மஞ்சத் திருவிழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தின் கடைசி பங்குனித்திங்கள் மஞ்சத் திருவிழா வெகுசிறப்பாக இடம்பெற்றுள்ளது.

வற்றாப்பளை ஆலய பிரதம குருக்கள் சிவகாந்தக் குருக்களினால் மூலஸ்தானம் வசந்த மண்டப பூஜைகள் இடம்பெற்று மங்கள இசை வாத்தியத்துடன் எம்பெருமான் உள்வீதி வலம் வந்து மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்ட மஞ்சள் தேர் பவனியில் அடியார்களுக்கு அருள் பாலித்த வண்ணம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் வெளி வீதி வழியாக அடியார்களினால் இழுத்து வரப்பட அடியார்களினால் ஆயிரக்கனக்கான சிதறு தேங்காய் உடைத்து வரதூக்குக் காவடி பாற்செம்பு அங்கப் பிரதட்சனம் போன்ற நேர்த்திக்கடன்களும் செய்யப்பட்டு 09 ஐயர்களினால் சம நேரத்தில் பூஜைகளும் அடியார்களுக்கான அர்ச்சனைகளும் இடம்பெற்றுள்ளமையும் ஏராளமான அடியார்கள் கலந்து அருள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

## திருப்பாடுகளின் காட்சி நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் தயாரித்து வழங்கும் தவக்கால ஆற்றுகை வேள்வித் திருமகன் திருப்பாடுகளின் காட்சி நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 11, 12, 13ஆம் திகதிகளில் மாலை 6.45 மணிக்கு 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கு திருமறைக்கலாமன்ற அரங்கில் நடைபெறவுள்ளது.

# "உங்களுக்குச் சிங்கள டொக்ரர்மார் தேவை; சிங்கள பிரதேச செயலர்தான் வேண்டாமா..."




'வடக்கிலே உள்ள சில பிரதேச செயலகங்களுக்குச் சிங்களப் பிரதேச செயலர்கள் நியமனம் செய்யப்படவுள்ளனர்' என்றொரு செய்தி சில மாதங்களுக்கு முன்பு வந்திருந்ததல்லவா!

அந்தச் செய்தியைப் பார்த்த பெரும்பாலான தமிழர்கள் பதறியடித்தார்கள்.

'தமிழ்ப்பகுதியில் சிங்கப் பிரதேச செயலர்களா?' என்று கொதித்தவர்களும் உண்டு.

'இது ஒரு திட்டமிட்ட சதி' என்று சினந்தனர் சிலர்.

'சிங்களக் குடியேற்றங்களைத் தமிழ்ப்பகுதிகளில் செய்வதற்கு அரசாங்கம் போட்டுள்ள திட்டம் இது' என்று பொங்கினர் பலர்.

'ஆமிக்குக் காணி பிடிக்க வசதியாகவே இந்தச் சிங்களப் பிரதேச செயலர்கள்' என்றனர் வேறு சிலர்.

இப்படியே ஆளாளுக்கு ஏகப்பட்ட கண்டுபிடிப்புகளைச் செய்து அறிக்கைகளையும் வெளியிட்டார்கள்.

இதில் என்ன பிழை என்று நீங்கள் கேட்கலாம்.

'தமிழ்ப்பகுதிகளில் தமிழர்கள்தான் வேலை செய்ய வேணும். ஒரு சிங்களப் பயல் கூட இங்கே தலை வைக்க முடியாது. தமிழரின் சுதந்திர பூமியில் அந்நியருக்கு என்ன வேலை? அப்படி எல்லை மீறிக் காலை வைப்பவனின் தலையைக் கொய்வோம்...' என்று நீங்கள் வீரபாண்டிய கட்டபொம்மன் பாணியில் பொங்கியெழவும் கூடும்.

தமிழர் என்றால் இப்படித்தான். இரத்தக் கொதிப்பு அதிகமானவர்கள்.

சாதாரணமான மேசன், தச்சு வேலைக்கே [இதெல்லாம் கூலிவேலைகள்] வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வருகின்ற சிங்களவர்களைக் கண்டு முகத்தைச் சுளித்துக்கொள்கிறோம். மன்னிக்கவும். அவர்களைக் கண்டவுடனேயே தன்பாட்டில் முகம் சுளித்துக் கொள்கிறது.

அப்படியிருக்கும்போது பிரதேச செயலர் 'ரேஞ்'சுக்கு அதிகாரிகள் வாறதெண்டால் தாங்க முடியுமா? அதை நம் இதயம்தான் தாங்குமா?

தலைச் சுமையாக சுமந்து மேசை, கதிரை, கட்டில், உடுப்புக் கொழுவும் கங்கர், உடுபுடவைகள் என்று ஊர்ஊராக அலைந்து திரிகிற ஏழைச் சிங்களவர்களையே 'வேவுக்காரர்கள்' என்று இன்னும் எண்ணிக் கொண்டிருப்பவர்களல்லவா!

தமிழர்கள் இப்பிடிச் சிங்களவர்களை வெறுப்பதற்கும் சந்தேகப்படுவதற்கும் ஒடுக்கப்படுவதும் படைத்தரப்பினால் பாதிக்கப்படுவதுமே காரணம் என்று நீங்கள் சொல்லக்கூடும்.

ஆனால், அதை அப்படியே நாம் ஏற்க முடியுமா?

தமிழர்களைப் பொறுத்தவரையில் தங்களுடைய மடியில் யாரும் கை வைப்பதை விரும்பமாட்டார்கள். ஆனால், மற்றவர்களின் மடியில் மட்டுமல்ல, பறியிலும் தாராளமாகக் கைபோடுவார்கள். கையைப் போடுவது மட்டுமல்ல, மடையையே பரவிவிடுவார்கள்.

போர் நடந்த காலத்தில் ஒரு சிங்களவரோ முஸ்லிகளோ தமிழ்ப்பகுதிகளுக்குள் தலையைக் காட்டவே முடியாது. ஆனால், இலட்சக்கணக்கான தமிழர்கள் புலிகளுக்கே தண்ணியைக் காட்டிவிட்டு, கொழும்பு, கண்டி, மாத்தளை, புத்தளம், நீர்கொழும்பு என்று எல்லா இடங்களிலும் காணி வாங்கிக் குடும்பமாகவே குடியேறிக் கடை வாங்கித் தொழில் செய்தார்கள்.

இது மட்டுமா? வெளிநாடுகளில் இருக்கின்ற பெரும்பாலான புலம்பெயர்ந்த 'நாட்டுப்பற்றாளர்கள்' 'தேசபிதாக்கள்' எல்லாம் தங்களின் தாய், தந்தையரையும் அண்ணன், தம்பி, அக்கா, தங்கைகளையும் கூடப் புலிகளுக்குக் காசடித்துச் சிங்களப் பகுதிகளிலேயே கொண்டு போய்க்குடியேற்றினார்கள்.

சண்டை உக்கிரமாக நடந்து கொண்டிருந்த நாட்களில்தான் நூற்றுக்கு எண்பது வீதமான ஆட்கள் கொழும்பிலே 'பிளாட்' வாங்கினார்கள்.

இதுக்கெல்லாம் என்ன 'ஞாயம்' என்று எனக்குத் தெரியாது. உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்கள்.

நாங்கள் எங்கயும் எப்பிடியும் நடந்து கொள்வோம். நீங்கள் யாரும் அப்பிடி நடக்க ஏலாது' என்பதே தமிழரின் பண்பாடு, சிந்தனை, அறிவு, நியாயம்....எல்லாம்.

இப்படிச் சிந்திக்கின்ற தமிழ்ப் பெருங்குடிகள் தங்கள் தாயகத்தைத் 'தலிபான்களின் புனித பூமி'யைப்போல வைச்சுக்கொண்டு, மற்றவர்களின் இடங்களில் தாராளமாகக் கழிவைக் கொட்டலாம் என்று நினைக்கிறார்கள்.

தன்னுடைய மனைவி பத்தினியாக இருக்க வேணும். மற்றவனின் மனைவி விபசாரியாக வாழவேணும் என்றமாதிரித்தான்.

சரி, இதைப்பற்றியெல்லாம் சொல்லி என்ன பயன்? இப்படியான நியாயங் களோடு தான் தமிழர்கள் உலகமெல்லாம் வாழ்கிறார்கள்.

நாலு இடத்துக்குப் போய், நாலு பேரைப் பார்த்து நாலு விசயங்களைப் படித்தாலென்ன, வயசு ஏறிப் பழுத்து அனுபவங்கள் வாய்த்தால் என்ன? ஒரு மாற்றமும் கிடையாது. மண்ணாங்கட்டி கூட தண்ணீர் பட ஒரு மாதிரியும் நெருப்பில சுட இன்னொரு மாதிரியும் மாறிப் பயன்தரும். தமிழர்களோ...!

இறுதியாக ஒரு குட்டிச் செய்தி – இப்படித் தமிழ்ப்பகுதிகளுக்கு சிங்களப்பிரதேச செயலர்களைப் போடுவதாகச் செய்தி வந்தபோது, ஒரு தமிழ் எம்.பி ஜனாதிபதியிடம் கேட்டார் "தமிழ்ப்பகுதிகளுக்குச் சிங்களப் பிரதேச செயலர்களை அனுப்பினால்... அங்க மக்கள் குழம்புவார்கள்... அதைக் கொஞ்சம் தவிர்த்தால் நல்லது..." என்று.

இதற்கு ஜனாதிபதி சொன்ன பதில் – "தமிழ்ப்பகுதிகளுக்குச் சிங்கள டொக்ரர் மார் தேவை,சிங்கள பிரதேச செயலர்தான் வேண்டாமா..."

"ஙே" என்று நின்றிருந்தாராம் தமிழ் எம்.பி.

உற்சாகம்தான் மனிதனைத் தூண்டி வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. - ஹில்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## "மற்றவர்கள் எல்லாம் வெங்கிணாந்திகள்"

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், தமிழ்த் தேசிய ஊடகங்களும், தமிழ்த் தேசிய எழுத்தாளர்களும், தமிழ்த் தேசிய தேத்தண்ணிக் கடை அரசியல் ஆய்வாளர்களும், ∴ப்ரீ பீரியட்டில் அரசியல் கொறிக்கும் தமிழ்த் தேசிய ஆசிரியர்களும், தமிழ்த் தேசிய நினைவில் இந்த வெக்கைக்குத் துண்டு விரித்துப் படுப்பவர்களும் கூட இலங்கை அரசாங்கத்தை நோக்கி கடுஞ் சவால்களையும் எச்சரிக்கைகளையும் எப்போதும் விட்டபடியே இருக்கிறார்கள்.

ஜெனிவாக் கொண்டாட்டங்கள் ஓய்ந்தபிற்பாடு இவற்றின் தீவிரம் கொஞ்சம் அதிகரித்திருப்பதாகப் படுகிறது. அதற்கு முன்னர், சர்வதேசப் பொறிக்குள் மாட்டி முழிபிதுங்கக் காட்சியளிக்கும் ஒரு பரிதாபத்துக்குரிய பிராணியாகத்தான் இலங்கை அரசு இவர்கள் சித்தரிப்பில் தெரிந்தது.

ஜெனிவா முடிந்ததன் பின்னர், அரசுக்கு விடப்படும் எச்சரிக்கைகளும் சவால்களும் நேரடியாகவே இப்போது பொறிபறக்கும் வண்ணம் ஊடகங்களை நிறைக்கின்றன. ஜெனிவாக்குப் பிறகு தமிழ்மக்கள் சற்று சோர்ந்து போனார்களோ என்ற கவலை உண்டாகிக் கோமான்கள் களத்தில் முழுமூச்சாய் இறங்கியிருப்பதாகத் தெரிகிறது.

சகோதரப் படுகொலைகள் நடந்த காலத்தில் எழுதப்பட்ட இளவாலை விஜயேந்திரன் கவிதை ஒன்று, சக தோழனையும் குறிவைக்கச் சொல்லி கடைசியில் "துப்பாக்கி சூடாறிவிடக் கூடாது பாரும்" என்று முடியும். அரச எதிர்ப்பும் சூடாறிவிடக் கூடாது என்ற பதகளிப்பு மேற்சொன்ன தமிழ்த் தேசிய முரசறைவோர்களிடம் தெரிகிறது.

"வடக்கில் சுற்றிவளைப்பு, கைதுகள் உடன் நிறுத்தப்பட வேண்டும்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசைக் கேட்டிருப்பதாக நேற்றைய பத்திரிகை முன்பக்கச் செய்தியொன்று கூறுகிறது.

அப்படி அரசு நிறுத்தாவிட்டால், இவர்களது அடுத்த நடவடிக்கை என்னவென்று வழக்கம்போல எந்தக் குறிப்பும் இல்லை. எம்பி பதவிகளை உதறிவிட்டு பாராளுமன்றத்திலிருந்து வெளியேறுவார்களா அல்லது இந்த அரசு தரும் சம்பளங்கள் சலுகைகளைத் தன்னும் விட்டெறிந்து விடுவோம் என்கிறார்களா என்பதற்கு எந்த க்ளூவும் கிடைக்கவில்லை.

அரசுக்கெதிராக ஆயுதமேந்திப் போராடிய புலிகளால் உருவாக்கப்பட்ட இந்தக் கூட்டமைப்பு, நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயத்தில் அரசுக்கு "உடன் நிறுத்து" எச்சரிக்கை விடுத்தவுடன் அரசு பின்வாங்கிவிடும் என்று மக்களை நம்பச் சொல்கிறார்களா?

இவர்களது மிரட்டலின் அதிகபட்ச அளவு, "இலங்கை அரசு எதிர்காலத்தில் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்" என்று சொல்வதுடன் முடிகிறது. அமெரிக்கா பார்த்துக்கொள்ளும் என்கிறார்களா அல்லது பழையபடி ஆயுதமேந்த வேண்டிவரும் என்கிறார்களா? என்னமாதிரியான நெருக்கடிகள் என்பதைக் கூடச் சொல்லத் தெரியாமல் என்ன கண்டறியாத மிரட்டல் வேண்டிக்கிடக்கிறது!

"குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் வடக்கில் மட்டுமா மறைந்திருக்கிறார்கள்" என்றும் இடையில் ஒரு மடக்கல் கேள்வி. அதாவது வடக்கில் தேடுவது போல் ஏன் தெற்கில் தேடவில்லை என்று அப்புக்காத்துக்கள் மடக்குகிறார்களாம்!

யோசித்துப் பாருங்கள். அரசுக்கெதிராக யுத்தம் புரிந்தவர்கள் யார்? இப்போதும் மீண்டும் போர் வெடிக்கும் என்று பேச்சுக்குப் பேச்சு மிரட்டிக் கொண்டிருப்பவர்கள் யார்? மீண்டும் இயக்கம் கட்ட முயற்சிகள் நடப்பதாக அரசுக்குத் தகவல் கிடைப்பதாக வையுங்கள். தேடப்போன இடத்தில் பொலிஸ்காரரைச் சுட்டுவிட்டு ஒருவர் தப்பிவிட்டார் என்று அரசுதான் சொல்கிறது என்றும் வைத்துக்கொள்ளுங்கள்.

தமிழ்ப் பெருங்குடிகளான நமது நினைப்புத்தான் என்ன? அரசே எங்கள் வீரத்திற்கு முன்னால் வெங்கிணாந்தித்தனமாக இருந்துகொள் என்று கேட்டுக்கொள்வதா? இதற்கெல்லாம் சர்வதேசம் இலங்கை அரசாங்கத்தை மிரட்டும் என்று பாமரத்தனமாக நம்புவதா?

- ஆசிரியர்.

# மாவட்ட ரீதியில் கல்வி நிலை
# கிளிநொச்சிக்கு இறுதி இடம்

## பரீட்சைப்பெறுபேறு குறிகாட்டி

கடந்த ஆண்டு கல்விப்பொதுத் தராதர-சாதாரணதரப்.பரீட்சையில் எட்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டிருந்த வடக்கு மாகாணம் இவ்வருடம் ஆறாவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக, இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது. கல்வியால் உயர்ந்திருந்த வடக்கு மாகாணம் கீழ் நிலைக்குச் சென்று மீண்டும் உயர்ச்சிபெறத் தொடங்கியிருக்கின்றது. இதற்காக உழைத்த அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். வடக்கு மாகாணத்தில் 2013ஆம் ஆண்டு 15820 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அவர்களில் 131 மாணவர்கள் ஒன்பது பாடங்களிலும் அதிவிசேட சித்திபெற்றுள்ளனர். அதே வேளை 356 மாணவர்கள் எந்தப் பாடத்திலும் சித்திபெறவில்லை.

அகில இலங்கை ரீதியில் வவுனியா மாவட்டம் மூன்றாம் இடத்திலும், மன்னார் மாவட்டம் நான்காம் இடத்திலும் ,யாழ் மாவட்டம் ஆறாம் இடத்திலும், முல்லைத்தீவு மாவட்டம் இருபத்துநான்காம் இடத்திலும், கிளிநொச்சி மாவட்டம் இருப்தைந்தாம் இடத்திலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. பரீட்சைக்குத் தோற்றியோரில் 5838 மாணவர்கள் உயர்தரம் கற்பதற்குத் தகுதியற்றவர்களாக உள்ளனர். இவர்களின் பெற்றோர் மிகுந்த அக்கறையுடன், தொழிற்பட்டு இரண்டாவது தடவையில் அவர்கள் சித்திபெறுவதற்கு வழிகாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம்.

அது மட்டுமன்றி பிள்ளைகளின் ஒழுக்க நடைமுறைகளில் ஆசிரியர்களோடு இணைந்து பெற்றோரும் செயற்படுவது பெறுபேறுகள் அதிகரிப்பதற்கு உந்துசக்தியாக இருக்கும். எத்தனையோ துன்பங்களையும் துயரங்களையும் சுமந்து நிற்கும் தமிழர் பிரதேசங்களில் கல்வியை அழிந்துவிடாமல் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு செயற்படவேண்டுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

# அத்தியாவசியப் பொருட்களின் விலைக்குறைப்பு அவசியமானது

## கோருகிறது ஐக்கிய தேசியக்கட்சி

(கொழும்பு)

புத்தாண்டு நெருங்கிக் கொண்டிருக்கின்ற இவ் வேளையில் அத்தியாவசியப்பொருட்களின் விலைக் குறைப்பு என்பது அவசியமானதாக வுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

எனவே, பாதைகளை, கட்டுமானங்களை அபிவிருத்தி செய்வதாகக் கூறும் அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை உடனடியாக குறைக்க வேண்டும்.

நடந்து முடிந்த மேல் மற்றும் தென் மாகாண சபைத் தேர்தலில் மக்கள் சிறந்த பதிலை அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளனர். யுத்த வெற்றி என்று கூறிக்கொண்டு 5 வருடத்திற்கு மேலாகவும் மக்களை ஏமாற்றிய அரசாங்கத்தின் சாயம் தற்போது வெளுக்கத் தொடங்கிவிட்டது. தேர்தல் முடிவுகள் தெளிவாக அதனைக் காட்டுகின்றது.நாம் அரசாங்கத்திற்கு ஒரு முக்கிய கோரிக்கையை விடுக்கின்றோம்.

புத்தாண்டு நெருங்கிக் கொண்டிருக்கின்ற இக் காலப்பகுதியில் மக்களின் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளையாவது குறைக்க வேண்டும்.

குறிப்பாக பருப்பு, கருவாடு, நெத்தலி, உருளைக்கிழங்கு, சீனி போன்ற பொருட்களின் விலையை உடனடியாகக் குறைக்க வேண்டும். இல்லையெனில் புதுவருடக் கொண்டாட்டங்களில் கூட ஈடுபட முடியாத அளவு மக்கள் பட்டினி கிடக்க நேரிடும். எனவே, அரசாங்கம் யோசித்து செயற்பட வேண்டும்.'தெயட்ட கிருல' கோஷம், யுத்த வெற்றி என்று மக்களை ஏமாற்றி இனி அரசாங்கத்தினால் மாயஜாலம் காட்ட முடியாது. மக்கள் இனியும் ஏமாறமாட்டார்கள்.

அரசாங்கத்தின் முகத்திரையை மக்கள் விரைவில் கிளித்தெறிவர். ஊவா மாகாணத் தேர்தல் அதனை பறைசாற்றும்.மேலும், எமது மே[illegible]ம் இம்முறை அம்பாறையில் நடைபெற உள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

# ரஜரட்ட பல்கலைக்கழகத்தில் 13மாணவர்கள் இடைநிறுத்தம்

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 13 மர்ணவர்களின் வகுப்புகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தின் மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டதாக்குதல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட உள்ளக விசாரணையின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.கடந்த மாதம் 29 ஆம் திகதி இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் காயமடைந்த 8 மாணவர்கள் மிஹிந்தலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.வகுப்புத் தடை விதிக்கப்பட்டவர்களுள் முகாமைத்துவ பீடம் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த மாணவர்கள் உள்ளடங்குவதாக ரஜரட்ட பல்கலை உபவேந்தர் ரஞ்சித் விஜயவர்தன தெரிவித்தார்.இதேவேளை, நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் சுமார் 503 மாணவர்களுக்கு பலவிதமான தண்டணைகள் விதிக்கப்பட்டுள்ளன.வகுப்புத் தடைகள், மாணவர் நிலையை நீக்குதல் உள்ளிட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் நஜித் இந்திக தெரிவித்துள்ளார்.

# யாழ்.மாவட்டத்தில் புகையிலை அறுவடை ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் புகையிலைச் செய்கையின் அறுவடைக் காலம் தற்போது ஆரம்பமாகியுள்ளது. இந்நிலையில், அறுவடை செய்யப்பட்ட புகையிலைகளை வாகனங்களில் எடுத்துச் சென்று உலரவைக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

புகையிலைச் செய்கை மேற்கொள்ளும் பகுதிகளான உடுவில், இணுவில், புத்தூர், வேலணை, புன்னாலைக்கட்டுவன், கோப்பாய், தீவகம், வடமராட்சி, கரணவாய், மாண்டான், கோண்டாவில், தெல்லிப்பழை, குப்பிளான், ஏழாலை, அளவெட்டி, குரும்பசிட்டி, கைதடி, நுணாவில், கொடிகாமம் ஆகிய பகுதிகளில் புகையிலைகள் மதில்களில் உலரவிடப்பட்டுள்ளன.

முன்னைய காலத்தில் தென் பகுதிக்கான பிரதான வியாபாரப் பொருளாக புகையிலையை யாழ். வர்த்தகர்கள் கொண்டு சென்று விற்பனை செய்ததுடன், அதிகளவான இலாபத்தையும் பெற்றுவந்தனர். இருப்பினும், புகைத்தல் பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடை காரணமாக யாழ். வர்த்தகர்கள் வர்த்தக ரீதியில் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

மேலும், இருக்கின்ற சந்தை வாய்ப்புக்குத் தேவையான அளவு நிரம்பலை பேணும் வகையில் புகையிலைச் செய்கையாளர்கள் புகையிலைச் செய்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

# விடுதலைப் புலிகளை அழித்த ஊடகங்கள் 70

**வே.அர்ச்சுனன்**

சரத்பொன்சேகா சீனா சென்றவுடன் போரின் இறுதி நடவடிக்கைகளுக்கு கோத்தாபய ராஜபக்ஷ முழுப் பொறுப்பேற்றிருந்தார். ஆனால் இப்போரின் வெற்றிக்கு சரத்பொன்சேகாவே காரணமாக இருந்தார் என்று இன்றுவரைக்கும் பொன்சேகா வாதிட்டு வருகிறார். பொன்சேகா போரின் கதாநாயகனா? அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய கதாநாயகனா என்ற கேள்விகளுக்கு அப்பால் போர் முள்ளிவாய்க்காலுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது என்பதே இங்கு பிரதானமானதாகும்.

விடுதலைப் புலிகள் இரசாயன ஆயுதத்தை வைத்திருந்தார்கள் என்று படைத்தரப்பினர் குற்றம் சாட்டி இருந்த போதும் இந்த ஆயுதங்களை ஏன் புலிகள் பயன்படுத்தவில்லை என்ற கேள்வி உண்டு. அதாவது, விடுதலைப் புலிகள் 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கோட்டையைத் தாக்கியபோது அவர்கள் தாமே உருவாக்கிய "பசீலன்" என்ற இரண்டாயிரம் கிலோ நிறைகொண்ட குண்டைப் பயன்படுத்தினர். அக்குண்டின் அதிர்வால் கோட்டையில் இருந்த இராணுவம் தாமாகவே புறப்பட்டு மண்டைதீவிற்குச் சென்றது. இதனால் கோட்டை விடுதலைப் புலிகளின் வசமானது.அக்காலத்திலிருந்தே விடுதலைப் புலிகள் குண்டுகள் மற்றும் ஆயுதங்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டு வந்தனர்.

போராட்ட வரலாற்றில் இலங்கையில் பல விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்று பின்னர் அவை இல்லாமல் செய்யப்பட்ட போதிலும் எல்லா இயக்கங்களும் ஏதோ ஒரு விதத்தில் அரசாங்கத்திற்கு அக்காலப்பகுதியில் பெரும் நெருக்கடியை கொடுத்துக்கொண்டே இருந்தன. குறிப்பாக ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கமே அக்காலப்பகுதியில் குண்டுகளையும் மோட்டார் செல்களையும் தயாரிப்பதில் முன்னணியில் இருந்தது. இவர்களின் இச்செயற்பாடு காரணமாக அரசாங்கம் பெரும் அச்சத்துடனேயே இருந்தது.

இதைவிட ரெலோ இயக்கம் தாக்குதல்களை நடத்துவதில் தலைசிறந்து விளங்கியது. குறிப்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல், ரெயில் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பன அக்காலத்தில் சர்வதேச ஊடகங்களைப் பெரியளவில் கவர்ந்திருந்தன. ஈரோஸ் இயக்கத்தின் செயற்பாடுகள் குறிப்பாக தென்பகுதியை இலக்குவைத்ததாக இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் இந்த போராட்ட இயக்கங்கள் அனைத்தையும் இயங்கமுடியாமல் செய்துவிட்டு, புலிகள் தம்மை ஏகப் பிரதிநிதியாக வெளிப்படுத்திச் செயற்படத் தொடங்கினர். புலிகளின் இந்த ஏகப்பிரதிநிதித்துவம் பலதரப்பாலும் தொடர்ந்து கேள்விக்குள்ளாக்கப்பட்டே வந்தது. மிதவாதத் தலைவர்களில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆனந்தசங்கரி வெளிப்படையாகவே விடுதலைப் புலிகளின் ஏகப்பிரதிநிதித்துவத்தை எதிர்த்தார். இதன் காரணமாக புலிகளின் கடுமையான உத்தரவிற்கு இணங்க உடனடியாகவே கூட்டமைப்பிலிருந்து விலக்கப்பட்டார். தற்போது மீண்டும் ஆனந்தசங்கரி கூட்டமைப்பில் இணைக்கப்பட்டாலும், பல்வேறு விமர்சனங்களை வைத்தவாறும் எதிர்கொண்டவாறுமே அதில் இருந்து வருகிறார்.

உண்மையில் முள்ளிவாய்க்கால் முடிவுகள் எந்தளவு தூரம் தாக்கத்தை ஏற்படுத்தியதோ அவ்வாறே ஏனைய விடுதலைப் போராட்ட இயக்கங்கள் இல்லாமல் செய்யப்பட்டமை நமது மக்களின் விடுதலைப்பாதையில் பாதகமான தாக்கத்தை செலுத்தியதை எவருமே மறுக்கமுடியாது.

யுத்தம் இறுதிக்கட்டத்தை நெருங்கிய போது புலிகள் தம்மிடம் இருந்த உச்சவலுவான ஆயுதங்களை பாவித்து படையினருடன் மேலும் போரை நீடித்திருக்கலாம் என்று ஒரு தரப்பினர் தற்போதும் வாதிட்டு வருகின்றனர்.

ஆனால் முள்ளிவாய்க்கால் கள நிலைமை, தொடர்ந்து போரை நடத்தக் கூடிய சூழலை புலிகளுக்கு வழங்கவில்லை. ஒரு குறுகிய வட்டத்திற்குள் போர் முடக்கப்பட்டமை, மக்கள் உணவு குடிநீர் உட்பட எந்தவொரு அடிப்படை வசதிகளும் இன்றி அவலச்சாவை தொடர்ந்து சந்தித்துக் கொண்டிருந்தமை, தொடர்ச்சியாக மக்கள் இறந்துகொண்டிருந்தமை போன்ற பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் பொதுமக்கள் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் இருந்து தாமாகவே உடைத்துக்கொண்டு வெளியேறத் தொடங்கினர்.

இவ்வாறு தங்கள் கட்டுப்பாட்டில் இருந்து வெளியேறிக்கொண்டிருந்த மக்களை புலிகள் தடுத்து நிறுத்திய போதும் மக்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. புலிகளின் தடைகளை உடைத்துக்கொண்டு மக்கள் அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதி நோக்கி பெரியளவில் நகரத் தொடங்கினர். செல்லவேண்டாம் என்று கூறி சில இடங்களில் போராளிகள் பொதுமக்கள் மீது தாக்குதல்களையும் நடத்தினர். ஆனால் இந்த தாக்குதல்கள் எதனையும் பொருட்படுத்தாமல் மக்கள் படைக்கட்டுப்பாட்டுப் பகுதிக்கு தொடர்ந்து சென்றுகொண்டிருந்தனர்.

விடுதலைப் புலிகள், பொது மக்களை தடுப்பதா? அல்லது முன்னேறிவரும் இராணுவத்தைத் தடுப்பதா? என்ற குழப்பத்தில் திணறிக்கொண்டிருந்த போது படையினர் ஒரு சிறிய அவகாசத்தையோ இடைவெளியையோ புலிகளுக்கு கொடுக்காமல் புலிகளின் இறுதிப் பகுதியையும் கைப்பற்றும் நோக்கில் முள்ளிவாய்க்காலின் மையப்பகுதிக்குள் நுழையத் தொடங்கினர்.

புலிகள் தயாரித்த நீர்மூழ்கிக் கப்பல்கள், டோராப் படகுகள், தன்னியக்கத் துப்பாக்கிகள் என்பனவெல்லாம் தற்போது முல்லைத்தீவில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பார்வையிடுகின்றனர் மக்கள். சொந்தமாக இத்தனை ஆயுதத் தயாரிப்புகளும், கூடவே இரசாயன ஆயுதங்களையும் வைத்திருந்ததாக சொல்லப்பட்டபோதும் புலிகள் ஏன் இவற்றை பயன்படுத்தவில்லை என்ற கேள்வி எழுகிறது.

அதற்குரிய சூழல் புலிகளுக்கு இருக்கவில்லை என்பதே உண்மையாகும். இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இறுதிக்கட்டத்தில் இலங்கை அரசுக்கு அதிநவீன சற்றலைற் தொழிநுட்பங்கள் மற்றும் உளவறியும் விமானங்கள் என்பவற்றை வழங்கியிருந்தன. தற்கொலைப்படையை பிரபாகரன் வைத்திருந்த காரணத்தால் உலக நாடுகளால் எல்..ரி.ரி.ஈ ஓரங்கட்டப்பட்டது மட்டுமல்லாது பிரபாகரனின் தலைமைத்துவமும் சர்வதேசத்தால் மறுக்கப்பட்டது.

உண்மையில், கிட்டு உயிருடன் இருந்த பொழுதே புலிகள் இரசாயன ஆயுதங்களை இறக்குமதி செய்ததாகவும் ஒரு கதையுண்டு. இதில் எந்தளவு தூரம் உண்மையுள்ளது என்பது கேள்விக்குறிதான். கிட்டு என்ன செய்தார்? ஏன் இந்த விடயம் கேள்விக்குறியாக உள்ளது தொடர்பில் தொடர்ந்து பார்ப்போம்..

(தொடரும்)



# துயரம் தோய்ந்த மானிட இழிவு!

**டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து**

யுத்தம் விரிவடைந்ததை தொடர்ந்து எல்.ரீ.ரீ.ஈ அரசியல் பிரிவினரின் கடமைகளில் கடுமையான மாற்றம் ஏற்பட்டது. அரசியல் பிரிவு ஆட்சேர்ப்பை விரிவுபடுத்தி போராளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆரம்பக் கட்டத்தில் தீவிர உணர்வு சார்ந்த பிரச்சாரங்களில் தங்கியிருந்த ஆட்சேர்ப்பு இயக்கம் விரைவிலேயே கட்டாய ஆட்சேர்ப்பு மற்றும் கட்டாய இராணுவசேவை என சீரழிவுக்குள்ளானது.

எல்.ரீ.ரீ.ஈயின் அரசியல் பிரிவு அங்கத்தவர்கள் வீட்டுக்கு ஒரு வீரன் அல்லது வீராங்கனை என்கிற சொல்லாணையின் அடிப்படையில் இளைஞர்களை கட்டாய இராணுவ சேவையில் இணைப்பதில் முன்னணியில் நின்றார்கள். அளவுக்குமீறிய அழுத்தம் மற்றும் கொடுமையான நடவடிக்கைகள் இந்த கட்டாய ஆட்சேர்ப்பு இயக்கத்தில் பயன்படுத்தப்பட்டது.

நவம்பர் 2007இல் இடம்பெற்ற தமிழ்ச்செல்வனின் மரணத்தின் பின் உண்மையில் ஆட்சேர்ப்பு என்கிற பெயரில் நடைபெற்ற கட்டாய இராணுவ சேவைக்கு மொத்தப் பொறுப்பாளராக எழிலன் நியமிக்கப்பட்டார். 2008 - 2009ஆம் ஆண்டுகளில் எழிலன் மற்றும் பெண்கள் அரசியல் பிரிவின் தலைவரான தமிழினி ஆகியோர், இளம் ஆண்கள் பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்ததற்காக மோசமான பெயரினைப் பெற்றிருந்தார்கள்.

எல்.ரீ.ரீ.ஈயானது முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைத்துறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் முடக்கப்பட்டதும் அது தனது கட்டாய இராணுவ ஆட்சேர்ப்பை மிகவும் உயர்ந்த மட்டத்தில் விரிவுபடுத்தியது.

போரின் இந்த துயரமான கட்டத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள தமிழர்கள் யாவரும் வன்னி மண்ணின் துர்ப்பாக்கியசாலிகளாகவே கருதப்பட்டனர். எல்.ரீ.ரீ.ஈயின் அரசியல் பிரிவு, இழிந்த மட்டத்தில் உள்ள ஒன்றாக அனைவராலும் வெறுக்கப்பட்டது. இந்த ஆபத்தான வேளையில் எல்.ரீ.ரீ.ஈயின் அரசியல் பிரிவு மூன்று முக்கிய பணிகளில் ஈடுபட்டிருந்தது.


முதலாவதாக அரசியல் பிரிவு இளைஞர்களையும் பிள்ளைகளையும் தொடர்ந்தும் பெரும் எண்ணிக்கையில் கட்டாய ஆட்சேர்ப்புக்கு உட்படுத்தியது. அவர்கள் போதியளவு பயிற்சியோ அல்லது அனுபவமோ இல்லாமல் வெறும் பீரங்கிக் குண்டுக்கு போடப்படும் தீனியாக தூக்கி வீசப்பட்டார்கள். இரண்டாவதாக எல்.ரீ.ரீ.ஈயின் அரசியல் பிரிவு, பொதுமக்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தப்பிச் செல்ல முயற்சிப்பதை அடக்குமுறைகளைப் பயன்படுத்தி தடுத்தது. மூன்றாவதாக தப்பியோடும்போது பிடிபட்டவர்களுக்கு அரசியல் பிரிவு மனிதாபிமானமற்ற வகையில் கொடிய தண்டனைகளை வழங்கியது.

யுத்தம் முல்லைத்தீவு கரையோரமாக தீவிரமடைந்து வந்தபோது அதற்குள் அகப்பட்டிருந்த பொதுமக்கள் ஒரு துயரமான பணயக்கைதிகளின் நிலைக்கு ஆளானார்கள். தமிழர்களின் விடுதலைக்காக போராடுவதாக சொல்லிக் கொள்ளும் ஒரு இயக்கம் மிகவும் பலவீனமான ஒரு பகுதியினரை அடிமைகளாகப் பிடித்து வைத்து அவர்களை ஆபத்தில் சிக்கவைத்து துயரப் படுத்தியது. அந்த நேரத்தில் அது விரிவடைந்துள்ள துயரம் தோய்ந்த மனிதாபிமான பேரழிவாகும்.

இந்த எழுத்தாளர் தனது டெய்லி மிரர் பத்திரிகையின் பத்திக் கட்டுரைகளில் "எனது மக்களை போகவிடுங்கள்" என்ற கட்டுரையூடாக தொடர்ச்சியாக இதற்காக விண்ணப்பித்துக் கொண்டிருந்தார். இந்த வேண்டுகோள்கள் யாவும் எல்.ரீ.ரீ.ஈயின் செவிட்டுக் காதில் ஏறவேயில்லை மற்றும் அதன் பின் நடந்தவை யாவும் இப்போது சரித்திரம்.

# மக்களின் கோரிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்

## ஜனாதிபதி உத்தரவு



பொது மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் முக்கியத்துவம் கொடுத்து செயற்படுமாறும் மக்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளை அரசியல் தலையீடாக கருத வேண்டாம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமைச்சின் செயலாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவினால், சகல அமைச்சின் செயலாளர்களுக்கும் இந்த அறிவித்தல் கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் ஊடக பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட பொது மக்கள் பிரதிநிதிகளினால் அமைச்சர்களின் செயலாளர், அமைப்புக்கள் மற்றும் யாப்பு என்பன பிரதானிகளுக்கு அனுப்பப்படும் பொது மக்கள் கோரிக்கைகளை அரசியல் தலையீடாக கருத வேண்டாம் என்றும் கோரப்பட்டுள்ளது.

# பண்டிகைக்காலத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து கட்டுப்பாடுகள்

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

நாளை தொடக்கம் 25 ஆம் திகதி வரை இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

விசேடமாக மதுபோதையில் வாகனத்தை செலுத்துபவர்கள் குறித்து கூடிய கவனம் செலுத்தப்படும் எனக் குறிப்பிட்டார்.

இதுகுறித்த சுற்றிவளைப்புகள் தொடர்பாக ஏற்கனவே திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த வருடத்தில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் மாத்திரம் சுமார் 2 ஆயிரத்து 300 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்போது 2 ஆயிரத்து 250 உயிராபத்து மிக்க பாரிய வீதி வீபத்துக்கள் பதிவாகியுள்ளன

இதுதவிர, மொத்தமாக சுமார் 37 ஆயிரத்து 500 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாகவும், அவற்றில் பெரும்பாலானவை மதுபாவனையால் இடம்பெற்றவை என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மோசமான பகிடிவதைக்கு அடித்தளமிட்டவர்கள் யார்?

## விடை தருகிறார் உயர்கல்வி அமைச்சர்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் மோசமான பகிடிவதைகளுக்கு அடித்தளமிட்டவர்கள் ஜே.வி.பி.யும் மற்றும் புலிகள் அமைப்பினருமே என கண்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் உயர் தொழிநுட்ப நிறுவனங்கள் வீழ்ச்சியடைவதற்கு இந்த அமைப்புக்களே பொறுப்பு ஆகும்.

ஒக்ஸ்போட் போன்ற சிறந்த பல்கலைக்கழகங்களில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட முடியாமல் போனதற்கு, புலிகளும், ஜே.வி.பி.யுமே காரணம் ஆகும்.



தங்கள் அமைப்பிற்கு எதிராக இளைஞர்கள் எழுந்து விடக்கூடாது என்று இவர்கள் அவ தானமாக இருந்தார்கள். அவ்வாறு செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொணடனர். பிரபாகரனும், ஜே வி.பி.யும் பல்கலைக்கழக உபவேந் தர்களுக்கு தங்களது பெயர் விப ரங்களை அனுப்பி வைத்து அதன்படியே செயற்படுமாறு வலியுறுத்தினர் எனறார்.

# நெடியவன் குழு உறுப்பினர் நந்தகோபன் கைது

(கொழும்பு)

புலிகளின் நெடியவன் குழுவில் இரண்டாம் நிலை தலைவரும் வெளிநாட்டில் இயங்கிய வருமான கபிலன் அல்லது நந்தகோபன் ஈரானிய மற்றும் மலேஷிய அதிகாரிகளின் உதவியுடன் இலங்கை அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டாரென கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளின் சிரேஷ்ட தலைவரான நந்தகோபன் சரியாக ஒரு மாதத் துகது முன்னர் 2014 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் திகதி இலங்கைக்கு கொண்டுவரப்பட்டார்.

நெடியவனின் கட்டுப்பாட்டிலுள்ள வெளிநாட்டு புலிகள் வலையமைப்பின் பிரதித் தலைவர்களில் ஒருவராக நந்தகோபன் செயற்பட்டு வந்தார்.

தென் கிழக்காசியாவை தளமாகக் கொண்டு இவர் இயங்கினார். இவரது போலிக் கடவுச்சீட்டுடன் மலேசியாவிலிருந்து புறப்பட்டு தெஹ்ரான் வழியாக லண்டனுக்கு செல்லவிருந்தார்.

நந்தகோபன் தெஹ்ரானில் இருப்பதை தென்கிழக்காசிய தகவல் வாட்டாரமொன்று இலங்கைக்கு தெரியப்படுத்தியது.

இலங்கை கேட்டுகொண்டதால் ஈரானிய அதிகாரிகள் நந்தகோபனை தெஹ்ரான் விமான நிலையத்தில் தடுத்தனர். தொடர்ந்து பயணம் செய்ய அனுமதிக்கப்படாததனால் இவர் மலேஷியாவிலிருந்து திரும்பிப்போனார்.

கோலாலம்பூர் விமான நிலையத்தில் வந்து இறங்கிய இவரை மலேஷிய அதிகாரிகள் தடுத்துவைத்தனர். இதே சமயம் இலங்கை அதிகாரிகளின் நந்த் கோபன் தொடர்பாக மலேஷியா சென்று நடாத்திய பேச்சு வார்த்தையை தொடர்ந்து இலங்கை அதிகாரிகள் நந்தகோபனை கைதுசெய்து இலங்கைக்கு மார்ச் மாதம் 6 ஆம் திகதி கொண்டு வந்தனர்.

ஷெல் வீச்சினால் காயமடைந்த நந்தகோபான் ஊன்றுகோல் உதவியுடன் நடக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

# 12 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கம் கடத்தியவர் கைது

சட்டவிரோதமான முறையில் இலங்கையிலிருந்து இந்தியாவின் சென்னை நோக்கி தங்கம் கடத்திச் செல்ல முயன்ற நபர் ஒருவர் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

257 கிராம் நிறையுடைய தங்கக் கட்டிகள் 10 இந்நபரிடமிருந்து கைப்பற்றியதாக சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார். இவற்றின் பெறுமதி 12 இலட்சத்து 85,000 ரூபா ஆகும் சந்தேகநபர் தங்கக் கட்டிகளை ஆசன வாயில் மறைத்து கடத்த முயற்சித்துள்ளார். கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

# பாதுகாப்பு அமைச்சில் புத்தாண்டுக் கொண்டாட்டம்

(கொழும்பு)

உதயமாகவுள்ள 2014 ஆம் ஆண்டின் சிங்கள தமிழ் புத்தாண்டை வரவேற்கும் முகமாக பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட கொண்டாட்ட நிகழ்வுகள் கடந்த சனிக்கிழமை விமானப்படை விளையாட்டு மைதானத்தில் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் தமது குடும்பத்துடன் இணைந்து இந்நிகழ்வில் பங்கேற்றனர்.



பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தாபய ர்ராஜபக்ஷ, அமைச்சின் சேவா. வனிதா பிரிவின் தலைவி. திருமதி அயோமா ராஜபக்ஷ ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

# எல்லாக் காலங்களிலும் போர் வெற்றி பயன் தராது

(கொழும்பு)

போர் வெற்றியை எல்லாக் காலஙகளிலும் பயன்படுத்திக் கொள்ள முடியா்து என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்று முடிந்த மேல் மற்றும் தென் மாகாணசபைத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பின்னடைவை எதிர் நோக்கியுள்ளது.

தேர்தலில் அரசாங்கம் வெற்றியட்டியுள்ளதாக எவரேனும் தெரிவித்தால் அது முற்று முழுதான நகைச்சுவையே. ஏனெனில் அரசாங்கத்தின் வாக்குகள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது.

வாக்களித்தவர்கள் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு வாக்களித்தவர்களின் மொத்த எண்ணிக்கையை கவனத்திற்கொண்டால் இந்த உண்மை வெளிப்படும்.

அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள கடுமையான எதிர்ப்பே இவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது, அநேக சந்தர்ப்பங்களில் போர் வெற்றியைப் பயன்படுத்தி அரசாங்கம் தேர்தல்களில் வெற்றியீட்டியது.

எனினும், இந்த வெற்றிகளை ராஜபக்ஷ குடும்பத்தினர் மட்டுமே அனுபவித்தனர்.

தேர்தல் நடாத்தப்பட்டால் அர 'சாங்கம் பின்னடைவை சந்திக்கும்.



ஏனெனில் அப்போது இருநத மகிந்த ராஜபக்ஷவை விடவும் தற்போது உள்ள மகிந்த மீதான மக்கள் அபிமானம் வீழ்ச்சியடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாடுகளுக்கு செல்வோரில் வருடாந்தம் 300 பேர் மரணம்

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ள இலங்கையர்களில் வருடம்தோரும் 300 பேர் வரை உயிரிழப்பதாக இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துளளது. இலங்கையிலிருந்து சுமார் 15 இலட்சம் பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளனர் இதில் பெரும்பாலானோர் பெண்கள் ஆவார்.

இதில் 69 வீதமானோர் இயற்கையாகவும், 27 வீதமானோர் விபத்துக்களிலும் ஏனையோர் தற்கொலை செய்து கொளவதாலும் உயிரிழப்பதாக வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

2011 இல் 289 பேராக இருந்த உயிரிழப்பு வீதம் 2013 இல் 303 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரேபிய தகவல்களின்படி இலங்கைப் பணியாளர்களில் பெண்களே அதிகமானோர் கூறப்படுகின்ற போதும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆண்களே அதிகமானோர் உயிரிழப்பதாக தெரிவித்துள்ளது.

# ஜெட் விமானசேவை

(கொழும்பு)

அபுதாபியை தளமாகக் கொண்டுள்ள ரொட்டனா ஜெட் விமான சேவை இலங்கையுடனான விமான சேவையினை அறிமுகப்படுத்தவுள்ளது. இந்தச் சேவை இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவையின் ஊடாக கொழுமபு மற்றும் அம்பாந்தோட்டை சர்வதேச விமான நிலையங்கள் சர்வதேச ஜெட் சேவையுடன் இணைககப்படும் என தெரிவிக்கப்பட்டள்ளது. அபுதாபியின் அல் பற்றீன் விமான நிலையத்தில் இருந்து வாரத்திற்கு மூன்று சேவைகளை இலங்கையுடன் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

# பிள்ளைப்பராமரிப்பு நிலையம் கிளிநொச்சியில் ஆரம்பம்

(கிளிநொச்சி)

வேள்ட் விசன் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளிநொச்சியில் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களிலுள்ள பிள்ளைகளைப் பகலில் பராமரிப்பதற்காக பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக கிளிநொச்சியில் சாந்தபுரம் அம்பாள் நகர் கிராம மக்களின் நன்மை கருதி ஓர் பகல் பராமரிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இக்கட்டடம் அமைப்பதற்கான 2.7 மில்லியன் ரூபாவை வேள்ட் விசன் நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

வன்னியில் பல பகுதிகளிலும் பெண்கள் வேலைக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை காணப்படுவதால் தமது சிறுபிள்ளைகளை பராமரிப்பதற்காக மூத்த பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பாமல் நிறுத்த வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலைகளை பலரும் சுட்டிக்காட்டியதைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் மூலம் தொழிலுக்குச செல்லும் குடும்பப் பெண்கள் தமது பிள்ளைகளை பகல்நேரப் பராமரிப்பு நிலையத்தில் விட்டுச் செல்ல முடியும்.

இந் நிகழ்வில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கிளிநொச்சி மாவட்ட நன்னடத்தை உத்தியோகத்தர் எம்.முத்துக்குமாரன், கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் க.இராஜேந்திரம், கிராம அலுவலர், வேள்ட் விசன் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.



**யாழ்.பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையக் கண்காட்சியும், கலை நிகழ்வும் கடந்த வெள்ளிக்கிழமை அடைக்கல அன்னை ஆலய வளாகத்தில் நடைபெற்றது. இதன்போது வருகை தந்த விருந்தினர்கள் கண்காட்சியை பார்வையிடுவதைக் காணலாம். (105)**

## மக்கள் வங்கியின் புதுவருடப் பரிசுகள்

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு இம் முறையும் மக்கள் வங்கியினால் பெறுமதி மிக்க பணப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. அந்தவகையில் புதுவருடப்பிறப்பன்று எந்தவொரு மக்கள் வங்கி கிளையிலும் பணத்தை வைப்புச் செய்வோருக்கு பரிசில்கள் காத்திருக்கின்றன.

இதில் 50 ஆயிரம் ரூபா வைப்புக்கு ப்ரெஷர் குக்கரும், 25 ஆயிரம் ரூபா சேமிப்புக்கு மின்னழுத்தியும், 10 ஆயிரம் ரூபா சேமிப்புக்கு வெந்நீர் போத்தலும், 5 ஆயிரம் ரூபா சேமிப்புக்கு சுவர்க்கடிகாரமும் மற்றும் சகல கொடுக்கல் வாங்கல்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் இம்முறை புதுவருடத்தினத்தன்று பௌர்ணமி தினமாகையால் மறுநாள் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மக்கள் வங்கியின் புதுவருடகொடுக்கல் வாங்கல்கள் முற்பகல் 9 மணி தொடக்கம் சகல மக்கள் வங்கி கிளைகளும் மக்களுக்காக திறந்திருக்கும் என மக்கள் வங்கி அறிவித்துள்ளது.

## க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள் விபரம்

(யாழ்.நிருபர்)

அண்மையில் வெளிவந்த க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வவுனியா மகாவித்தியாலயத்தில் 12 மாணவர்கள் 9ஏ சித்தி பெற்றுள்ளனர்.

செந்தில் வடிவேல் நிதிசன், அலெஸ்ஜெரியல் அசான், பஞ்சாட்சரசர்மா அமிர்தேசர்மா, சிவராஜா வென்சாகர், சிவஞானம் அட்சயன், ஜெகதீஸ்வரன் ஜெகநிருபன், யோகராஜன் டிசாந், செல்வராசா கேசவன், வெனிசியஸ் கனிஸ்வரன், மகேந்திரன் றனோஜன், அப்துல் அப்பாஸ் முகமட் அப்றின், றோசினி சிங்கராசா. (10)

◆ ◆ ◆

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூாயிலிருந்து க.பொ.த.(சா/த) தரப்பரீட்சைக்குத் தோற்றிய 142 மாணவர்களில் 138 மாணவர்கள் க.பொ.த.உயர் தரம் கற்பதற்குத்தகுதிபெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் என்.தெய்வேந்திரராஜா அறிவித்துள்ளார்.

திறமைச்சித்தி பெற்றமாணவர்கள் வருமாறு;

பி.விதுஷன் 9 ஏ, வை.அபிதரன் 9 ஏ, ஆர்.திருபரன் 8ஏ, பி, எஸ்.கஜனன் 8ஏ, சி, கே.கஜரூபன் 8ஏ, சி, என்.நிரோஜன் 8ஏ, எஸ், எஸ்.சிவகரன் 8ஏ, சி, எஸ், துவாரகன் 8ஏ, சி, லி.அஜந்தன் 8ஏ, சி, எஸ்.இளங்குமரன் 8ஏ, சி, எஸ்.மயூரன் 8ஏ, பி, வை.பிரணவன் 8ஏ, பி, ஜே.பிரியந்தன் 8ஏ, பி, எஸ்.சைலஸ் 7ஏ, 2பி, பி.செந்தூரன் 7ஏ, பி, சி, எம்.றகுலன், 7ஏ, பி, சி, எஸ்.றஜீந்தன் 7ஏ, பி, சி, எஸ்.சதாரூபன் 7ஏ, பி, சி, எஸ்.சிறீதரன் 7ஏ, பி, சி, கே.தேவசுதன் 7ஏ, 2பி, எஸ்.அனோஜ் 7ஏ, 2பி, யூ.ஜெனோசன், 7ஏ, பி, சி, கே.கபிலன் 7ஏ, பி, எஸ், எஸ்.மயூரன் 7ஏ, பி, எஸ், என்.இளங்கீரன் 7ஏ, பி, எஸ், ஈ.எய்மன் றுக்சன் 7ஏ, பி, எஸ், எஸ்.கோகுலன் 7ஏ, பி, எஸ், பி.நிரோஸ்குமார் 7ஏ, பி, எஸ் ஆகும். (01)


ஜனரஞ்சகத் தன்மையை முதன்மைப் படுத்தி பக்கம் சாராமல் துணிச்சலுடன் தரமான அம்சங்களை அள்ளிவரும் வாரமலர்.

வாரமலர்
தினமுரசு

நாளைய தினமுரசு வாரமலரில்... 10.04.2014




- கிழக்கில் பழிவாங்கும் இனவாதம்!
- நிதி நிறுவனங்களுக்கு கடிவாளம் - ஒரு பார்வை
- ஐக்கிய நாடுகள் சபையும் சமகால உலகப் போக்கும்
- கூட்டமைப்பை நிராகரிக்க துணிந்துவிட்டனர் மக்கள்

மதயானைக் கூட்டம்
விளையாட்டு

உங்கள் முகவர்களிடம் கேட்டு வாங்கிப் படியுங்கள்!

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

# தாயகம் திரும்பிய இலங்கை அணிக்கு நேற்று அமோக வரவேற்பு





(கொழும்பு)

பங்களாதேஷில் நடைபெற்ற ருவென்ரி-20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் கிண்ணம் வென்ற இலங்கை அணி வீரர்களுக்கு நேற்று தாயகத்தில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

18 ஆண்டுகளுக்குப் பின்னர் சர்வதேச கிரிக்கெட் சபையின் வெற்றிக் கிண்ணம் (வென்ரி-20) ஒன்றை இலங்கை அணி கடந்த ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றிக்கொண்ட இலங்கை கிரிக்கெட் அணி நேற்று மாலை 4 மணியளவில் கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

விமான நிலையத்தில் வரவேற்கப்பட்ட வீரர்கள், பின்னர் திறந்த பேருந்து வண்டியொன்றில் ஏற்றப்பட்டு நீர்கொழும்பு பழைய வீதியின் ஊடாக மேள, தாளங்களுடன் கோலாகலமாக காலிமுகத்திடலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் கிரிக்கெட் வீரர்களுக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

சம்பியன் கிண்ணத்தை வென்ற இலங்கை அணிக்கு சர்வதேச கிரிக்கெட் சபை 14 கோடி ரூபாவை பரிசாக வழங்கியுள்ள அதேவேளை, இலங்கை கிரிக்கெட் சபை வீரர்களின் சாதனையைப் பாராட்டி 20 கோடி ரூபாவை பரிசாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## தொடர்ந்தும் கப்டனாக செயற்பட வேண்டும் என்ற நோக்கமில்லை அணியின் வெற்றிக்கு பங்காற்றவேண்டும் என்பதே எனது இலக்கு



(கொழும்பு)

ருவென்ரி-20 போட்டிகளில் தொடர்ந்தும் அணித் தலைவராக செயற்பட வேண்டும் என்ற நோக்கம் எனக்கில்லை. தேர்வாளர்கள்தான் அதனை தீர்மானிக்க வேண்டும். எனக்குக் கொடுக்கப்பட்ட கடமையை நான் நிறைவேற்றினேன். தொடர்ந்தும் என்னாலான பங்களிப்பை அணிக்கு வழங்குவேன் என இலங்கை அணிக் கப்டன் லசித் மலிங்க தெரிவித்துள்ளார்.

அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால் ஆகியோருக்குக் கீழ் நான் உதவித் தலைவராக விளையாடினேன். எதிர்பாராமல் அணித் தலைவர் பதவி எனது கைகளில் திணிக்கப்பட்டது. அந்தப் பொறுப்பை நான் செவ்வனே ஆற்றியதில் மகிழ்வுறுகின்றேன்.

எந்தவொரு அணித் தலைவரும் சிரேஷ்ட வீரர்களின் ஆதரவையும் ஆலோசனையையும் பெற்றுக்கொள்வது அவசியம். முன்னாள் தலைவர்களிடமிருந்து நிறைய கற்றுக்கொள்ள வேண்டும். அதன் மூலம் புதிய அணித் தலைவர்கள் சிறந்த தலைவர்களாகின்றனர்.

அர்ஜுன ரணதுங்க, மார்வன் அத்தப்பத்து, சனத் ஜெயசூரிய போன்ற உயரிய தலைவர்களின் வழிகாட்டலிலேயே மஹேல ஜெயவர்தன, குமார் சங்கக்கார போன்ற சிறந்த தலைவர்கள் உருவானார்கள், அவர்களைப் போன்றே எனக்கும் ஒத்தாசைகள் கிடைத்தன. நிறைய அனுபவங்களைக் கொண்ட நான்கு அல்லது ஐந்து அணித் தலைவர்கள் எமது அணியில் இருந்தார் கள். எனக்கு தலைமைப் பதவி வழங்கப்பட்டதும் அவர்களது ஒத்துழைப்பையும் ஆலோசனையையும் பெறவேண்டும்என எண்ணினேன். அதனால்தான் 1996 இற்குப் பின்னர் உலக சம்பியன் கிண்ணம் ஒன்றை எம்மால் வென்றெடுக்க முடிந்தது.

முரளிதரன் ஓய்வுபெறும்போது அவர் 800 விக்கெட்டுக்களைக் கைப்பற்றுவதற்கு உதவினோம். அத்துடன் அப்போட்டியில் வெற்றியுடன் அவருக்கு விடையளித்தோம். அதேபோன்று சங்கா, மஹேல ஆகிய அதி உயரிய வீரர்களுக்காகவும் கிண்ணத்தை வென்று கொடுத்தோம்.


இலங்கை கிரிக்கெட் அணிக்காக அளப்பரிய சேவையாற்றியுள்ள அவர்கள் இருவருக்கும் மிகப் பொருத்தமான பிரியாவிடை அளித்தோம். வீரர்களின் அர்ப்பணிப்புத்தன்மை, கடின உழைப்பு, பெரு முயற்சி, ஆற்றல் வெளிப்பாடு ஆகியனவே வெற்றிக்கு வழிவகுத்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

## கனவு அணிக்கு டோனி கப்டன்

பங்களாதேஷில் நடைபெற்ற ருவென்ரி-20 உலகக் கோப்பையில் சிறப்பாக விளையாடிய வீரர்களை கொண்ட உலக ருவென்ரி-20 கனவு அணியை சர்வதேச கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

கனவு அணியின் கப்டனாக இந்தியாவின் டோனி தேர்வு செய்யப்பட்டார். இந்திய வீரர்கள் ரோகித் சர்மா, ஹோலி, ஆர்.அஷ்வின் ஆகியோரும் இந்த அணியில் இடம் பெற்றுள்ளனர். நெதர்லாந்தின் ஸ்ரீபன் மைபேர்க் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. உலக ருவென்ரி-20 கனவு அணி: ரோகித் சர்மா (இந்தியா), ஸ்ரீபன் மைபேர்க் (நெதர்லாந்து), ஹோலி (இந்தியா), டுமினி (தென்னாபிரிக்கா), மைக்ஸ்வெல் (அவுஸ்ரேலியா), டோனி (இந்தியா, கப்டன்), டரன் சம்மி (மே. தீவுகள்) ஆர்.அஷ்வின் (இந்தியா), ஸ்ரெய்ன் (தென்னாபிரிக்கா), பத்ரீ (மே. தீவுகள்), லசித் மலிங்க (இலங்கை). 12ஆவது வீரர்: கிரிஷ்மர் சான்டோகி (மே.தீவுகள்).

## திட்டமிடல், ஒருங்கிணைந்த செயற்பாடே இலங்கை கிண்ணம் வெல்லக் காரணம்



(கொழும்பு)

சிறந்த திட்டமிடல், ஒருங்கிணைந்த செயற்பாடு காரணமாகவே உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடரின் வெற்றிக் கிண்ணத்தை இலங்கை அணியால் கைப்பற்றிக்கொள்ள முடிந்தது என இலங்கை அணியின் முன்னாள் கப்டன் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இறுதிப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று, இந்திய அணிக்கு துடுப்பெடுத்தாடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியமை மிகவும் சிறந்தொரு முடிவாகவே நான் கருதுகின்றேன். தொடர்ச்சியாக மழையுடன் கூடிய வானிலை நிலவியமையினால், மைதானம் ஈரத் தன்மையில் இருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அன்றைய தினம் வீசப்பட்ட பந்துகள் சரியான திசையில் செல்லவில்லை. இந்தத் தொடரில் சங்கக்கார திணறி வந்தபோதும், இறுதிப் போட்டியில் இறுதிவரை களத்திலிருந்து அணிக்கு வெற்றி தேடிக் கொடுத்தது பாராட்டிற்குரியது. அதற்கு அவரின் அனுபவமும் முக்கிய காரணம். மத்தியூஸுக்கு முன்னர் திஸர பெரேராவை ஆட அனுப்பியமையும் சிறப்பான தீர்மானம். இந்தத் தீர்மானம் மிகவும் சிறந்தொரு தீர்மானம். அவ்வாறு அனுப்பப்படும் வீரர் ஆட்டமிழக்கும் பட்சத்தில், பலர் திட்டுவதற்கான வாய்ப்புக்களும் உருவாகும்.

130 என்பது மிகப் பெரிய வெற்றியிலக்காக கருதப்படாத பட்சத்திலும், அணி என்ற ரீதியில் அனைவரும் ஒன் றிணைந்து விளையாடியமையே கிண்ணத்தைக் கைப்பற்ற வழி செய்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விபரிக்க வார்த்தைகள் இல்லை




(கொழும்பு)

உலகக் கிண்ண ருவென்ரி கிண்ணத்தைக் கைப்பற்றியமை மிக மிக மகத்தானது. அதனை என்னால் விளக்க வார்த்தைகள் இல்லை என இலங்கை அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் போட்டி எங்களுக்கோ அல்லது தனிப்பட்ட ஒரு வீரருக்கோ சொந்தமானது என நான் கருதவில்லை.

எங்களால் முடிந்தவரை சிறப்பாக விளையாடி முயற்சியை முன்னெடுப்பதே எமது கடமை. அதன் மூலம் நேர்மறையான விளைவுகளுடன் சிறப்புறச் செய்தோம் என்ற நம்பிக்கையுடன் செல்வதாகும்.

இதில் எமக்கு சாதகமான வாய்ப்புக்கள் உருவாகும். அவற்றைப் பற்றிப் பிடித்துக்கொள்ளவேண்டும். இதற்கு முன்னர் நான்கு சந்தர்ப்பங்கள் நழுவிப் போயின. இன்று கிடைத்த சந்தர்ப்பத்தை நாங்கள் பற்றிப்பிடித்துக்கொண்டோம். அதற்கு ஆற்றல், சிறிய அதிர்ஷடம், திட்டமிடல், நிறைவேற்றுதல் என்பன அவசியம். அத்துடன் உரிய இடம், உரிய நேரம், உரிய போட்டி என்பனவும் அமையவேண்டும். இது மிக மிக மகத்தானது. அதனை என்னால் விளக்க வார்த்தைகள் இல்லை. உலக சம்பியன் பட்டம் ஒன்றை வென்ற அணியில் நான் இடம்பெறுவது இதுவே முதல் சந்தர்ப்பமாகும். இப்போது எமது உள்ளுணர்வை துல்லியமாக விபரிக்க முடியாது.

மேலும் எமது அணி எங்களுக்காக (மஹேல, குமார்) வெற்றிபெறுதற்காக எடுத்த முயற்சி மகத்தானது. ஆனால் 20 மில்லியன் மக்கள் வெற்றிக்காக காத்திருந்தனர். அது மஹேலவுக்காகவும் எனக்காகவும் அல்ல. முழு அணிக்கும் எம்மோடு இருக்கும், எமக்கு ஆதரவளிக்கும் சகலருக்கமான வெற்றி. இது எமது கடைசிப் போட்டி என்பதால் எல்லோரும் எங்களைக் கூர்ந்து கவனிக்கின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

விளையாட்டுச் செய்திகள்

# பற்றிக்ஸ், சென். ஜேம்ஸ், யாழ். மத்திய கல்லூரி வலய மட்ட கால்பந்தில் சம்பியன்


19 வயதுப்பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற மத்திய கல்லூரி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கால்பந்தாட்டத்தொடரில் சென்பற்றிக்ஸ், சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம், யாழ். மத்திய கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

யாழ்ப்பாண கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கால்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 15, 17, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையில் போட்டிகள் நடைபெற்றது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை கொக்குவில் இந்துக் கல்லூரி அணி பிடித்துக் கொண்டது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டியில் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய அணியும் சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலய அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வலய மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை யாழ். மத்திய கல்லூரி அணி பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 4:3 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று வலய மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவில் மூன்றாமிடத்தை சென்.ஜோண்ஸ் கல்லூரி அணி பிடித்துக்கொண்டது.

## முன்பள்ளி விளையாட்டு

(சாவகச்சேரி)

மட்டுவில் கலைமகள் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று 1.30 மணிக்கு முன்பள்ளி முன்றலில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுத் தலைவர் மு. சிவகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் வி. தேவசகாயம்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. பாக்கியராஜா, நகராட்சி மன்ற உறுப்பினர் த. சுதர்ஷன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (11)

அல் அஸ்ஹார் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் மாலை 2.00 மணிக்கு ஒஸ்மானியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளி ஆசிரியர் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ஐ. அஸ்மின், கௌரவ விருந்தினராக கே.எம். நியாஸ் (நிலாம்), சிறப்பு விருந்தினராக யாழ். உதவி மேயர், மாநகரசபை உறுப்பினர்கள், சம்மேளன பிரதிநிதிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், சமூக சேவைகள் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், பெரியோர், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிர்கள் என அனைவரையும் கலந்துகொண்டு சிறார்களை உற்சாகப்படுத்துமாறு போட்டி அமைப்பாளர்கள் கேட்டுள்ளனர். (105)

## கிண்ணம் வென்றது குருநகர் கார்மேல் போய்ஸ்



(அரியாலை)

தேசியின் அதிரடித் துடுப்பாட்டத்தின் மூலம் குருநகர் சுதேசிய திருநாள் மென்பந்து கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை குருநகர் கார்மேல் போய்ஸ் அணி கைப்பற்றிக் கொண்டது.

95 ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்ட விழாவினை முன்னிட்டு வடமாகான ரீதியில் மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த வாரம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டி அணிக்கு ஆறு பேர் கொண்ட ஐந்து ஒருவர்களாக நடாத்தப்பட்டது. இறுதிப் போட்டியில் குருநகர் கார்மேல்போய்ஸ் அணியும், அரியாலை பிளைக் கப்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய குருநகர் கார்மேல் போய்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட ஐந்து ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தேசியன் ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரிகள் அடங்கலாக 18 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 30 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய அரியாலை பிளைக் கப்ஸ் அணி ஐந்து ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 26 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக கார்மேல் போய்ஸ் அணியின் தேசியன், தொடர் ஆட்டநாயகனாக அரியாலை பிளைக் கப்ஸ் அணியின் ரொஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (48)

## அராலி மத்தி ஸ்ரீமுருகனின் சைக்கிள், மரதன் ஓட்டம் வெளியானது வெற்றியீட்டியோர் விபரம்

(அராலி)

அராலி மத்தி ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தின் 74ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு கடந்த 5ஆம் திகதி நடாத்தப்பட்ட கைச்சிள் ஓட்டம், மரதன் ஓட்டம் மற்றும் மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டம் ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டியோர் விபரம் வெளியாகியுள்ளது.

இருபாலாருக்குமிடையில் நடாத்தப்பட்ட இப்போட்டியில் பல வீரா, வீராங்கனைகள் பங்குகொண்டு தமது திறன்களை வெளிப்படுத்தினர்.

இதில் மெதுவான மோட்டார் சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தை வினோதரன், இரண்டாமிடத்தை அகிலன், மூன்றாமிடத்தை தனுராஜ் ஆகியோர் பிடித்துக் கொண்டனர்.

பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தை தர்சிகா, இரண்டாமிடத்தை அங்கஜக்கன்னி, மூன்றாமிடத்தை கு. பிரியங்கா ஆகியோர் பிடித்துக் கொண்டனர்.

சிறுவர்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தை எஸ். நிதர்சன், இரண்டாமிடத்தை பி. நிதர்சன், மூன்றாமிடத்தை ஞா. பதுஷன் ஆகியோர் பிடித்துக்கொண்டனர்.

ஆண்களுக்காக மரதன் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தை சி. கரிதரன், இரண்டாமிடத்தை கோ. சுதர்ஷன், மூன்றாமிடத்தை ஜே. சுவிந்தன் ஆகியோர் பிடித்துக்கொண்டனர்.

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தை பா. தனுசியந்தினி, இரண்டாமிடத்தை நி. விதுஷா, மூன்றாமிடத்தை வி. வனஜா ஆகியோர் பிடித்துக் கொண்டனர்.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தை பா. பிர்ணவதாஸ், இரண்டாமிடத்தை ந. டினிஸ்ரன், மூன்றாமிடத்தை எஸ். நிர்மலேஸ்வரன் ஆகியோர் பிடித்துக் கொண்டனர்.

(எஸ்.பி.)



வடமாகாணப் பாடசாலை வீர,வீராங்கனைகளுக்கான அரை மரதன் போட்டியில் பெண்கள் பிரிவில் முதல் பத்து இடங்களைப் பிடித்தோரைக் காணலாம். இப்போட்டி கடந்த 5ஆம் திகதி புதுக்குடியிருப்பில் நடைபெற்றது. இதில் தேவிபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை வீராங்கனை கே. தனுசியா முதலாமிடத்தைப் பிடித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சைக்கிள், மரதன் ஓட்டம்

(அரியாலை)

95ஆவது அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டங்களை முன்னிட்டு பெருவிளையாட்டுப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது. இந்த வகையில் ஆண், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டம் 50 கிலோ மீற்றர் கொண்டதாகவும், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டம் 10 கிலோ மீற்றர் கொண்டதாகவும் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான மரதன் ஓட்டம் 10 கிலோ மீற்றர் கொண்டதாகவும், பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி ஐந்து கிலோ மீற்றர் கொண்டதாகவும் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் பங்குகொள்ள விரும்பும் வீர,வீராங்கனைகள் விரைவாக தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு அரியாலை மத்திய விளையர்ட்டுக்கழக முன்றிலில் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

# கலைமுகம்

57ஆவது இதழ்

கலைமுகம் காலாண்டுச் சஞ்சிகையின் 57ஆவது இதழ் வெளிவந்திருக்கிறது. வழக்கம் போலவே கனதியான விடயதானங்களும், நேர்த்தியான பக்க வடிவமைப்பும் கொண்டு "இந்த ஆண்டின் முதலாவது இதழும் மிகச் சிறப்பாகவே வந்திருக்கிறது.




கவிதைகள் குறித்த இரண்டு கட்டுரைகள்.

ஒன்று, அனார் சமகால இலங்கைப் பெண்ணியக் கவிதைகள் பற்றி எழுதியிருக்கும் "புதிய வானம் புதிய சிறகுகள்" என்ற தலைப்பிலான கட்டுரை. 16 ஈழத்துப் பெண்கவிஞர்களின் கவிதைகளை மாதிரிக் குத் தந்து மிக விரிவாக எழுதப்பட்டுள்ளது. பின்னிணைப்பாக 80களுக்குப் பின் வெளிவந்த இலங்கைப் பெண்கவிஞர்களின் கவிதைத் தொகுப்புகள் பட்டியலும் உள்ளது. "மழை பெய்து ஓய்ந்த ஈரமண் தரையில், தோழி கீறிய சதுர வடிவான கட்டங்களில், ஒற்றைக் காலால் நொண்டி விளையாடும்போது, எதிரே தெரிந்த சிறுகடலை யும் பெருங்கடலையும் நான் தாண்டிய கணம்தான் கவிதையோ என்னவோ" என்று தன்னனுபவத்தில் இருந்து தொடங்கி விரித்திருக்கிறார் கட்டுரையை.

அடுத்த கட்டுரை, "பா.அகிலன், மனோகரி கவிதைகளில் கிறிஸ்தவக் குறியீடுகள், கதைகளின் தாக்கம்" என்ற தலைப்பில் சி.விமலன் எழுதியிருப்பது. "என் தேவனே! என் தேவனே! என்னை ஏன் கைவிட்டீர்?" என்ற இயேசுபிரானின் புலம்பலை தம்முடையதாகவும் எடுத்துக்கொள்ள நேர்ந்திருக் காத யாரிருக்கிறார்கள் நம் சமூகத்தில்? எனவே, நமது எழுத்தாளர்கள் கவிஞர்களின் படைப்புகளிலும் கிறிஸ்தவக் குறியீடுகள் வெகுதாராளமாய் ஊடாடுவது உண்மை. பா.அகிலன், மனோகரி இருவரின் கவிதைத் தொகுப்புகளிலிருந்து உதாரணங்கள் எடுத்து விளக்கியிருக்கிறார் சி.விமலன்.

மற்றும் இரு கட்டுரைகள், யாழ்ப்பாணத்தில் திருமறைக் கலாமன்றம் நிர்மாணித்திருக்கும் ஓவியக்கூடம் பற்றியும், மார்ச்சில் நடந்தேறிய நாடகவிழா பற்றியும். மதுராவும் செந்தூரனும் எழுதியிருக்கிறார்கள்.

திசேரா, கருணாகரன், கீதா கணேஷ் ஆகியோரின் சிறுகதைகளும், ந.சத்தியபாலன், யாத்ரிகன், கிரிஷாந், ஜபார், சூரியநிலா, நெற்கொழுதாசன், காரைக்கவி, சு.க.சிந்துதாசன் ஆகிய எட்டு கவிஞர்களின் பத்து கவிதைகளும் இதழில் உள்ளன.

அ.யேசுராசா தனது "திரை உலா" பத்தியில், ஜோசித்தனின் குறும்படமான "அப்பாவின் மிதிவண்டி" பற்றியும், பாலு மகேந்திராவுடனான தனது நினைவுகள் பற்றியும், திரைப்பட ஆர்வலர்கள் படிக்க வேண்டிய திரைப்பட நூல்கள் இதழ்களின் பட்டியலையும் தந்திருக்கிறார். "மேதைகளின் குரல்கள்" நூலிலிருந்து நெறியாளர் ஜவரின் கருத்துக்களிலிருந்து சில பகுதிகளைத் தொகுத்துத் தந்திருப்பது சுவையானது.

நூல் மதிப்பீடுகள் பகுதியைச் சிறப்பாக குறிப்பிட வேண்டும். புதிய நூல்களையும் கலைஞர்களையும் வாசகப் பரப்பின் கவனத்திற்குக் கொண்டுவரும் அந்தப் பகுதியை வெகு சிரத்தையோடு செய்துவருகிறது கலை முகம். இந்த இதழில் எட்டு நூல்களுக்கான மதிப்பீடுகளும், வரப்பெற்றோம் பகுதியில் ஆறு நூல்களுக்கான அறிமுகக் குறிப்புகளும் உள்ளன. இதுதவிர, பல்வேறு கவிதைத் தொகுதிகள் பற்றிய குறிப்புகள் அனார் மற்றும் சி.விமலன் கட்டுரைகளில் கிடைக்கிறது.

கலை இலக்கிய ஆர்வலர்கள் வாங்கிப் படிக்கவும் பாதுகாக்கவும் ஊக்கப்படுத்தவும் வேண்டிய, பயனுள்ள சஞ்சிகை.

## கடந்த ஜனவரியில் மாண்ட தமிழ் மன்னரின் வாரிசு!



இலங்கையில் ஆட்சி செய்த, கடைசித் தமிழ் மன்னரின் வாரிசான பிருதிவிராஜ், வறுமையில் வாடி, வேலூரில் கடந்த 17.01.2014 மாரடைப்பால் இறந்தார்.

இலங்கை கண்டியில், மதுரை நாயக்கர் வம்சத்தை சேர்ந்த தமிழ் மன்னர்கள், கி.பி.1739 – 1815 வரை, ஆட்சி செய்தனர். கடைசித் தமிழ் மன்னர் 'கண்ணுச்சாமி' என்ற விக்ரமராஜசிங்கன் ஆவார். இவர் மீது, நான்கு முறை போர் தொடுத்தது ஆங்கில அரசு. இறுதியில், கண்டியைக் கைப்பற்றியது. போரின் இறுதியில் மன்னரும் அவரது குடும்பத்தினரும் தலைமறைவாக இருந்து வந்தனர். சூழ்ச்சிக்காரர்கள் உதவியுடன் அவர்களை சிறைப்பிடித்தனர். மன்னனையும், ஏழு பட்டத்தரசிகளையும் கைது செய்து, கப்பல் மூலம், தமிழகம் கொண்டு வந்து, 1816இல், வேலூர் கோட்டையில் இருந்த 'கண்டி மகாலில்' 16ஆண்டு 6 மாதங்கள் அவர்களைச் சிறை வைத்தனர்.

1832, ஜனவரி 30ஆம் திகதி, விக்ரமராஜசிங்கன் இறந்தார். அவரது உடல், வேலூரில் புதைக்கப்பட்டு, அங்கு கல்லறையும் கட்டப்பட்டது. 1990இல் முத்து மண்டபம் கட்டப்பட்டது. அதன் அருகில், 1843ல் இறந்த, அவரது மகன் ரங்கராஜா கல்லறையும் அமைக்கப்பட்டது.


ரங்கராஜாவின் பேரன் தான், பிருதிவிராஜ். வாரிசுகள் ஒவ்வொருவராக இறந்த பின், பிருதிவிராஜை, யாரும் கண்டுகொள்ளவில்லை. இந்தியா சுதந்திரம் அடைந்த பின், கண்டி மகாலை விட்டு, வெளியேறிய பிருதிவிராஜ், வேலூர், சாயிநாதபுரத்தில் வசித்து வந்தார். இவரை அப்பகுதி பொதுமக்கள் 'இளவரசன்' என்றே அழைத்து வந்துள்ளனர்.

கூலி வேலைக்குச் சென்று, பி.ஏ. படித்துள்ளார். தியேட்டர்களில் மேலாளராக பணியாற்றிய பிருதிவிராஜுக்கு, உடல் நிலை பாதிக்கப்பட்டது. அப்போது, ஆட்சியில் இருந்த தி.மு.க., அரசிடம், 'தான், இலங்கையை ஆண்ட கடைசித் தமிழ் மன்னர் விக்ரம ராஜசிங்கன் வாரிசு' என்றும், ஏதாவது, உதவி செய்யும்படி கேட்டும், நூற்றுக்கும் மேற்பட்ட மனுக்களை, பிருதிவிராஜ் அனுப்பியுள்ளார்.

எந்த நடவடிக்கையும் இல்லாததால், சத்துவாச்சாரியில், தியேட்டர் ஒன்றில் டிக்கெட் கிழிக்கும் வேலை செய்த போது, விபத்தில் காலில் அடிபட்டதால், வீட்டுக்குள்ளேயே பிருதிவிராஜ் முடங்கினார். 74 வயதான பிருதிவிராஜ், கடந்த 17.01.2014 அன்று, மாரடைப்பால் இறந்தார். தியேட்டரில் மேலாளராக பணியாற்றிய போது, புஷ்பா என்ற பெண்ணை மணந்த, பிருதிவிராஜுக்கு, 2 மகன்கள் உள்ளனர் (விக்கிரமன், விஜயகுமார்). ஒரு மகன் எலக்ட்ரீஷியனாகவும், இன்னொருவர் சி.எம்.சி. மருத்துவமனையில் 'அட்டெண்டர்' ஆகவும் பணியாற்றி வருகின்றனர்.

(நன்றி: அந்திமாலை)

## ATM உருவான கதை உங்களுக்குத் தெரியுமா?




இயந்திர சாதனம் ஒவ்வொன்றுக்கும் வரலாறு உண்டு. ஏ.ரி.எம். (Automatic Teller Machine) உருவான கதை கூட சுவாரஷ்யமானது. ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த ஜோன் ஷெப்பர்ட் பேரோன் தன் மனைவிக்குப் பரிசளிக்க விரும்பி பணத்தை எடுக்க வங்கியில் வரிசையில் நின்றார். தனது முறை வந்த போது பணத்தைக் கொடுக்க வேண்டிய காசாளர், நேரம் முடிந்து விட்டது என்று கவுன்டரை பூட்டி விட்டுச் சென்றுவிட்டார்.

ஜோன் வெறுங்கையோடு மனைவியைப் பார்க்க விரும்பவில்லை. கையில் இருந்த சொற்ப சில்லறையை வைத்து, கொஞ்சம் சொக்லேட்களை வாங்கிக் கொடுத்து மனைவியை சமாதானப்படுத்தலாம் என்று நினைத்து சொக்லேட் வெண்டிங் இயந்திரத்தைத் தேடிச் சென்றார்.

அப்போதைக்கு அவர் மனைவியை சமாதானப்படுத்தினாலும், பூட்டிய வங்கிக் கவுண்டரும், காசு போட்டால் உதிர்ந்த சொக்லேட்களும் அவர் மனதில் மீண்டும் மீண்டும் வந்து போயின. அதன் விளைவுதான் முதல் ஏ.ரி.எம். உருவாக வித்திட்டது.

1969இல் இவர் உருவாக்கிய முதல் ஏ.ரி.எம். வடக்கு லண்டனின் பார்க்லேஸ் வங்கியில் வைக்கப்பட்டது. அதிலும் ஒரு சிக்கல். ஜோனின் மனைவியால் அப்போதைய ஏ.ரி.எம். அட்டைக்கான ஆறு இலக்க குறியீட்டை (Pin Number) ஞாபகம் வைத்துக் கொள்ள முடியவில்லை. உடனே செயலில் இறங்கிய ஜோன், அதை நான்கு இலக்கங்களாகக் குறைத்தார். ஏ.ரி.எம். தற்போது ஏராளமான மாற்றங்களைக் கண்டு விட்டாலும், அதற்கெல்லாம் அடிப்படையாக இருந்தது ஜோனின் காதல்தான்!

## அரசியல்வாதிகள் இனவாதிகளாக செயற்படாவிட்டால் மக்களும் இனவாதிகளாக செயற்படுவதில்லை

எம்.எஸ்.எம்.ஐயூப் கட்டுரையிலிருந்து.

தேர்தல் நடந்த இரு மாகாணங்களிலும் ஆளும் கட்சியின் பலம் 17 ஆசனங்களால் குறைந்துள்ளது. ஐ.தே.க.வின் பலம் இரண்டு ஆசனங்களால் குறைந்துள்ளது. மக்கள் விடுதலை முன்னணியின் பலம் 6 ஆசனங்களில் இருந்து 11 ஆசனங்களாக அதிகரித்துள்ளது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தென் மாகாண வாக்குகள் சற்று குறைந்துள்ள போதிலும் மேல் மாகாணத்தில் அக் கட்சி தமது வாக்கு வங்கியையும் ஆசன எண்ணிக்கையும் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

ஆளும் கட்சி இத் தேர்தலில் சரிவை கண்ட போதிலும் எதிர்க் கட்சிகள் அதனால் மகிழ்ச்சியடைய முடியாது. ஏனெனில் அடுத்து பதவிக்கு வரக் கூடிய அளவுக்கு ஐ.தே.க.விடம் மக்கள் சென்றடையவில்லை. அவர்கள் மக்கள் விடுதலை முன்னணியிடமும் சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சியிடமுமே சென்றுள்ளனர். அக் கட்சிகள் ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்கு முன்னேற நீண்ட காலம் எடுக்கும். எனவே ஆளும் கட்சியின் வாக்கு வங்கி தொடர்ந்தும் சரிந்தாலும் அடுத்த பொதுத் தேர்லிலும் அல்லது ஜனாதிபதி தேர்தலிலும் ஆட்சி மாறும் என்பதற்கு உத்தரவாதம் இல்லை.

இந்த நிலைமை எதிர்க் கட்சிகளுக்கு ஒரு பலமான செய்தியை வழங்குகிறது. அதாவது எதிர்க் கட்சிகள் ஒன்று சேர வேண்டும் என்பதே. ஆனால் மக்கள் விடுலை முன்னணியும் ஜனநாயகக் கட்சியும் அதனை விரும்புமா என்பது சந்தேகமே.

ஆளும் கட்சியை சேர்ந்த எந்தவொரு சிறுபான்மை வேட்பாளரும் தெரிவு செய்யப்படவில்லை. பெரும்பான்மை மக்கள் வழமையாக சிறுபான்மை வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதில்லை. இம்முறை சிறுபான்மை மக்களும் அவ்வளவாக ஆளும் கட்சிக்கு வாக்களிக்கவில்லை.

ஆளும் கட்சியின் செய்மதியாக போட்டியிட்ட அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஒரு ஆசனத்தை அரசாங்கத்திற்காக பெற்றுக் கொடுத்தாலும் அதுவும் முஸ்லிம்கள் முஸ்லிம்களுக்கே வாக்களித்துள்ளார்கள் என்பதையே எடுத்துக் காட்டுகிறதேயல்லாமல் அந்த வாக்காளர்கள் அரசாங்கத்திற்கு வாக்களித்தார்களா என்பது சந்தேகமே.

தமிழர்கள் செறிவாக வாழும் கொழும்பு மேற்கு மற்றும் கொழும்பு வடக்கு ஆகிய தொகுதிகளில் ஐ.தே.க. முதலிடத்திற்கும் மனோ கணேசனின் ஜனநாயக மக்கள் முன்னணி இரண்டாவது இடத்திற்கும் ஆளும் ஐ.ம.சு.மு. மூன்றாவது இடத்திற்கும் வந்தமை தமிழ் மக்கள் ஆளும் கட்சியை ஆதரிக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் அண்மையில் நாட்டில் பரவிய முஸ்லிம் விரோத பிரசாரங்களும் அதற்கான சில பிரபலங்களின் ஆதரவுமே முஸ்லிம்களின் வாக்குத் திசையை நிர்ணயித்தது. அது தான் ஆளும் கட்சியைச் சேர்ந்த எந்தவொரு முஸ்லிம் வேட்பாளரும் தெரிவாகாதமைக்குக் காரணமாக கருத முடியும். ஆளும் கட்சியைச் சேர்ந்த எந்தவொரு முஸ்லிம் வேட்பாளரும் தெரிவாகாதமையினால் ஆளும் கட்சி தமது போனஸ் ஆசனங்களில் ஒன்றை தோல்வியடைந்த வேட்பாளரான நவுஸர் பௌசிக்கு வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.


ஆளும் கட்சி இரண்டு இடங்களில் மட்டும் முஸ்லிம் வாக்குகளை பெற்றுள்ளதாகத் தெரிகிறது. கொலன்னாவ மற்றும் பேருவளை அவ்விரு இடங்களாகும். கொலன்னாவையில் முஸ்லிம்கள் ஓரளவு வாக்குகளை ஹிருணிக்கா பிரேமசந்திரவுக்கு அளித்திருக்கிறார்கள். ஏனெனில் அவரது தந்தையான காலஞ்சென்ற பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொலன்னாவ தொகுதியில் பல பிரச்சினைகளின் போது முஸ்லிம்களுக்கு உதவியவர். எனவே முதன் முறையாக போட்டியிட்ட ஹிருணிக்கா கொழும்பு மாவட்டத்தில் முதலிடத்திற்கு வர முடிந்தது.

அதேபோல் அமைச்சர் டாக்டர் ராஜித்த சேனாரத்னவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பேருவளை அமைப்பாளராக இருக்கிறார். அவர் கடந்த கால முஸ்லிம் விரோத பிரசாரங்களின் போது முஸ்லிம்களுக்காக பரிந்து பேசியவர். விஜய குமாரதுங்கவுடன் அரசியலில் ஈடுபட்ட அவர் எப்போதும் இனவாதத்தை எதிர்த்து வந்தவர். எனவே அங்கும் முஸ்லிம்கள் அவருக்காக ஆளும் கட்சிக்கு வாக்களித்துள்ளனர். அரசியல்வாதிகள் இனவாதி களாக செயற்படாவிட்டால் மக்கள் இனவாதிகளாக செயற்படுவதில்லை என்பதற்கு கொலன்னாவையும் பேருவளையும் சிறந்த சான்றுகளாகும்.

2


# ஆயிரம் வருடங்கள் வாழ்வது எப்படி?

- சுந்தர் வேதாந்தம் -



அலெக்ஸிஸ் காரெல் இப்படி கோழி உயிரணுக்களை தான் இருபது முப்பது வருடங்களுக்கு மேலாக விடாமல் வளர்த்து வருவதாக சொன்னது பலமுறை செய்தித்தாள்களில் செய்தியாக வந்து மக்களை கவர்ந்து இருக்கிறது. ஆனால் அதே முறையில் கோழி உயிரணுக்களை மற்ற ஆய்வாளர்கள் வளர்க்க முயன்றபோது அவர்கள் அனைவரும் தோல்வியையே தழுவ வேண்டி இருந்தது.

இப்போதெல்லாம் எந்த ஒரு ஆய்வாளரும் அறிவிக்கும் ஒரு கண்டுபிடிப்பையோ அல்லது செய்முறையையோ வேறு ஆய்வகங்களால் திரும்ப செய்து சரிபார்க்க முடியவில்லை என்றால், உடனே



முதலில் அதை அறிவித்த ஆய்வாளரின் சட்டையை பிடித்துக் தூக்கி விடுவார்கள். உதாரணத்திற்கு தென் கொரியாவின் ஹ்வாங்க் வூ-சுக் என்ற கால்நடை ஆய்வாளர் தான் மனித மரபணுக்களை நகலியல் உத்திகளை (cloning techniques) உபயோகித்து நகல் எடுத்து விட்டதாக 2005இல் அறிவித்து, அடுத்த வருடம் உதை வாங்கிக்கொண்டு ஓடிய கதையை விக்கிபீடியாவில் தேடி வாசிக்கலாம்.

அந்தக்காலத்தில் காரலை அப்படி கேள்வி கேட்க யாருக்கும் தைரியம் இல்லை. கடைசியில் 1944இல் அவர் தலை சாய்த்தபின் அவர் உதவியாளர்களிடம் பேசிப்பார்த்தபோது, தினமும் அந்தக் கோழி உயிரணுக்கள் வளர அவர் கொடுத்துக்கொண்டு இருந்த இரகசிய ஜூஸில் புதிய உயிரணுக்கள் இருந்தது தெரிய வந்தது.

இந்த விஷயம் தெரிந்தும் முப்பது வருடங்களாக அவர் உலகை ஏமாற்றிக்கொண்டு இருந்தாரா அல்லது அவருக்கும் ஒரிஜினல் கோழி உயிரணுக்கள் எப்போதோ மடிந்து விட்டன என்ற உண்மை புரியவில்லையா என்ற புதிர் கடைசிவரை விடுபடவே இல்லை. மொத்தத்தில் சுமார் நாற்பது வருடங்கள் பல விஞ்ஞானிகள் ஒரு தவறான நம்பிக்கையுடன் தலை சொறிந்துகொண்டு இருந்ததுதான் மிச்சம்.

உயிரணுக்களைப் படைக்கும் மரபணுக்கள்

உயிரணுக்கள் வளரும் விதத்தை பற்றி எட்டாம் வகுப்பில் படித்ததை கொஞ்சம் நினைவு படுத்திக்கொள்ளலாம். 1665லேயே நம்மால் அறிந்து கொள்ளப்பட்ட உயிரணுக்கள் உயிர் வாழும் எல்லா உயிரினங்களிலும் காணப்படும் மிகவும் அடிப்படையான ஒரு செயற்பாட்டு உறுப்பு. ஒவ்வொரு மனிதனிடமும் சராசரியாக ஒரு கோடி கோடி (அதாவது 100 டிரில்லியன்) உயிரணுக்கள் உண்டு என்பதிலிருந்து ஒவ்வொரு உயிரணுவும் எவ்வளவு பெரியது என்பது நமக்கு புரிகிறது.

ஒவ்வொரு மனித உயிரணுக்குள்ளும் படத்தில் காட்டியுள்ளது போல் ஒரு உட்கரு உண்டு. அந்த உட்கருவுக்குள் உட்கார்ந்து கொண்டிருக்கும் இருபத்திமூன்று குரோமோசோம் என்கிற டி.என்.ஏ மூலக்கூறு ஜோடிகளில் (படத்தில் ஓ போல தோன்றுபவை) நம் ஒவ்வொருவரின் கண் நிறம், உயரம் மாதிரி விஷயங்களில் இருந்து ஆரம்பித்து, பிற்காலத்தில் புற்றுநோய் வரும் சாத்தியக்கூறு வரை விலாவரியான ஜாதகக்குறிப்புகள் இரகசிய மாய் பதிவு செய்யபட்டு இருக்கின்றன.

டி.என்.ஏ என்பது ஒரு ஏணியை நீள வட்டத்தில் யாரோ முறுக்கி வைத்தது போன்ற இரட்டை திருகுச்சுழல் தோற்றத்தை கொண்டது. படத்தில் காட்டியுள்ளது போல ஏணியின் படிகளாக இருக்கும் மூலக்கூறுகளில் நமது பரம்பரை சம்பந்தப்பட்ட குணாதிசயங்களை பொதிந்து வைதிருக்கும் மரபணுக்கள் (Genes) அமர்ந்திருக்கின்றன. டி.என்.ஏ வின் பங்காளியாய் உட்கருவில் கூட அமர்ந்திருக்கும் ஆர்.என்.ஏ சமாச்சாரம் உயிரணுக்களில் இருக்கும் எல்லா விஷயங்களையும் நகலெடுப்பது எப்படி என்பது பற்றிய நிரல்களை கொண்டிருக்கிறது.

இந்த உட்கருவை சுற்றி ஒரு மெல்லிய தோல், அதற்கு வெளியே ப்ரோடோப்லாஸம் ஏரி. அதைச்சுற்றி உயிரணுச்சுவர். இன்னும் விலாவாரி யாக எழுதிக்கொண்டே போனால் இதுவே ஒரு புத்தகமாகிவிடும் என்பதால் உயிரணு என்றால் என்ன என்ற விவரணையை இப்போதைக்கு போதும் என்று நிறுத்திக்கொள்வோம்.

இந்த உயிரணுக்களின் வளர்ச்சி என்பது என்னவோ இனப்பெருக்கம் போல் இல்லாமல் நகலெடுத்தல் போல்தான் நிகழ்கிறது. மைட்டோசிஸ் (Mitosis) என்று சொல்லப்படும் அந்த வளர் முறைப்படி, ஒரு தனி உயிரணு ஆர்.என்.ஏ நிரல் மற்றும் பல சமிக்ஞைகளுக்கு உட்பட்டு, தன்வழி வரும் ஊட்டச்சத்தை ஏற்று பெரிதாகி, குரோமோ-சோம் டி.என்.ஏ எல்லாவற்றையும் ஒரு நகல் எடுத்துக்கொண்டு, இரண்டாவது உட்கருவை உருவாக்கி, பின் அந்த இரண்டாவது உட்கருவும் பாதி ப்ரோடோப்லாஸமும் ஒரு பக்கமாக தனி குடித்தனம் துவங்கி, ஒரு உயிரணுச்சுவரையும் இடையே கட்டி முடித்தவுடன், ஒரு காலத்தில் தனியாக இருந்த அந்த உயிரணு, இப்போது இரண்டு உயிரணுக்களாக படத்தில் காட்டியுள்ளது போல் வாழ்க்கையை தொடருகிறது அல்லது தொடங்குகின்றன.

(தொடரும்)

---

ராஜு முருகன் ரொம்ப நல்லவர். அவரைப் போன்ற நல்லவர்களைப் பார்ப்பது அரிது. ஆனால் அவர் விகடனில் எழுதிய வட்டியும் முதலும் என்ற தொடர் எனக்கு மிகவும் அருவருப்பாக இருந்தது. சகிக்கவே முடியவில்லை. அதனால் சில வாரங்களுக்கு மேல் அதைப் படிக்கவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் மிகவும் விரும்பி வாசிக்கப்பட்ட பத்தி அது. எல்லோரும் அப்போது அது பற்றியே பேசினார்கள். 100 வாரங்கள் தொடர்ந்து வந்தது. அவ்வளவு காலம் ஒரு பத்தி வெளிவந்தது இல்லை. இடையே இடையே படித்துப் பார்த்து, அருவருப்பு தாங்காமல் ஓடி வந்திருக்கிறேன்.

குக்கூவில் வன்முறை இல்லைதான். ஆனால் அது ஒரு fetish படம். ஃபெடிஷ் ரசனை அசிங்கமாகவும், அருவருப்பாகவும், ஆபாசமாகவும் இருக்கும். அங்காடித் தெருவை ஃபெடிஷ் படம் என்று எழுதியிருந்தேன். ஆனால் அங்காடித் தெருவெல்லாம் எவ்வளவோ தேவலாம் என்பது மாதிரியான படு மோசமான fetish படம் குக்கூ. குற்றவாளிகளிடமிருந்து உண்மையை வரவழைப்பதற்காக மலத்தை மூத்திரத்தில் கரைத்துக் கொடுத்து சித்ரவதை செய்வார்கள் என்று சில நாவல்களில் படித்திருக்கிறேன். கேள்விப்பட்டும் இருக்கிறேன். குக்கூவில் ராஜு முருகன் அதைத்தான் செய்திருக்கிறார்.

கண்பார்வையற்ற தமிழ் என்ற பாத்திரமாக நடித்திருப்பவர் இரண்டரை மணி நேரம் செய்யும்




fetish காரியங்கள் தான் குக்கூ. குக்கூவில் வன்முறை இல்லை என்றா சொன்னேன்? தவறு. தமிழுக்குக் கண் மட்டும்தான் தெரியாதா? இல்லையென்றால் அவருக்குக் காக்காய் வலிப்பும் உண்டா? ஒருவர் காக்காய் வலிப்பு வந்து துடிப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். குக்கூவில் தமிழ் இரண்டரை மணி நேரத்துக்கு காக்காய் வலிப்பில் துடிக்கிறார். அதன் பெயர் நடிப்பாம்! அடப் பாவிகளா! இப்படி இரண்டரை மணி நேரத்துக்கு நன்றாக இருக்கும் உடம்பை காக்காய் வலிப்பு வந்த மாதிரி இழுத்துக் கொண்டிருந்தால் அந்த உடம்பு என்னத்துக்கு ஆகும்? கண் தானே தெரியவில்லை; அதற்காக ஏன் அந்த மனிதர் உடம்பின் அத்தனை உறுப்புகளையும் அப்படிப் போட்டு இழுக்கிறார்? உங்களுக்கெல்லாம் இரக்கமே இல்லையா? இப்படியெல்லாம் செய்தால்தான் தமிழ் சினிமா இரசிகர்களை அழவைக்க முடியுமா? தமிழ்ச் சமூகத்துக்கு வந்த சோதனையைப் பாருங்கள்.

ஒரு காட்சியில் மும்பை ரயில் நிலையத்தில் இருக்கும் தன் காதலியைத் தேடி மும்பை கிளம்புகிறார் தமிழ். அதுதான் க்ளைமாக்ஸ் காட்சி. பொதுவாகத் தமிழ்ப் படங்களில் சாதாரணமாக இருக்கும் ஹீரோவே காதலியைத் தேடி ஓடினால் இந்த உலகத்தில் உள்ள அத்தனை கஷ்டங்களையும் அடைவான். லொரி அவன் மீது மோதும். அவன் தலையில் இடி விழும். புலி அவனைத் துரத்தும். கீழே விழுந்து கால் உடையும். அதோடேயே நொண்டி நொண்டிப் போய் கடைசியில் தன் காதலியை அடைவான் ஹீரோ. உடல் உறுப்பு அனைத்தும் நன்றாக இருக்கும் ஹீரோவுக்கே இந்த கதி என்றால், தமிழுக்கு ஏற்கனவே கண் தெரியாது. 24 மணி நேரமும் காக்காய் வலிப்பு வேறு. என்ன ஆகும்? கார் அவன் மீது மோதுகிறது. ஊர்வலக் கூட்டத்தில் மாட்டிக் கொள்கிறான். ரயில்வே பிளாட்ஃபாரத்தில் உள்ள இரும்புத் தூண் மீது டங் என்று மோதி மண்டை உடைகிறது. இன்னும் என்னென்னவோ நடக்கிறது.

ஒரு வணிக சினிமாவில் கூட சில காட்சிகளைப் பார்த்தால் கண் கலங்கி விடும். ஆனால் குக்கூவில் அருவருப்பும் ஆபாச உணர்வும் தான் மிஞ்சுகிறதே தவிர நெகிழ்ச்சி வருவதில்லை.

- சாரு நிவேதிதா -

---

## புற்று நோய் மருந்து

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஜேர்மானிய மருந்தாய்வு நிறுவனம் கத்தரிச்செடி வேர்களின் மருத்துவக் குணங்களைச் சோதிக்க விரும்பி இந்தியாவிலிருந்து அவற்றை இறக்குமதி செய்தது.

வழக்கப்படியே இந்திய ஏற்றுமதியாளர் கத்தரிச்செடி வேர்களுடன் கையிலகப்பட்ட காட்டுச் செடிகளின் வேர்களையும் கலப்படம் செய்து அனுப்பினர்.

ஜேர்மானிய நிறுவனம் ஏற்றுமதியாளர்கள் அனுப்பிய கலப்பட வேர்களில் புற்று நோயைத் தடுக்கும் மருந்துகள் இருப்பதைக் கண்டு கத்தரிச்செடி வேர் வேண்டாம். கலப்பட வேர்களை மட்டும் நிறையத் திரட்டி அனுப்பும்படி மறுபடியும் கோரியது. இவ்வாறுதான் ரயில் பாதை களில் கேட்பாரற்று மண்டிக்கிடந்த "நித்திய கல்யாணி" செடியின் மகத்துவம் கண்டுபிடிக்கப்பட்டது.


வரலாற்றில் கலப்படத்தால் ஏற்பட்ட ஒரே நன்மை இதுவொன்றே என்று கூறலாம்.





பூநகரி கோட்ட மட்ட தமிழ் மொழித்தினவிழா பூநகரி மத்திய கல்லூயில் கோட்டக்கல்விப்பணிப்பாளர் எஸ்.தருமரத்தினம் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், கேட்டக்கல்விப் பணிப்பாளர் உரையாற்றுவதையும், போட்டியில் முதலிடம் பெற்ற நாட கத்தையும் காணலாம். (112)

# மாற்றுவலுவுள்ள மாணவனுக்கு முச்சக்கர வண்டி அன்பளிப்பு



(திருநெல்வேலி)

போர் நடவடிக்கையின் போது தனது இரண்டு கால்களையும் இழந்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாணவனின் கல்விசெயற்பாட்டுக்கு உதவும் பொருட்டு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியினால் இம் மாணவனுக்கு முச்சக்கர வண்டியொன்று நேற்றுமுன்தினம் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து மகிந்த சிந்தனைக்கமைவாக வடமாகாண ஆளுநர் நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாபெறுமதியான முச்சக்கரவண்டியே மாணவனிடம் வழங்கப்பட்டது.

இம் மாணவன் தொடர்பாக ஆளுநருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து இம் மாணவனுக்குரிய உதவி வழங்கப்பட்டதாக ஆளுநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் விஞ்ஞானப் பிரிவில் கல்விகற்று 2பி, சி உயர்தரத்தில் சித்தி பெற்ற சிவபாதம் பிரசாத் என்னும் இம் மாணவன் யாழ். பல்கலைக்கழக மருத்துவப் பிரிவில் மூன்றாம் வருட மாணவனாக உள்ளார்.

யாழ்ப்பாணத்தில தங்கி நின்று கல்வி கற்கும் இம் மாணவனின் போக்குவரத்துக்கு வசதியாக வடமாகாண ஆளுநரினால் இம் முச்சக்கர வண்டி வழங்கப்பட்டது. இம் மாணவனின் சகோதரன் யானுஜனும் யாழ்.பல்கலைக்கழக மருத்துவப் பிரிவில் முதலாம் வருட மாணவனாக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (137)

# இன்னிசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையால் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இதில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு பக்கவாத்திய சகிதம் இன்னிசை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

# முரசின் இன்றைய பலன்



(09.04.2014 புதன்கிழமை)

விஜய வருஷம் பங்குனி மாதம் 26 ஆம் திகதி.
நவமி / சித்தம்.
பூச நட்சத்திரம் பி.ப. 01.43 வரை. பின் ஆயிலியம்.
இராகு காலம 12.07 - 01.37 வரை. சுபநேரம 10.37 - 12.07 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்** வியாபாரம் மந்த கதியில் நடப்பதால் கவலையடைதல், பணிசிறக்க சக ஊழியர்களை ஒத்தாசை புரிந்து தேக்கத்தை அற்றுப்போகச்செய்வர்.

**ரிஷபம்** தொழில் ஸ்தானத்தில் ஏற்றமான சூழ்நிலை உண்டாகும், காரிய சித்திக்கு நண்பர்கள் கைகொடுத்துதவுவர்.

**மிதுனம்** கலைஞர்கள், விளையாட்டுத்துறையினருக்குப் பரிசில்களும், பாராட்டும் கிடைக்கும், கொடுக்கல் மற்றும் வாங்கலில் சுமுகமான புரிந்துணர்வு ஏற்படும்.

**கடகம்** தூரத்து உறவினர்களின் வருகையினால் குடும்பத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடும், நீண்ட நாட்களாக வருத்திய நோயின் தாக்கம் குறைவடைதல்.

**சிம்மம்** மருத்துவச் செலவுகள் அதிகரித்துக் காணப்படும், திகதி தப்பிய பொருளைப் பெற்று கவலை தேக்கமுறல்.

**கன்னி** வியாபார விருத்திக்காக மேலும் ஒரு கிளை நிறுவனம் அமைக்க முழவு, வெளியூர் பயணம் பற்றிய செய்தி மனதிற்கு இன்பமூட்டும்.

**துலாம்** ஒதுங்கி இருந்தாலும் வீண் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிவருதல், கொடுக்கல்வாங்கல் சீராகவருதல்.

**விருச்சிகம்** குறித்த நேரத்தில் வேலையை முடித்துக்கொள்ள முடியாது திண்டாடுதல், விவாகப் பேச்சுவார்த்தை முடிவின்றி இழுபடல்.

**தனுசு** செயல்களின் குழப்பம் ஏற்பட்டுபின் சுமுக நிலையை அடைதல், தற்காலிக பதவி நீண்ட காலத்தின் பின் நிரந்தரமாதல்.

**மகரம்** குடும்ப சகிதம் மன அமைதி வேண்டி ஆலய தரிசனம் செய்யவிழைதல், வெளிநாடு செல்ல விருந்த வாய்ப்பு இழுபடல்.

**கும்பம்** சொத்து சம்பந்தமான பேச்சுக்கு மகிழ்வான செய்தி கிடைக்கும், திருமணத்தடை நீங்கி எதிர்பார்த்த வரன் கிடைக்கும்.

**மீனம்** தொழிலில் நிலவிக் காணப்பட்ட பாதிப்புக்கள் குறைவடையும், பழைய முதலீடுகளினால் இலாபம் அதிகரிக்கும், சுவீப் அதிர்ஷ்ட முண்டு.

# டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

மொறட்டுவ பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் தொழில் நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கு தெரிவு செய்வதற்காக தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித் தகைமை க.பொ.த.(உ/த) பரீட்சையில் இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதீகவியல், இரசாயனவியல் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்தோடு வயது 24 இற்கு குறைந்தவராக இருத்தல் அவசியமாகும்.

விண்ண்ப்பப்படிவங்களை www.mrt. ac.lk. itum என்ற இணையத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி ஆகும். பிரதிப் பதிவாளர் தொழில் நுட்பவியல், நிறுவனம், மொறட்டுவப் பல்கலைக்கழகம் மொறட்டுவ. என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (105)




# ஜய வருடம் உங்களுக்கு எப்படி?

**விருச்சிகம்**

அஷ்டமத்து வியாழன் 13.06.2014 வரை இருப்பதினால் புதிய முயற்சிகளை ஒத்திவையுங்கள். முகப்புத்தகம் மூலம் சிலரின் மானப்பிரச்சினையால் கௌரவம் காற்றில் பறக்கலாம். புதிய முயற்சிகள் இழுபட்டே வெற்றியைத்தரும். கர்ப்பச்சிதைவுகளை எதிர்பார்த்தே ஆகவேண்டும். தனிமையில் இருப்பதினால் திருடர் தொல்லை எதிரிகளின் அடாவடித்தனம் மேலோங்கும். பயனற்ற பொருட்களை கட்டியடிக்க முற்படலாம். 13.06.2014 இன் பின்னர் வியாழ சுகம் இருப்பதினால் முயற்சிகளில் காணப்பட்ட தடை தாமதங்கள் விலகும். பயணமுயற்சி வெற்றியைத்தரும். முகம் பார்த்துக் கதைப்பதன் மூலம் மனதின் துயரவெள்ளம் வடியும். அமெரிக்க லொத்தர் வீசா கிட்டலாம்.

பரீட்சையில் சித்தியடைந்து அதிகார பூர்வமான பதவிகள் கிடைக்கும். தற்காலிகமாக மனையாளைப் பிரிய வேண்டிய சங்கதி ஏற்படும். சிலர் சட்டவிரோதமான செயற்பாடுகளில் ஈடுபட்டு தண்டனை பெறுவர். பயணத்தின் போது அருகில் இருப்பவரைப்பற்றி எச்சரிக்கை நன்றாகும். கனடாவிற்கு செல்ல எண்ணிய பயணம் சிலரை கொழும்புடன் தடைப்படும். பயவுணர்ச்சியைக் கைவிட்டு துணிவுடன் செயலாற்றி காரிய சித்தியைப் பெறுங்கள். ஏழரைச் சனியும் அட்டமத்துக் குருவும் இருப்பினும் இராகு கேது என்பன 11/5 இல் இருப்பதினால் தலைக்கு வரும் துன்பங்கள் தலைப்பாகையுடன் சென்றுவிடும். கடந்த கால துயர்களை எண்ணி மனம் வருந்த வேண்டியேற்படும்.

(தொடரும்)

ஜோதிர் வித்யாரத்னா.
வி.ஏ.சிவராசா

# வறிய மாணவர்களுக்கு நிதியுதவி

## "தீபம்" நிறுவனத்தின் செயற்றிட்டம்

யாழ்.திருநெல்வேலி தீபம் நிறுவனம் யாழ்.மாவட்டத்தில் இனம் காணப்பட்ட 15 வறிய மாணவர்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா வீதம் கல்விமேம்பாட்டு நிதியாக வழங்கி வருகின்றது.

தீபம் நிறுவன இயக்குநர் சபை அங்கத்தவர்களான பேரா சிரியர் வ.ஆறுமுகம், பட்ட யக்கணக்காளர் ம.இராச நாயகம், வைத்திய கலாநிதி திருமதி .இ சிவராஜி ஆகியோரின் தீர்மானத்திற்கு அமையவே இந்த 15 மாணவர்களுக்கான கொடுப்பனவு கடந்தவாரம் முதல் வழங்கப்பட்டு வருகின்றது.

மேற்படி கல்வி மேம்பாட்டு நிதி 1000 ரூபா வீதம் மூன்று வருடங்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படவுள்ளது.

தீபம் நிறுவனத்தின் தலைமைப் பணிமனை திருநெல்வேலி பரமேஷ்வராச்சந்தியில் அமைந்துள்ளது.

# க.பொ.த.(சா/த) பரீட்சைப் பெறுபேறுகள் மீளாய்வுக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

2013 டிசம்பர் மாதம் நடை பெற்ற க.பொ.த (சா/த) பரீட்சையின் பெறுபேறு மீளாய்வு செய்தலுக்கான விண்ணப்பங்களை ஏப்ரல் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

பாடசாலை விண்ணப்பத்தாரிகள் அதிபரூடாகவும், தனிப்பட்ட விண்ணப்பத்தாரிகள் பதிவுத்தபாலில் பரீட்சை ஆணையாளர் நாயகம், மதிப்பீட்டு (பாடசாலை பரீட்சை) தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, இலங்கை பரீட்சை திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்

ஒரு பாடம் மீளாய்வு செய்வதற்கான கட்டணம் ரூபா 150 ஆகும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒவ்வொரு விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும். முக்கியமாக பெறுபேற்று அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி சுட்டெண், பரீட்சை நிலையத்தின் பெயர் பாடம் மற்றும் பாடஇலக்கம், பெற்றதரம், மொழி மூலம் என்பவற்றை சரியாக எழுதவேண்டுமென பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

கடித உறையின் இடது மேல் மூலையில் பெறுபேறு மீளாய்வு (சா/த) 2013 எனக் குறிப்பிடல் வேண்டும் தகவல் சரியானதாகவும்,விபரங்கள் பூரணமானதாகவும் குறித்த கட்டணம் செலுத்தியிருப்பதுடன் குறித்த திகதிக்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும் .(105)

# மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் மனையியல் கண்காட்சி

ஆடை வடிவமைத்தல் அழகியல் மற்றும் மனையியல் கண்காட்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் யாழ். மாவட்ட செயலக கிராமிய உத்தியோகத்தர் நவமணி அலோசியஸ் ஜெயராஜன் தலைமையில் இடம்பெறவுள்ளது. வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையங்களின் கைவினைப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்படவுள்ளன. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம் மற்றும் வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்கள பணிப்பாளர் ஜே.ஜே.சி. பெலிசியன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் எஸ்.கே. எழில்வேந்தன் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத் தலைவர் ந.தனேந்திரன் யாழ்.பிரதேச செயலக கிராம மாதர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். மேலும் இந் நிகழ்வில் படைப்பாளிகளுக்கான சான்றிதல்கள் வழங்களும் கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (63,05)

# நிர்வாக சேவை தரம் 111 போட்டிப் பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் வெளிவந்துள்ள மட்டுப்படுத்தப்பட்ட இலங்கை நிர்வாகசேவை தரம் 111 இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை முடிவுகளின் படி அகில இலங்கை ரீதியில் 37 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.இவர்களில் எட்டுப்பேர் தமிழர்களா வர்.

பொதுச்சேவை ஆணைக் குழுவினால் இவர்களது பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.


அவைவருமாறு, ஆர்.சி. அமலராஜ், எம்.இந்திரநேசன், எஸ். கனகாம்பிகை, எஸ். சுஜீவா, ஏ. ஜி.தெய்வேந்திரன், எவ்.ஏ. எவ் .பர்ஷானா, ஆர். திலகேஸ்வரி, ஏ. நவீஸ்வரன் ஆகியோராவர்.

# நூல் வெளியீட்டு விழா

சோ.பா.மற்றும் ஜெறாட் றொபுஷோன் இணைந்து தமிழாக்கம் செய்த ப்ளெய்ஸ் சென்ட்றார்ஸின் நெடும்பாவிஸ் "சைபீரிய றயில் வண்டி உரையும் பிரகன்ஸைக் சேர்ந்த குட்டி ஜேனும்" என்னும் நூல் வெளியிட்டுவிழா இன்று பி.ப.4 மணிக்கு அறை இல.207 புதிய கலைப்பீட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதனும், கௌரவ விருந்தினராக கலாநிதி திருமதி அ.சிவபாலனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆய்வுரையினை செல்வி தாரணி சுந்தரலிங்கமும், ட.ரமணும் நிகழ்த்தவுள்ளனர்.



நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தின் மஞ்சத் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. (63)

# ஆயுர்வேதம்



பித்தத்தின் இயற்கை குணமாகிய சூடு மற்றும் நீர்த்தன்மை மேலெழுந்து வருவதால் தொண்டையில் எரிச்சல், உணவை விழுங்கும்போது தொண்டையில் வலி போன்றன ஏற்படலாம். வாய், குரல்வளை, காதில் கூட எரிச்சல் ஏற்படும். படுத்திருக்கும் நிலையில் பித்தத்தின் மேலெழுந்து வரும் தன்மை எளிதாக இருப்பதால், உட்கார்ந்த நிலையை விட, படுத்திருக்கும் நிலையில் இந்த உபாதைகள் அதிகமாகத் தெரியும்.

வாய், குரல்வளை, தொண்டை, உணவுக்குழாய்ப் பகுதிகள் கபதோஷத்தின் இயற்கையான நெய்ப்பு, குளிர்ச்சி, கனம், மந்தம் போன்ற குணங்களின் ஆதிக்கப் பகுதிகளாகும். அதன் அடிப்பகுதியாகிய வயிறு மற்றும் சிறுகுடல் பகுதிகளில் நெருப்புக் குழம்பாக பித்தம் கனன்று கொண்டிருக்கிறது.

அப்பகுதிகளில் நெருப்பின் அம்சம் கொண்ட மிளகாய், பெருங்காயம், பட்டை, சோம்பு, கரம் மசாலா, புளி, உப்பு, எண்ணெய் ஆகியவை உணவாக வரும் நிலையில், பித்தம் கிளறிவிடப்பட்டு, எரிமலையின் உட்பகுதியில் தீப்பிழம்புகள் வெடித்துக் குழம்பாக, அமைதியான மேற்பரப்பின் வழியாக வெளியே ஓடி நிலத்தில் பரவுவதுபோல, பித்தம் தன்னுடைய இடத்தை விட்டு, அமைதியான கபத்தினுடைய பகுதிகளில் வழிந்தோடுகிறது. அதனால் எரிச்சலையும் வலியையும் ஏற்படுத்துகிறது.

இதுபோன்ற நிலையில், சோதனம் என்றும், சமனம் என்றும் இருவகையான சிகிச்சைகளை ஆயுர்வேதம் உபதேசிக்கிறது. மேலெழும் பித்தத்தை சோதனம் அதாவது அதை உடலிலிருந்து வெளியேற்றி, உடலைச் சுத்தப்படுத்துதல் எனும் சிகிச்சை முறை உத்தமமானது.

பித்தத்தைச் சுத்தமாக வெளியேற்றும் சிகிச்சை முறைகளில் பேதி மூலம் வெளியேற்றுவதுதான் சிறந்தது. அதற்கு த்ரிவ்ருத் லேஹியம், அவிபத்தி சூரணம், த்ரிபலை கஷாயம் போன்றவற்றில் ஒன்றைச் சாப்பிடுவது நல்லது. குடலின் தன்மைக்கு ஏற்ப இவற்றைத் தேர்ந்தெடுத்து சாப்பிடுவது அவசியமாகும். பேதி மருந்து சாப்பிடும் அளவிற்கு உடலில் வலுவிருந்தால், இந்தச் சிகிச்சை முறைதான் சிறந்தது.

பேதி மருந்தைச் சாப்பிடும் அளவிற்கு உடலில் வலுவில்லாதிருந்தால், சமனம் அதாவது பித்த சீற்றத்தைத் கபத்தினுடைய இடத்திலிருந்து அடக்கி, அதன் இருப்பிடத்திற்கே திருப்பி அனுப்புவது என்ற சிகிச்சை முறை நல்லது. ம்ருத்வீகாதி லேஹியம், பரூ\காதி லேஹியம், சங்கபஸ்மம், அப்ரகபஸ்மம், குடூச்யாதி கஷாயம் போன்றவற்றில் ஒன்றிரண்டை மருத்துவரின் ஆலோசனையுடன் சாப்பிடுவது சிறந்தது.

தொண்டை எரிச்சல், வலி, குரல்வளை உபாதைகளில் பொதுவாகவே அதிமதுரத்தூள் சிறந்தது. அதிமதுரத்தின் வேர் குளிர்ச்சியானது, இனிப்பானது, சிறுநீர் போக்கை எளிதாக்கும், மலச்சிக்கலைப் போக்கும். தொண்டை மற்றும் வயிற்றுப் புண் ஆற்றும். பாடகர்கள் அதிமதுரத்தூளைச் சாப்பிட்டால், ஸ்வரம் நன்றாக வரும் என்று பாவப்பிரகாசர் எனும் முனிவர் குறிப்பிடுகிறார். யஷ்டி மது அல்லது மது யஷ்டி என்ற பெயரில் இது விற்கப்படுகிறது.

உடல்நிறத்தைக் கூட்டி முடிவளர்ச்சியையும் துரிதப்படுத்தும் அதிமதுரத்தூளை சுமார் ஒரு கரண்டி (2.5 கிராம்) அளவில் எடுத்து 1 கரண்டி (5 மி.லீ.) சுத்தமான தேனுடன் குழைத்து காலை, இரவு உணவிற்குப் பிறகு நக்கிச் சாப்பிடவும். இதன் மூலம் உபாதைகள் நீங்கி, உடல் வனப்பையும், உடல் வலுவையும் கூட்டலாம்.

இந்த உபாதைகள் உள்ளவர்கள் உணவில் காரம், புளி, உப்பைக் குறைக்கவும். கசப்பு மற்றும் துவர்ப்புச் சுவையை அதிகம் சேர்த்துக் கொள்ளவும். இனிப்பு வகைகளை மிதமாகச் சாப்பிடலாம்.

## மருத்துவ குணமுள்ள காட்டாமணக்கு

காட்டாமணக்கு தடிகளை கிராமத்திலுள்ள மக்கள் பல் துலக்கப் பயன்படுத்துவர். இதனால் பல் சொத்தை, பற்சிதைவை உண்டாக்கும் கிருமிகள் அழிக்கப்படுகின்றன. காட்டாமணக்கு இலைச்சாறும் மருத்துவத்திற்கு உதவுகிறது. இதைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் மருந்துகள் மலேரியா, மூட்டுவலி, தசைவலிக்கு மருந்தாகப் பயன்படுகின்றன. மேலும், மஞ்சள் காமாலை, இருமல், கக்குவான், புற்றுநோய், வயிற்றுப்புண், நிமோனியா, வீக்கம், வாதநோய்களைக் குணப்படுத்தவும் உதவுகின்றன. இதன் வேரிலிருந்து தயாரிக்கப்படும் மருந்துகள் பாம்புக்கடிக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படுகின்றன. வேரை இடித்து சாறாக்கி கொப்பளித்தால் பல் ஈறுகளில் இருந்து வடியும் ரத்தக்கசிஹுவ உடனடியாக நிறுத்தலாம்.

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த தையல் இயந்திரங்கள் வழங்கல்



தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்காக இருபது பயனாளிகளுக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியின் கீழ் தையல் இயந்திரங்கள் கையளிக்கப்பட்டன.

மேற்படி தையல் இயந்திரங்களை ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக்குழுத்தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) அண்மையில் வழங்கி வைத்தார். இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் அரசினால் தனிநபர் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்காக வழங்கப்படும் இவ்வாறான உதவித் திட்டங்கள் எவ்வாறான வகையிலும் துஷ்பிரயோகம் செய்யபபடாது சரியான முறையில் பயன்படுத்தப்படவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலனின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் திட்டப்பணிப்பாளர் திருமதி இரகுநாதன், உதவிப் பிரதேசசெயலர் செல்வி.நிரஞ்சனா, ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி இணைப்பாளரும் சாவகச்சேரி நகரசபை எதிரக கட்சித் தலைவருமான தூசைமுத்து அலெக்ஸாண்டர் (சாள்ஸ்) கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

10 ஆயிரம் தாதியர்களுக்கு பற்றாக்குறை

# இளைப்பாறிய தாதியர்களை சேவைக்கு அழைக்க தீர்மானம்

இளைப்பாறிய தாதிமார்களை விருப்பத்தின் பேரில் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் சேவைக்காக அழைக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. ஆஸ்பத்திரிகளில் நிலவும் தாதிமார் பற்றாக் குறையை நீக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

டாக்டர்களும் தாதிமாரும் வெளிநாடு செல்கின்றனர். அநேகப் பேர் இளைப்பாறுகின்றனர். இதனால் பற்றாக்குறை உருவாகியுள்ளது. வெளிநாடுகளுக்குச் செல்வதற்காக வாராந்தம் டாக்டர்மார்கள், தாதிமார்கள் ஆகியோரின் 50 கடிதக் கோவைகளில் கையொப்பமிட நேர்ந்துள்ளது. விருப்பமான நாட்டுக்குச் சென்று விருப்பமான தொழிலைப் புரியும் மனித உரிமை அவர்களுக்கு இருப்பதால் இக்கடிதங்களும் கைச்சாத்திடுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். நாடு பூராவும் தாதிமார்களைப் பொறுத்த வரை 10,000 பேருக்கான பற்றாக்குறை நிலவுகிறது. இச்சவாலை வெற்றிகொள்ள ஏதாவதொரு செயற்பாட்டை அமுலாக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

# தூக்குத் தண்டனையை அமுல்படுத்துமாறு 28, 780 பார்வையாளர்கள் கோரிக்கை

கண்டி போகம்பரை சிறைச் சாலையை பார்வையிட வந்த அநேகர் தூக்குத்தண்டனையை மீள அமுல்படுத்த வேண்டுமெனக் கோரியுள்ளனர். போகம்பரை சிறைச்சாலை பொதுமக்கள் பார்வைக்காக திறந்து வைக்கப்பட்டிருந்ததோடு இங்கு வருகை தந்த 28,780 பேர் தூக்குத் தண்டனையை மீண்டும் அமுல்படுத்துமாறு தெரிவித்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் சந்திர ரத்ன பல்லேகம தெரிவித்தார்.

போகம்பரை சிறைச்சாலை அரசாங்கத்திடம் கையளிப்பதற்கு முன்னர் கடந்த 15 ஆம் திகதி முதல 2 ஆம் திகதி வரை பொதுமக்கள் பார்வையிடுவதற்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் காலப்பகுதியினுள் சுமார் 11 இலட்சம் பொதுமக்கள் சிறைச்சாலையை பார்வையிட வந்ததாக ஆணையாளர் கூறினார். பார்வையிட வந்த மக்களிடையே தூக்குத்தண்டனை குறித்து கணிபபீடு மேற்கொள்ளப்பட்டது. இவர்களில் 28,780 பேர் தூக்குத்தண்டனை மீண்டும் அமுல்படுத்தப்பட வேண்டும் எனக் கோரியுள்ளனர்.

பொதுமக்களின் இந்தக் கருத்துக்களை அரசாங்கத்துக்கு அறிவிப்பதற்காக சிறைச்சாலை புனர்வாழ்வு அமைச்சின் செயலாளரிடம் கையளிக்க இருபபதாக சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்தார்.

இதேவேளை அலுகோசு பதவி வெற்றிடத்துக்கு புதியவர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# விண்ணப்பம் கோரல்

தொழில்நுட்பவியல் மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் அணுசக்தி அதிகார சபையில் காணப்படும் வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. வயது 35 -45 வயதுக்குட்பட்ட உடல், உள நலமுடைய சிறந்த நன்னடத்தையுடைய நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கல்வித் தகைமையாக பல்கலைக்கழக பட்டதாரிகள், முகாமைத்துவ அனுபவம், கணனி, தகவல் தொழில்நுட்ப அறிவும் தேவை.

வெற்றிடமாகவுள்ள பதவிகளாவன - பொறித்தொகுதி செயற்பாட்டு முகாமையாளர் பதவி, சபை செயலாளர், சட்ட அலுவலர் பதவி, விஞ்ஞானம் சார் அலுவலர், நிதி அலுவலர், தொழிலநுட்ப உதவியாளர் தரம் III.

தொழில்நுட்ப உதவியாளர் பதவிக்கு க.பொ.த சா/த, உ/த பரட்சையில் விஞ்ஞானத் துறையில் சிததியுடன் இருவருட டிப்ளோ மாவை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் தவிசாளர், அணுசக்தி அதிகார சபை, 60/460, பேஸ்லைன் வீதி ஒறுகொடவத்த, வெல்லம்பிட்டிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பும்போது கடித உறையின் இடதுமேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடல் அவசியமாகும். ஆட்சேர்ப்பு எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும். பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குட்பட்டது மாகும். (105)

# மோசடி தொலைபேசிகளுக்கு விரைவில் இலங்கையில் தடை

பதிவு செய்யப்படாத மற்றும் மோசடியான முறையில் இலங்கைக்கு கொண்டு வந்து விற்பனை செய்யப்படும் கையடக்க தொலைபேசிகளை தொலைபேசி வலையமைப்புகள் தடை செய்வதற்கான நடவடிக்கை விரைவில் மேற்கொள்ளப்படும் என சம்சுங் நிறுவனத்தின் இலங்கைக்கான தலைமை அதிகாரி மஞ்சுள தஹநாயக்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நாட்டினுள் கொண்டு வரப்படும் தொலைபேசிகள் இலங்கையின் தொலைத்தொடர்புகள் வலையமைப்புகளிலிருந்து தடைசெய்யப்படும். ஒரு வலையமைப்பிலிருந்து மற்றுமொரு வலையமைப்புக்குரிய சிம் அட்டையை பயன்படுத்தினால் கூட அந்தக் கையடக்க தொலைபேசியை பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் சுற்றாடல் தொடர்பான சிக்கல்களை தவிர்க்கும் வகையில் இந்தச் செயற்பாட்டை அறிமுகம் செய்ய வேண்டியதேவை காணப்படுகின்றது என்றார்.

இலங்கையின் ஸ்மார்ட் போன்கள் சந்தையில் சம்சுங் கையடக்க தொலைபேசிகள் முன்னணியில் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# அதியுயர் வட்டி வீதங்களை நிர்ணயித்தது மத்திய வங்கி

நிதி நிறுவனங்களில் வைப்புச் செய்யப்படும் பணத்துக்கான வட்டி வீதம் 7.5 முதல் 12 வீதத்தினுள் அமைந்திருக்க வேண்டும் என மத்திய வங்கி நிர்ணயித்துள்ளது.

பணம் வைப்பிலிடப்படும் கால எல்லைக்கமைவாக, இந்த இடைப்பட்ட பெறுமதியில் மாற்றம் ஏற்படுத்தலாம் என மத்திய வங்கி மேலும் அறிவித்துள்ளது.

ஏப்ரல் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும்வகையில் இந்த அறிவித்தலை சகல நிதி சார் நிறுவனங்களுக்கும் மத்திய வங்கி வழங்கியுள்ளது.

சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கப்படக்கூடிய அதியுயர் வட்டி வீதம் வருடமொன்றுக்கு 7.58 வீதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நிலையான வைப்புகளுக்கு 1 வருடம் வரையிலான வைப்புகளுக்கு 11.01 வீதமும், 1 வருடத்துக்கு மேற்பட்ட ஆனாலும், 3 வருடங்களுக்கு குறைவான வைப்புகளுக்கு 12.01 வீதமும், 3 வருடங்களுக்கு மேற்பட்ட வைப்புகளுக்கு 13.51 வீதமும் வழங்கப்படவேண்டும் என மத்திய வங்கி மேலும் குறிப்பிட்டுள்ளது.

# "பேஸ்புக்கால்" வந்தது வினை வவுனியாவில் பெண் தற்கொலை முயற்சி

வவுனியாவில் இளம் பெண்ணின் படம் ஆணொருவருடன் நிர்வாணமாக பேஸ்புக்கில் வந்ததால் நேற்று முன்தினம் குறித்த பெண் தற்கொலைக்கு முயற்சி செய்துள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மன்னார் வீதிக்கு அண்மையில் வசித்து வந்த 29 வயதுடைய குறித்த பெண்ணின் படத்துடன் சேர்த்து ஆண் ( பாஸ்ரர்) ஒருவரின் படமும் பேஸ்புக்கில் நிர்வாணமாக வந்த தால் நஞ்சுண்டு தற்கொலைக்கு முயறசி செய்துள்ளார்.

அதாவது அப்பெண்ணின் முகத்தை நிர்வாணப் பெண்ணின் படத்துடன் இணைத்து, அததோடு அப்பெண்ணின் நண்பரான ஆண் (பாஸ்ரர்) ஒருவரின் படத்தையும் இணைத்து அப்புகைப்படங்கள் பேஸ்புக் (முகநூலல்) பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த பெண் வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வரும்வேளை பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

# பூஸாவில் தாயாரை பார்வையிட விபூசிகாவுக்கு நீதிமன்றம் அனுமதி

பூஸா தடுப்பு முகாமில் வைக்கப்பட்டுள்ள ஜெயக்குமாரியை அவரது மகள் விபூசிகா சென்று பார்வையிடுவதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளளது.

கடந்த 31 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றில் சிறுமி விபூசிகா சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் பூஸாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தாயாரைச் சென்று பார்ப்பதற்கும் வீட்டிற்குச் சென்று அவரது உடமைகளை எடுத்து வருவதற்கும் சிறுமிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

இதனையடுத்தே நீதிவான் இந்த அனுமதியை வழங்கியுள்ளார். அதன்படி சிறுவர் நன்னடத்தை அதிகாரி, மகாதேவா சிறுவர் இல்லத் தலைவர் மற்றும் பொலிஸார் ஆகியோர் சிறுமியை அவரது வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். அத்துடன் தாயாரைப் பார்ப்பதற்கு தேவையான ஆவணங்களையும் தமது பகுதி கிராம சேவையாளரிடம் இருந்து விபூசிகா பெற்றுக் கொண்டுள்ளார்.

இராணுவத்தினராலும் பொலிஸாராலும் தேடப்பட்டுவரும் கோபி என்கின்ற சந்தேக நபருக்கு அடைக்கலம் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கடந்த மாதம் 13 ஆம் திகதி ஜெயக்குமாரியும் விபூசிகாவும் தர்மபுரத்தில் உள்ள அவர்களது வீட்டிலிருந்து கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கிராமத்தின் பொதுத் தேவைக்கு அரச காணியை வழங்கக் கோரிக்கை

மன்னார் உப்புக்குளம் தெற்கு கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பேருந்து நிலையத்திற்கு பின்புறமாக அமைந்துள்ள அரச காணியினை, கிராமத்தின் பொதுத்தேவைகளுக்கு வழங்குமாறு உப்புக்குளம் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் உப தலைவர் எம்.கே.பௌசீன் மன்னார் நகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக எழுத்து மூலம் தனது கோரிக்கையை விடுத்துள்ளார்.

அக்கடிதத்தில் குறித்த காணியினை அக்கிராமத்தைச் சேர்ந்த சிலர் அபகரிக்கும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றனர். தற்போது குறித்த காணிக்கு அடாததாக சுற்று வேலிகளை அமைத்து வருகின்றனர். அதற்கு எமது கிராம மக்கள் எதிர்ப்பை தெரிவிக்கின்றோம்.

மன்னார் நகர சபை இக்கிராமத்திற்கு தேவையான பொதுத் தேவைகளை நிறை வேற்ற இக்காணியை ஒதுக்கித்தர வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் உப்புக்குளம் கிராம மக்கள் கையொப்பமிட்டு அதன் பிரதிகள் மன்னார் அரசாங்க அதிபர, பிரதேசச் செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# கல்வி முரசின் பயிற்சி பரீட்சை -2014

## வெவ்வேறு தரங்களுக்கிடையிலான பயிற்சி வினாத்தாள்கள்

**கணிதம்**

### தரம் - 06

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக**

1) $\frac{24}{5}$ ஐ கலப்புப்பின்னமாக தருக?

2) வட்டவடிவான பொருட்கள் 5 தருக?

3) 375 x 15 பெருக்குக.

4) 203545h சாதாரண முறையில் தருக.

5) (-5) ☐ (-3) ஒப்பிடுக

6) 47 ஐ கிட்டி ய 10 த்திற்கு மட்டம் தட்டுக.

7) விரிகோணம் 4 தருக?

8) $\frac{2}{3}$ இற்கு 2 சமவலுப்பின்னம் தருக.

9) நூறுக்களின் இடப்பெறுமானம் 5 ஆகவும் ஒன்றின் இடத்து பெறுமானம் 4 ஆகவும் உள்ள 4 இலக்க எண்கள் 3 தருக.

10) 330 ÷ 15 வகுக்க

11) இரண்டு மில்லியன் நாற்பதாயிரத்து பத்து என்பதனை நியமமுறையில் எழுதுக.

12) 18 நிமிடத்தை செக்கனில் தருக

13) A = 3 என்பதை எண்கோட்டில் குறித்துக் காட்டுக

14) (-2), 5, (-3), 0 ஏறுவரிசையில் எழுதுக

15) $\frac{5}{7}$ என்னும் பின்னத்தை படம் வரைந்து குறிக்க.

#### பகுதி II

**விரும்பிய 5 வினாக்களுக்கு மட்டும் விடை தருக**

01) i) 4063 ஐ விரித்து எழுதுக
ii) 24547536546 வலயங்களாக வேறுபடுத்தி அட்டவணையில் தருக
iii) 743 425 300 வாசிக்கும் முறையை எழுதுக.

02) i) 7 என்ற எண்ணிற்கான கூட்டற்பிணைப்பினை எழுதுக.
ii) ஒரு தொலைக்காட்சிப் பெட்டியின் விலை ரூ.45235 உம் ஒரு கணனியின் விலை ரூ. 83 250 உம் ஆகும். இரண்டிற்குமான மொத்த தொகை யாது?
iii) ஒருவரிடம் இருந்த ரூபா 25750 இல் ரூபா 15375 ஐ செலவு செய்தார் எனின் எஞ்சிய தொகை யாது?

03) i) 2013, 14 ஜனவரி ஐ நியம முறையில் எழுதுக.
ii)

| மணி | நிமிடம் |
|---|---|
| 18 | 45 |
| 12 | 55 |

iii) 74 மணித்தியாலத்தை நாள், மணித்தியாலத்தில் தருக.

04) i) 4 என்னும் எண்ணை எண்கோட்டில் குறித்து அதன் எதிர்ப்புள்ளியையும் குறிக்க.
ii) (-4), 0, (-2) எண்கோட்டில் குறிக்க
iii) 62 + 35 - 25 ஐ கிட்டிய 10 ற்கு மட்டம் தட்டி சுருக்குக

05) $\frac{12}{16}$ எளிய வடிவாக்குக.

ii) $\frac{3}{5} + \frac{1}{3}$ கூட்டுக.

iii) $\frac{7}{8} - \frac{2}{5}$ கழிக்குக

06) ரவியின் வீட்டுக்கு கிழக்குத் திசையில் மைதானமும், வடக்குத் திசையில் கோயிலும் மேற்குத் திசையில் பேருந்து நிலையமும் தெற்குத் திசையில் சுரேஸ் வீடும் உள்ளது. இதனை பரும்படி படமாக குறித்துக்காட்டுக.

### தரம் - 07

1) சதுரம் ஒன்றிற்கு எத்தனை சமச்சீர் அச்சுக்கள் உண்டு?

2) 1206 எனும் எண்ணின் இலக்கச் சுட்டியைக் காண்க.

3) $\frac{16}{28}$ எனும் பின்னத்தை எளிய வடிவில் தருக.


4) சுருக்குக $\frac{1}{5} + \frac{2}{5}$

5) ஏறுவரிசைப்படுத்துக. -3, 3, 0, 6, -7

6) A = { 10இலும் குறைந்த ஒற்றை எண்கள் } எனும் தொடையை மூலகங்களுடன் பட்டியல்படுத்தி வென் உருவில் குறித்துக் காட்டுக.

7) இன்றைய திகதியை சர்வதேச நியம முறையில் எழுதுக.

8) 5 x 5x 5 x5 என்பதை வலுவடிவில் தருக.




1) இக் கோணத்தில் பெயரை எழுதுக?
2) இக் கோணத்தில் வகை யாது?

9) 12,15 இன் பொ.ம.சியைக் காண்க.

10) X = 2 ஆகும் போது இன் பெறுமானத்தைக் காண்க.

11) 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் உள்ள நாட்களின் எண்ணிக்கை யாது?

12) 1 நாளில் உள்ள செக்கனில் எண்ணிக்கை எவ்வளவு?

13) 7.03kg ஐ g இல் தருக.


14) கூட்டுக. (-3) + 5

15) $\frac{2}{3}$ எனும் முறைமைப் பின்னத்திற்கு இரண்டு சமவலுப் பின்னங்கள் எழுதுக.

16) 216 என்னும் எண்ணை 6 இன் வலுவில் எழுதுக.

17) 24 இன் எல்லாக் காரணிகளையும் எழுதுக.

18) நிறம் தீட்டிய பகுதி முழு உருவத் தினமும் என்ன பின்னமாகும்.

19)  எனும் குறியீட்டை பெட்டியினுள் இடுக.

20) >,< குறியீட்டை பெட்டியினுள் இடுக. $\frac{5}{8}$ ☐ $\frac{3}{4}$

#### பகுதி - II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களிற்கு மட்டும் விடை தருக.**

| | | | | |
|---|---|---|---|---|
| $\frac{9}{10}$ | $5\frac{4}{7}$ | $\frac{1}{6}$ | $\frac{5}{8}$ | $5\frac{5}{6}$ |
| $2\frac{1}{2}$ | $\frac{1}{10}$ | $1\frac{1}{3}$ | $\frac{10}{8}$ | $\frac{15}{6}$ |

***மேலே உள்ள அட்டவணையை பயன்படுத்தி வினாக்களுக்கு விடை தருக.***

1) மேலே தரப்பட்ட பின்னங்களை அலகுப் பின்னம்,முறைமைப் பின்னம், முறைமையற்ற பின்னம் கலப்புப்பின்னம் என அட்டவணைப் படுத்துக.

2) மேலே தரப்பட்ட அலகுப் பின்னங்கள் எல்லாவற்றையும் கூட்டுக.


3) பகுதி எண் 8 ஆக உள்ள முறைமையற்ற பின்னத்தை கலப் பெண்ணாக மாற்றுக.

4) பகுதி எண் 6 கொண்ட கலப்பெண்ணை முறைமையற்ற பின்னமாக மாற்றுக.

5) அட்டவணையில் உள்ள இரு முறைமைப் பின்னங்களை ஒப்பிடுக.

6) பகுதி எண் 8 ஆக உள்ள முறைமைப் பின்னத்தை தசம தானத்தில் தருக.

## தரம் - 08




2) மேலே உள்ள தொடையைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களிற்கு விடை தருக.


1) தொடை x ஐ சொற்களில் விபரித்து எழுதுக.

2) தொடை x இல் இருந்து இரட்டை எண் தொடையை மூலகங்களாக எழுதி a எனப் பெயரிடுக.

3) தொடை x இல் இருந்து சதுர எண் தொடைக்குரிய மூலகங்களை இனம் கண்டு வெண் உருவில் காட்டி எனப் பெயரிடுக.

4) தொடை x இல் இருந்து முக்கோணி எண்களின் தொடையை பட்டியல் இட்டு எழுதி C எனப் பெயரிடுக.

3) தரப்பட்ட உருவில் உள்ள




1) கோணத்தில் வகை யாது?
2) கோணத்தில் பெயரைத் எழுதுகு.
3) கோணத்தில் புயங்களை எழுதுக.

b) பாகை மானியைப் பயன்படுத்தி 60 கோணத்தை வரைக.

c) நிமிடமுள் $120^0$ இனால் சுழலும் போது கடிகாரத்தின் நேரம் எத்தனை நிமிடம் மாறுபடும்?

4) 1) விரித்து தெழுதுக.
$2^3 \times a^4$

2) விரித்து தெழுதி பெறுமானம் காண்க.
$2^3 \times 3^2$

3) பெட்டியை நிரப்புக. $343 = \square^5$

. 4.x 2, y = 5 எனின் $xy^2$ இன் பெறுமதி யாது?

5) கூட்டுக.

1.

| வருடம் | மாதம் | நாள் |
|---|---|---|
| 4 | 5 | 20 |
| 1 | 6 | 15 |

2. கழிக்குக.

| மணி | நிமிடம் | செக்கன் |
|---|---|---|
| 5 | 40 | 20 |
| 1 | 45 | 3 |

3. பெருக்குக kg g

| | |
|---|---|
| 3 | 450 |
| x | 5 |

வகுக்குக
27 kg 68 g ÷ 4

6) வெற்றிடத்தை நிரப்புக

a)
1) (+5) (8)
2) (-2,5) + (-3)

b) எண் கோடு வரைந்து பின்வரும் எண்களைக் குறிக்குக
a = 2, B = -1.5

C) பின்வரும் எண்களை முதன்மை காரணிகளின் பெருக்கமாகத் தருக.
12 =
18 =

இதில் இருந்து

1)12,18 இன் பொ.கா.பெ ஐக் காண்க.

1. (i) 15 ஆவது ஒற்றை எண் யாது?

(ii) 98 எத்தனையாவது இரட்டை எண்?

(iii) 12 ஆவது 7 இன் மடங்கைக் காண்க?

(iv) 147 எத்தனையாவது 3 இன் மடங்கு?


(v) 169 எத்தனையாவது சதுர எண்?

(vi) 63 இனால் காட்டப்படுவது எத்தனையாவது முக்கோண எண்?

(vii) 1 தொடக்கம் 40 வரையுள்ள இயற்கை எண்களின் கூட்டுத்தொகை எத்தனையாவது முக்கோண எண்? கூட்டுத்தொகை யாது?


(viii) 30,33,36,39...என்ற தொடரின் பொது உறுப்பு யாது?

(ix) பொது உறுப்பு 2n3 ஆகவுள்ள தொடரின் முதல் 4 உறுப்புக்களையும் எழுதுக?



(x) இவ் உருவிலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?

2. 1) பின்வரும் உருவங்களின் சுற்றளவுகளைக் காண்க.




(ii)


a) சமபக்க முக்கோணம் ஒன்றின் ஒரு பக்க நீளம் 12cm அதன் சுற்றளவு யாது?

b) மேற்குறித்த முக்கோணியின் சுற்றளவிற்குச் சமனான சுற்றளவுடைய சதுரம் ஒன்றின் ஒரு பக்க நீளம் யாது?

(iii) ஒரு செவ்வகத்தின் நீளம் அதன் அகலத்திலும் 3cm கூடியது அதன் அகலம் a cm எனின்,

a) அதன் நீளம் யாது?
b) செவ்வகத்தின் சுற்றளவிற்கான கோவையை a சார்பாகக் தருக?
c) சுற்றளவு 50cm எனின் a இன் பெறுமானத்தைக் கண்டு செவ்வகத்தின் நீளத்தைக் காண்க.

3) கீறிட்ட இடம் நிரப்புக




(i) a இன் ஒத்த கோணம்.... ஆகும்


(ii) .... இன் ஒன்று விட்ட கோணம் f ஆகும்


(iii) d,g ஆகிய கோணங்கள் -------- கோணங்கள் ஆகும்

(iv) ---- இன் ஒத்த கோணம் h ஆகும்

(v) a இன் நேயக்கோணம் --------- ஆகும்.

**பின்வரும் உருக்களின் ஆங்கில எழுத்துக்களால் குறிப்பிட்ட கோணத்தின் பருமனைக் காண்க.**



# அந்த கறுப்புப் பட்டியலில் உள்ளவர்கள் யார்?

நேற்றைய தொடர்ச்சியை இங்கு தருகிறோம்.

கந்தசாமி சேகரன் தொ.பே. இல :- 004597855692, 004529449531, பிறந்த திகதி:- 31.03.1965, பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை :- டென்மார்க்கில் வசிக்கிறார் .

வேலுப்பிள்ளை நித்தியானந்தவேல் தொ.பே. இல:- 004549220297, பிறந்த திகதி:- 03.08.1949, டென்மார்க்கில் வசிக்கிறார்.

விலாசம் (வெளிநாடு):- ஹெஸ் டென்ஸ் பெக்கே - 311 டீஎச் - 3000, ஹெல்சிங்குர், டென்மார்க,

நிமலநாதன் செல்லையா அல்லது பவன் அல்லது நிமல் தொ.பே. இல :- 00455883787, 004523283197, கடவுச்சீட்டு இல :- 101455048. டென்மார்க்கில் வசிக்கிறார், விலாசம் (இலங்கை) :- நுணாவில் மேற்கு, சாவகச்சேரி, விலாசம் (வெளிநாடு) :- கிலெனட் வெஜ் 8 - 4270. வொங், டென மார்க் :- மகாலிங்கம் மகாத் பனீ அல்லது ராக் தொ.பே. இல :- 004575614646,

பிறந்த திகதி:- 02.02.1970, பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை :- டென் மார்க்கில் வசிககிறார். விலாசம் (இலங்கை) :- அச்சுவேலி வடக்கு, யாழ்ப்பாணம், விலாசம் (வெளிநாடு) :- எச்ஸ் ரெப்ரக் 6V 1Bஎச் - 8700, வோர் சென்ஸ், டெனமார்க், சண்முகராசா செந்தில்குமரன் அல்லது செந்தில், தொ.பே. இல :- 004576721107, 004525619 640, கடவுச்சீட்டு இல :- 500234130, பிறந்த திகதி:- 09.06.1981, பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை :- டென் மார்க்கில் வசிக்கிறார., விலாசம் (இலங்கை) வல்வெட்டித்துறை, விலாசம் (வெளிநாடு) :- டிங்பார்கன் - 2 எஸ் டீ ஆர், டீவி 7200, கிரைன்டெட்.

டென்மார்க், ஜேசுதாஸன் பிரான்சிசன் விஜேந்திரன் அல்லது ஜெயபாலன் தொ.பே. இல :- 004597410374, 004551520 772, கடவுச்சீட்டு இல :- L 107 8033, பிறந்த திகதி:- 03.12.1969, குடியுரிமை :- டென்மார்க்கில் வசிக்கிறார், விலாசம் (இலங்கை) :- கடற்கரை வீதி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், விலாசம் (வெளிநாடு) :-

ஜேஏ டீஈ, காரடன் - 47 எஸ் டீடீஎச், டென்மார்க், அன்னலிங்கம் சற்குணலிங்கம் அல்லது ராஜு பதவி பெயர்: வி.கி. பதவி: வி.கி. தொ.பே. இல :- 004559262920, 004521283810 கடவுசசீட்டு இல :- 100572560, பிறந்த திகதி:- 02.02.1963, வி.கி குடியுரிமை :- டென்மார்க்கில் வசிககிறார் , விலாசம் (இலங்கை) 1 ஆம் பிரிவு, மந்தத்வு, யாழ்ப்பாணம் , விலாசம் (வெளிநாடு) :- நிக்பிங் வெட் - 68, 4591, பிகிய் லுலன் ஸ் லெவ, டென்மார்க், சிவஞானம் ஸ்ரீதாஸன் பதவி பெயர்: வி.கி. பதவி: வி.கி. தொ.பே. இல :- 97856406, கடவுச்சீட்டு இல :- 101800579, பிறநத திகதி:- 08.04.1965, குடியுரிமை :- டென் மார்க் கில் வசிக்கிறார் , விலாசம் (இலங்கை) :- குப்பிலான், விலாசம் (வெளிநாடு) :- சொன்டெர்கெட், 54 2 ஆம் , 7600, இஸ்ருவர், டென்மார்க், :- ரங்கநாதன் கந்தசாமி அல்லது பாபு பதவி பெயர்: வி.கி. பதவி: வி.கி. தொ.பே. இல :- 98626972, 61106701, கடவுச்சீட்டு இல :- யு 00329 9435, பிறந்த திகதி:- 25.12.1969, பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை :- டென்மார்க்கில் வசிக்கிறார். விலாசம் (இலங்கை) :- வி.கி. விலாசம் (வெளிநாடு) :- எக் கெர்சன்ட் வெஜ் - 45, 9660 ஆர்ஸ் , டென்மார்க் , :-கணபதிப்பிள்ளை தனபால சிங்கம் அல்லது பாலு, தொ.பே. இல :- 86345679, கடவுச்சீட்டு இல :- வி.கி பிறந்த திகதி:- 30.07.1963, பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை :- டென்மார்க்கில் வசிக்கிறார் , விலாசம் (இலங்கை) :- உடுதுறை வடக்கு, தாளையடி, பலாலி, விலாசம் (வெளி நாடு) :- ஜரிஸ் பவட் 9, 8400 எபல டொப்ட், டென்மார்க்.

ஜெயஸ்ரீதரன் முருகேசு அல்லது ஜ் வா பதவி பெயர் : தொ.பே. இல :- 32599745, 51896513, கடவுச்சீட்டு இல :- 102225317, பிறந்த திகதி :- 10.04.1962, பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை :- டென்மார்க்கில் வசிக்கிறார்,

விலாசம் (இலங்கை) :- மயு,ரம் அல்வாய் அல்வாய் வடககு, அல்வாய், விலாசம் (வெளிநாடு) டென்மார்க் , அருளேஸ்வரம் வல்லியபுரம் பதவி தொ.பே. இல :- 64414056, கடவுசசீட்டு பிறந்த திகதி:- 15.03.1969, பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை :- டென் மார்க்கில் வசிக்கிறார், விலாசம் (இலங்கை) கோயிலமனை, கொடிகாமம் , விலாசம் (வெளிநாடு) :- இஸ டேசன்ஸ் வெஜ் 35 எஸ் டீ, டீவி 5500 மிட்ல்பார்ட் , டென்மார்க்.

ஞானசலனீ மரியம்பிள்ளை, தொ.பே. இல :- 65301572, 24422587, கடவுச்சீட்டு இல :- 100935662, பிறந்த திகதி:- 05.01.1976, பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை :- டென்மார்க்கில் வசிக்கிறார், விலாசம் (இலங்கை) வி.கி விலாசம் (வெளிநாடு) :- இஸ்ப்ரோடொப்டென் 60 1 டீவி, 5800 நைபேர்க் , டென்மார்க் , செல்லையா ஆனந்தன் அல்லது ஆனந்தன் பதவி பெயர்: வி.கி. பதவி: வி.கி., தொ.பே. இல:- 51726431, கடவுச்சீட்டு இல:- வி.கி பிறந்த திகதி:- 27.06.1975, (இலங்கை):- மந்துவல் தெற்கு, சாவகச்சேரி, விலாசம் (வெளிநாடு) :- புரோர்சன்ஸ் வெஜ் 27 - 2 ஆம், 7400 ஹேர்னிங், டென்மார்க்,

செல்லையா உதயமனோகரன் அல்லது உதயன் பதவி தொ.பே. இல :- 0045586341431, 00456173634 கடவுச்சீட்டு இல :- 101640220, பிறந்த திகதி:- 09.01.1971, பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை :- டென்மார்க்கில் வசிக்கிறார், விலாசம் (இலங்கை) வெட்டியராயன் வடக்கு, தாளையடி, விலாசம் (வெளிநாடு) :- லிஸ்னின்ஜென் - 118400, எபெல் டொபட் , டென்மார்க்.

பெஞ்ஜமின் அந்தோனி பெரனான்டோ அல்லது அந்தோனி தொ.பே. இல :- 004597841306, 004561671306, கடவுசீட்டு இல :- 102062983, பிறந்த திகதி:- 05.02.1967, டென்மார்க்கில் வசிக்கிறார், விலாசம் (இலங்கை) :- வெற்றிலைக்கேணி, புதுக்குடியிருப்பு, விலாசம் (வெளிநாடு) 7, 7600 இஸரூவர் , டென்மார்க். குணதாஸ் பாலசுந்தரம், தொ.பே. இல :-97211328, 24916497, கடவுச்சீட்டு இல :- வி.கி பிறந்த திகதி:- 11.10.1964, பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை :- டென்மார்க்கில் வசிக்கிறார், விலாசம் (இலங்கை) :- பருத்தித்துறை, யாழ்ப்பாணம், விலாசம் (வெளிநாடு) :- பிரேண்ட கார்ட் வெஜ் 37, 7400, ஹேர்னிங், டென்மார்க்.

நடராசா ரவிச்சந்திரன் அல்லது ரவி, பதவி பெயர்: வி.கி. பதவி: வி.கி. தொ.பே. இல :- 004597209025, கடவுச்சீட்டு இல :- யு 003453976,பிறந்த திகதி:- 22.02.1961, குடியுரிமை :- டென்மார்க்கில் வசிக்கிறார், விலாசம் (இலங்கை) :- 15/1, நாச்சியம்மையார் கோயில் வீதி, யாழ்ப்பாணம், விலாசம் (வெளிநாடு) :- வெஸ்ரேர் டோர்ப் 6, 7400, ஹேர்னிங், டென்மார்க்.

முத்துலிங்கம் ராசலிங்கம் அல்லது அலெக்ஸ் அல்லது பவுன், தொ.பே. இல :- 004575910654, 004522324254, கடவுச்சீட்டு இல :- A 003891720, பிறந்த திகதி:- 25.12.1960, குடியுரிமை :- டென்மார்க்கில் வசிக்கிறார், விலாசம் (இலங்கை) :- எட்வகேட் ஒழுங்கை, வல்வெட்டித்துறை, விலாசம் (வெளிநாடு) எஸ்கியூண்டர்மார்க்ஸ் வெஜ் 70 எஸ் டீஎச், 7000 பிரேடர்சிமா, டென்மார்க்.

செல்லையா புஷ்பராஜா, தொ.பே. இல :- 00358440880131, கடவுச்சீட்டு இல இல:-16111516, பிறந்த திகதி:- 12.04.1979, குடியுரிமை :- பின்லாந்தில் வசிக்கிறார். விலாசம் (இலங்கை) :- ஞானிமடம், பூநகரி, கிளிநொச்சி, விலாசம் (வெளிநாடு) :- இசிக் கோடை 7 ஏ வண்டா, பின்லாந்து.

தவராசா நித்திராஜா, தொ.பே. இல :- 004597841306, 004561671306, கடவுச்சீட்டு இல 139858685, பிறந்த திக்தி:- 18.08.1963, பிறந்த குடியுரிமை :- பிரான்சில் வசிக்கிறார்,

பகுதி I : தொகுதி ( I) (இலங்கை) :- தொண்டமானாறு, யாழ்ப்பாணம் விலாசம (வெளிநாடு) :- இடல்லீ டெரைர்ரே வெஸ்மர்ஸ் 95400 வில்லியர்ஸ், லீ பெல்.

பெயர் :- கருணாநிதி துரைரததினம் அல்லது துரை, தொ.பே. இல :- 0664656395, கடவுச்சீட்டு இல :- F 750320938, பிறந்த திகதி:- 05.03.1969, பிறந்த இடம்:- வி.கி குடியுரிமை :- பிரான்சில் வசிக்கிறார். விலாசம் (இலங்கை) :- வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை, விலாசம் (வெளிநாடு) :- 14, ரூ மயூரைஸ், பியூரோ, 93000 - பொபிக்னி,

மகேந்திரராஜா உதயனன் அல்லது உதயன், தொ.பே. இல:- 033610531034, 033760056064, கடவுச்சீட்டு இல :- 03 வுர் 93760, பிறந்த திகதி :- 25.02.1977, பிறந்த இடம் :- வி.கி குடியுரிமை:-

பிரான்சில் வசிக்கிறார் , விலாசம் (இலங்கை):- புளியங்கூடல் கைதடி, விலாசம் (வெளிநாடு):- இசட் ரெக்ஸ்ச்டீரீ (CDT) போசட் 77186 நொரியல், பிரான்ஸ், :- பெர்னான்டோ மைக்கல ஏஞ்சலோ அல்லது செல்வம், இல :- 613326312, கடவுச்சீட்டு இல:- எம் 1595825, பிறந்த திகதி:- 13.03.1968, பிரான்சில் வசிக்கிறார், விலாசம் (இலங்கை) :- வல்வெட்டித்துறை வீதி, சங்கானை, விலாசம் (வெளிநாடு) :- பார்க்வயன் ஜெட் 7, 7600 இஸ்ரூவர், பிரான்ஸ்.

கந்தையா அருமைச்செல்வம் , பதவி பெயர் : வி.கி. பதவி: வி.கி. தொ.பே. இல :- 600634264, கடவுச்சீட்டு இல:- 031044189, பிறந்த திகதி:- 30.03.1955, குடியுரிமை :- பிரான்சில் வசிக்கிறார், (இலங்கை) :- ஏழாலை மகா வித்தியாலயம் வீதி, ஏழாலை, விலாசம் (வெளிநாடு) :- 93 ஏ வி பஸ்டியுர், லே ப்லன்ல்மெஸ் நில் 93150, பிரான்ஸ். *(தொடரும்...)*

கந்தசாமி வித்தியாரூபன், தொ.பே. இல :- 0143019377, 0663689447, கடவுச்சீட்டு இல :- 65 DK 37001, பிறந்த திகதி:-

## தவக்கால நற்சிந்தனை

### கூட்டுமுயற்சியே பாராட்டுக்கு அவசியமானது



நாம் வீட்டில் உணவு தயாரித்து விட்டு திறம்படத் தயாரிதது விட்டோம் என பெருமிதம் கொள்வதோடு மற்றையவர்களின் பாராடடுக்களையும் பெறவேண்டும் என எணணுவோம் ஆனால் இந்த உணவினைத் தயாரிக்க எத்தனை பேர் கஸ்ரங்களை அனுபவித்துள்ளனர். எத்தனை பேரின் உழைப்புக்கள் இதில் உள்ளது என நாம் ஒருபோதும் சிந்திப்பதில்லை.

அதேபோல்தான் மனித சமுதாயக் கட்டமைப்பும் திறமைகளையும் ஆற்றல்களையும் கொண்டோரின் கூட்டு முயற்சியால் தான் கட்டி எழுப்பப்படவேண்டும். எனவேதான் தூய ஆவியானவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அருட்கொடைகளை வழங்கியுள்ளார். ஞானம், நிறைவு, செல்வமும், அறிவும் சேர்ந்த சொல்லாற்றல், நம்பிக்கை, வல்லமை மிக்க ஆற்றல், பரவசப் பேச்சுத்திறன் போன்ற பல்வேறு திறமைகளை தூய ஆவியானவர் ஒவ்வொருவருக்கும் வழங்கியுள்ளார்.

இவ்வாறு எமக்கு வழங்கப்பட்ட அரிய கொடைகளை நாம் ஒருபோதும் இழந்ததில்லையா? எமக்கு கொடுக்கப்பட்ட இந்தத் திறமைகளை நாம் துஷ்பிரயோகம் செய்ததில்லையா, சற்றுச் சிந்தித்துப் பார்ப்போம். பல்வேறு வயல்களில் விளைந்த கோதுமை மணிகள் ஒன்று சேர்ந்த வெண்மைநிற அப்பத்தை “இறை உடலை” நாம் பெறுவதில்லையா?

எனவே அனைத்துத் தரப்பினருடைய திறமைகள் வல்லமைகள் அதிகாரங்கள் அறிவு சேர்மதி நுட்பங்களை புரிந்துகொண்டு ஒன்றாக இணைந்து ஒரு புதிய இறை சமுதாயத்தை உருவாக்க எம்மாலான முயற்சியில் ஈடுபடுவோம்...

## மகா கும்பாபிஷேகம்

வடமராட்சி கல்லுவம் கரணவாய் மேற்கு திருவருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று காலை ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.20 முதல் 10.15 மணிவரையுள்ள சுப வேளை யில் கும்பாபிஷேகம் ஆரம்ப மாகி நடைபெறவுள்ளதுடன் கும்பாபிஷேக கிரிஜைகள் ஆலய பிரதம குரு சிவத்திரு ச.பால சிறி தலைமையில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 11 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 21 ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. (18)

## மகாபொல வழங்கும் நிகழ்வு

கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வியாபார அமைச்சின் ஏற்பாட்டில் 2011, 2012 ஆம் கல்வி யாண்டு பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கான மகாபொல புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 12 ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் புலமைப்பரிசு பெறும் மாணவர்கள் மு.ப 8.15 மணிக்கு மாவட்ட செயலகத்திற்கு வருகை தரவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.




**வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர் கண்ணகியம்மன் ஆலயத்தின் இரத்ததான நிகழ்வு அண்மையில் நடைபெற்றபோது... (63)**

# மதச்சார்பற்ற ஆட்சிக்கு தி.மு.க. ஆதரவளிக்கும்

## கருணாநிதி தெரிவிப்பு

(தமிழ்நாடு)


மக்களவைத் தேர்தலுக்கு பிறகு மத்தியில் மதச் சார்பற்ற ஆட்சி அமைக்க யார் அழைத்தாலும், அவர்களுக்கு ஆதரவு அளிப்போம் என்று தி.மு.க தலைவர் மு.கருணாநிதி கூறியுள்ளார்.

சேலம் போஸ் மைதானத்தில் மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நடைபெற்ற பிரசார பொதுக்கூட்டத்தில் பேசிய கருணாநிதி, தமிழகத்தில் சிலர் கருணாநிதி தனியாக நிற்கிறார்.

அரசியல் கட்சிகள் அவரைக் கைவிட்டு விட்டன என்கின்றனர். "கை" தான் என்னை விட்டு விட்டது என்றாலும், யாரும் என்னைக் கைவிடவில்லை, கைவிடவும் முடியாது.

அடித்தட்டு மக்களுக்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகளைத் தொடர வேண்டும் என்ற ஒரு காரணத்துக்காக மதச்சார்பற்ற முறையில் ஒரு ஆட்சி நடைபெற யார் "கை" கொடுத்தாலும் அந்தக் கையைக் குலுக்கி வரவேற்போம்.

அதற்காக தி.மு.க.வின் தலையாய கொள்கைகளான சாதி மறுப்பு, மதவாத மறுப்பு போன்ற கொள்கைகளை, பெரியார், அண்ணா உருவாக்கிக் கொடுத்த இலட்சியங்களை நாங்கள் கைவிட மாட்டோம். சிறுபான்மையினருக்கு யார் உதவ முன் வருகின்றனரோ, யார் தோழ



மையுடன் உள்ளனரோ அவர்களுடன்தான் இனிவரும் காலத்தில் உறவு அமையும் என கூறியுள்ளார்.


# ஹொங்ஹொங் விவகாரத்தில் அமெரிக்கா தலையிடக்கூடாது

## சீனா வலியுறுத்து

ஹொங்ஹொங் விவகாரத்தில் அமெரிக்கா தலையிடக்கூடாது என சீனா வலியுறுத்தியுள்ளது.

ஹொங்ஹொங்கில் நடைபெறவுள்ள 2017 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில், சீனா ஆதரவு வேட்பாளர்கள் வெற்றி பெற வேண்டும் என அந்நாடு தீவிர முயற்சியை மேற்கொண்டு வருகிறது.

ஹொங்காங்கில் ஜனநாயக முறையில் தேர்தலை நடத்த கோரும் தலைவர்களான ஆன்சன் சான் மற்றும் மார்டின் லீ ஆகியோர், கடந்த 4 ஆம் திகதி வொஷிங்டன் நகரில் உள்ள வெள்ளை மாளிகையில் அமெரிக்காவின் துணை ஜனாதிபதி ஜோசப் பிடனை சந்தித்து பேசி



னார்கள்.


ஆனால் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த சீனா தங்களது நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா தலையிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் இல்லையென்றால் இருநாடுகளின் உறவிலும் பெரும் பாதிப்பு ஏற்படும் எனவும் எச்சரித்துள்ளது.

உலகச் செய்திகள்

# கூடங்குளம் அணுமின் விவகாரம் ரஷ்யாவுடனான ஒப்பந்தத்திற்கு அனுமதி

கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 3 மற்றும் 4 ஆவது யூனிட் தொடங்குவது தொடர்பாக ரஷ்யாவுடன் ஒப்பந்தம் செய்துகொள்ள மத்திய அணுசக்தி துறைக்கு தேர்தல் ஆணையம் ஒப்புதல் வழங்கியுள்ளது. இதையடுத்து இதற்கான ஒப்பந்தம் விரைவில் கையெழுத்தாகும் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து அணுசக்தி துறையின் அதிகாரி ஒருவர் கூறுகையில், "தேர்தல் ஆணையகத்தின் இந்த ஒப்புதல் கடந்த வார இறுதியில் கிடைத்தது. எனவே இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல எங்களுக்கு தடையேதும் இல்லை" என்றார்.



இந்நிலையில் அணுசக்தி துறையின் கீழ் இயங்கும் பொதுத்துறை நிறுவனமான இந்திய அணு மின்சார கழகம், இந்த ஒப்பந்தம் தொடர்பாக ரஷ்ய அதிகாரிகளை தொடர்பு கொண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

"இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும் திகதியை இருதரப்பு அதிகாரிகளும் முடிவு செய்வார்கள். இம்மாதத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு விரைவில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகும்" என்று அந்த அதிகாரி கூறினார்.

பிரதமர் மன்மோகன் சிங் கடந்த ஒக்டோபர் மாதம் ரஷ்யா சென்றபோது, கூடங்குளத்தின் 3 மற்றும் 4 ஆவது யூனிட் தொடர்பாக ஒப்பந்தம் செய்து கொள்ள திட்டமிடப்பட்டிருந்தது.

என்றாலும் அணு உலை விபத்து இழப்பீடு தொடர்பாக இரு நாடுகள் இடையே உடன்பாடு ஏற்படாததால் இந்த ஒப்பந்தம் கையெழுத்தாகவில்லை. இதையடுத்து இரு நாடுகளிடையே நடைபெற்ற தொடர் பேச்சுவார்த்தைக்குப் பிறகு இப்பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்பட்டுள்ளது.

# உடலுக்குள் ஊடுருவி சிகிச்சை செய்யும் 'ரோபோ'

(லண்டன்)

நோயாளியின் உடலுக்குள் ஊடுருவி, அறுவை சிகிச்சை செய்யும், சிறிய ரோபோவை விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர். அமெரிக்காவின், நெப்ராஸ்கா - லிங்கன் பல்கலை விஞ்ஞானிகள், இதை வடிவமைத்துள்ளனர். "டைனி ரோபோ சர்ஜன்" என்று பெயரிடப்பட்ட, இந்த ரோபோ, சிறு கீறல் மூலம், வயிற்றுக்குள் ஊடுருவி, குடல் பகுதியில், அறுவை சிகிச்சையை மேற்கொள்ளும்.

இந்த அறுவை சிகிச்சை மூலம், குடல் புண்கள், குடல்வால் நோய் ஆகியவை சரி செய்யப்படும். காயங்களை தைப்பதற்கும், இந்த ரோபோ சர்ஜன் உதவுகிறது. டாக்டர்களின் கண்காணிப்பில், இயக்கப்படும் இக்கருவியால், இது இயங்கும் எனக் கூறப்படுகிறது.

# நந்திதாதாஸிற்கு உயரிய விருது



2014 ஆம் ஆண்டுக்கான யேல் ஃபெல்லோ விருதினை பிரபல நடிகை நந்திதா தாஸ் மற்றும் காத்ரெஜ் இந்திய கலாசார மையத்தின் தலைவர் பர்மேஷ் ஷஹானி ஆகிய 2 இந்தியர்களுக்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் நடுநிலை சிந்தனையாளர்களைத் தேர்வு செய்து யேல் ஃபெல்லோ' விருதுகள் வழங்கப்படுகிறது.

பிறக்கும் குழந்தை இறப்பு விகிதம், பாலின ரீதியான வேறுபாடு, இனவாத பிரச்சினைகள், பெண்களுக்கு எதிரான வன்முறை என்று பல பிரச்சினைகள் குறித்து விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொண்டதற்காக நந்திதா தாஸுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது.

இம்முறை இத்தாலியின் ரோபோடிக் ஆய்வாளர், பாகிஸ்தான் வழக்கறிஞர், சிரியாவுக்கான அமைதி தூதர் என உலக அளவில் 15 பேர் இந்த பட்டியலில் இடம்பெற்றுள்ளனர்.

யேல் பல்கலைக்கழகம் வழங்கும் இந்த விருது நடுநிலை சிந்தனையாளர்கள், தெளிவான நற்சிந்தனை 'போக்குடன் செயல்படும் நபர்களுக்கு வருடம் தோறும் வழங்கப்படுகிறது.

2002 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படும் யேல் விருது பட்டியலில் இதுவரை இந்தியர்களே அதிக அளவில் இடம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



அரசு முறை பயணமாக, அவுஸ்ரேலிய பிரதமர் டோனி அபோட், ஜப்பான் சென்றுள்ளார். தலைநகர் டோக்கியோவில் அவரை வரவேற்கிறார் பிரதமர் ஷின்சோ அபே.

# தீவிரவாதிகளின் இருப்பிடமாக மாறிவிட்டது கேரள மாநிலம்

## மோடி தெரிவிப்பு

கேரள மாநிலம் பயங்கரவாதிகளின் புகலிடமாக மாறிவிட்டது என நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். பாரதீய ஜனதா வேட்பாளர் நரேந்திரமோடி நேற்றுமுன்தினம் கேரள மாநிலம் காசர் கோட்டில் தேர்தல பிரசாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது,

கடவுளின் சொந்த நாடு என பெயர் பெற்ற கேரளாவில் இருந்து இளைஞர்கள் வெளிநாட்டுக்கு வேலை தேடி செல்வது மிகவும் கவலையான விடயம். கேரளாவில் எல்.டி.எப்.க்கும், யு.டி.எப்.,க்கும் இடையில் எழுதப்படாத ஒப்பந்தம் உள்ளதால், கேரளா முன்னேற்றமில்லாமல் மோசமான நிலையில் உள்ளது.

இதை மாற்ற பா.ஜ.கவுக்கு வாய்ப்பு கொடுங்கள் பாரதீய



ஜனதாவுக்கு தற்போது ஆதரவு பெருகிவருகிறது என்பதை பிரசார கூட்டங்களில் கற்பனைக்கு எட்டாத அளவிற்கு உற்சாகமாக திரண்டு வரும் கூட்டத்தை பார்த்து உணர முடிகிறது.

மிக விரைவில் கேரளாவிற்கு நல்லது நடக்கும். கேரள கடற்கரைகளில் இருந்து உப்பு தயாரிக்கலாம். சுற்றுலா பயணிகளின் சொர்க்கமாக இருந்த கேரளா தற்போது பயங்கரவாதிகளின் புகலிடமாக மாறிவிட்டது இது தடுக்கப்படவேண்டியது. மிக அவசியமான ஒன்று என மோடி தெரிவித்தார்.

# நிலச்சரிவில் சிக்கி 7பேர் பலி

சீனாவின் வடபகுதியில் உள்ள ஷான்சி பிராந்தியத்தில் நேற்று முன்தினம் அதிகாலை நிலச்சரிவு ஏற்பட்டது. இந்த நிலச்சரிவில் சிக்கி 7 பேர் பலியானார்கள். சீனாவின் ஷான்சி பிராந்தியத்தில் பள்ளத்தாக்கு பகுதியான ஜியான் கவுன்டியில் உள்ள ஜிகுவான் கிராமத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. பூமியில் 2 ஆயிரம் மீற்றர் அளவுக்கு நிலச்சரிவு ஏற்பட்டதால், கிராமத்தில் இருந்த பல கட்டடங்கள் நொறுங்கி தரைமட்டமாயின. ஒரு கட்டடத்தின் இடிபாடுகளில் 8 பேர் உயிருடன் சிக்கி உள்ளனர். அவர்களை மீட்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

# மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி வேலணையில் முன் நகர்வு

வேலணைப் பிரதேச சபையும் வேலணைப் பிரதேச செயலகமும் இணைந்தவகையில் 30 கிராம அலுவலர் பிரிவுற்குமான மக்கள் பங்கேற்புடனான அபிவிருத்தி திட்டங்கள், முன்மாழிவுகள் தயாரிக்கப்படவுள்ளன.

எனவே கிராம ரீதியிலான திட்டங்கள் தயாரிக்கும் போது அக்கிராமத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள், பொது அமைப்புக்கள், பங்குத்தந்தையர் தேவபிரதிநிதிகள், கௌரவ சபையின் உறுப்பினர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் என பலரும் பங்களித்து உதவவேண்டும். என வேலணைப் பிரதேச சபைத் தவிசாளர் சி.சிவராசா (போல்)கேட்டுள்ளார்.

நாளையதினம் அல்லைப்பிட்டி கிராம அலுவலர் பிரிவில் முதலாவது கிராமத்திற்கான மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி முன்மொழிவுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்கு (2014-2018) இத்திட்டம் வலுவில் உள்ளதாக இருப்பதுடன் எதிர்காலத்தில் மக்களால் முன்வைக்கப்படும் திட்டங்கள் கௌரவசபைமூலம் அங்கீகரிக்கப்பட்டு திட்டங்கள் நிறைவுறும் இதற்காக அவுஸ்ரேலியா நிதி வடக்கு அபிவிருத்திக்காக வேலணை பிரதேச சபை உட்பட 34 உள்ளூராட்சிசபைகளுக்கும் முன்னெடுக்கப்படவுள்ளன. (92)

# யாழ்தேவி விரைவில் யாழ்ப்பாணம் வரும்

## நிறைவடையும் நிலையில் பணிகள்

பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் சேவைக்கான பணிகள் துரித கதியில் இடம்பெற்று வரும் நிலையில் இதன் ஓர் அங்கமாக தண்டவாளத்தைக் கடந்து செல்லும் வீதிகளுக்கு தன்னியக்க சிக்னல்கள் பொருத்தும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. நாவற்குளி வரை ரயில் பாதை அமைக்கும் பணிகள் முடிவுறும் நிலையில் உள்ளன. மக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் வீதிகளுக்கு தன்னியக்க சிக்னல்களுடன் பாதுகாப்புக் கடவைகளும் அமைக்கப்படவுள்ளன என்று கூறப்பட்டது. ரயில் பாதைகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்றுவருகின்ற அதேவேளையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள எழுதுமட்டுவாழ், மிருசுவில், கொடிகாமம், மீசாலை, சங்கத்தானை, சாவகச்சேரி, தச்சன்தோப்பு, நாவற்குளி ஆகிய இடங்களில் ரயில் நிலையங்கள் அமைக்கும் பணிகளும் இடம்பெற்று முடிவுறும் நிலையில் காணப்படுகின்றன. (25)

# கூட்டமைப்பின் குழு இன்று தென்னாபிரிக்காவுக்கு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான ஐவர் அடங்கிய குழுவினர் இன்று தென்னாபிரிக்காவிற்கு பயணமாகவுள்ளனர்.

இலங்கை தொடர்பிலான செயற்பாடுகளுக்கு ஆபிரிக்க தேசிய காங்கிரஸை சேர்ந்த சிறப்புத்தூதுவர் ஒருவர் தென்னாபிரிக்கா அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த தூதுவர் இலங்கைக்கு விரைவில் வருகைதரவுள்ளார். இதனைக் கவனத்தில் கொண்டு இலங்கையின் தூதுக்குழு ஒன்று கடந்த பெப்ரவரி மாதம் தென்னாபிரிக்கா சென்று சந்திப்புக்களை மேற்கொண்டிருந்தது.

அதனடிப்படையில் இலங்கைக்கு வருகை தரமுன்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பினருடனும் பேச்சுவார்த்தை நடாத்த அவர் திட்டமிட்டுள்ளார். அதன்படி அவரின் அழைப்பின் பேரிலேயே கூட்டமைப்பினர் தென்னாபிரிக்கா செல்லவுள்ளனர்.

தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் மாவை சேனாதிராசா, சுரேஸ்பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ. சுமந்திரன் ஆகிய ஐவரும் செல்லவுள்ளனர்.

# அரிசியின் விலை திடீர் அதிகரிப்பு

கொழும்பிலும் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் ஏனைய பிரதேசங்களிலும் அரசியின் விலை 10 முதல் 15 ரூபாவரை அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மரதகாமுல்லை மற்றும் பொலன்னறுவை ஆகிய பிரதேசங்களிலும் அரசியின் விலை திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளது என்று வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். இதன்படி 65 ரூபாவாக இருந்த ஒரு கிலோ நாட்டரிசியின் விலை 80 ரூபாவாகவும் ஒரு கிலோ சம்பா அரிசியின் விலை 84 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

# கட்டுமீறுகிறது பொதுபலசேனா; முஸ்லிம் அமைப்புக்கள் குமுறல்

## தடுத்து நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

பொதுபல சேனாவின் தற்போதைய நடவடிக்கைகள் கவலை தருவதாக குறிப்பிட்டு, இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் அமைப்புக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

அண்மைக்காலமாக பொது பல சேனா அமைப்பினர், முஸ்லிம் மக்கள் மீது பிரச்சினையை உருவாக்க முயற்சிப்பதாக குறிப்பிட்டு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இலங்கை முஸ்லிம் கவுன்சில், இலங்கை ஜம்மத் இ- இஸ்லாமியா, அனைத்து இலங்கை ஜம்மத்துல் உலமா மற்றும் ஏனைய 12 முஸ்லிம் அமைப்புக்கள் இணைந்து இந்தக் கடித்தினை அனுப்பியுள்ளன.

சில நேரங்களில் பொதுபல சேனா அமைப்பானது, முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பைத் தூண்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அண்மையில் வடக்கில் குடியமர்த்தப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பில் பொது பலசேனா அமைப்பினர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். வில்பத்து தேசிய பூங்காவில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டமை குறித்து தவறான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர்.

அரசாங்கம் மற்றும் சர்வதேச சமூகம், இடம்பெயர்ந்த முஸ்லிம் சமூகங்களை மீள்குடியேற்றம் செய்ய முன்னுரிமை அளிக்கவில்லை.

உண்மையில், இரக்கமுள்ள முஸ்லிம் நாடுகளைச் சேர்ந்த நன்கொடையாளர்கள் மூலம் பெரும்பான்மையான முஸ்லிம் மக்களுக்கு வீட்டு உதவி வழங்கப்பட்டுள்ளது.

இவை இலங்கையின் வெளிநாட்டு உதவிக்கான விதிகளை மீறிச் செயற்படுவதாக சில பௌத்த தீவிரவாதக் குழுக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அந்த வகையில், பொதுபல சேனாவால் குழப்பம் மற்றும் மோசமாக உணர்வுகள் ஏற்படுகின்றன என அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், கடந்த வருடம் பௌத்த தீவிரவாத குழுக்களினால், முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக பகிரங்கமாக அறிக்கைகள் வெளியிட்டமையினை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஜனாதிபதியுடன்...

னுக்கும் இடையில் நீண்ட கால நல்லுறவு நிலவுவதாகவும் அந்த உறவு மேலும் வலுப்படுத்தப்படும் என்றும் கூறினார்.

அத்துடன் இருபதுக்கு இருபது உலகக் கிண்ணத்தை இலங்கை கிரிக்கெட் அணியினர் வென்றெடுததற்குப் பாராட்டும் தெரிவித்தார்.

### இலங்கைக்கு..

பொது நலவழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது புதுடில்லி வழக்கறிஞர் சங்க செயலாளர் ராம் சங்கர் என்பவரே மேற்படி வழக்கைப்பதிவு செய்துள்ளார்.

### யாழில்...

றுறை பகுதியில் நேற்று நண்பகல் 11.15 மணியளவில் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் குடும்பஸ்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஊர்காவற்றுறை ஆயித்தான்புலத்தைச் சேர்ந்த அந்தோனிசாமி வசந்தரூபன் (வயது 29) என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவராவார்.

ஊர்காவற்றுறையில் இரும்புக்கடை நடத்திவரும் இவரை அவரது கடைக்கு வந்த குற்றப்புலனாய்வுப் பொலிஸார் கைதுசெய்து கூட்டிச் சென்றனர். கூடவே இவரது மோட்டார் சைக்கிளையும் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (25)

### இரணைமடு...

மக்கள் ஆவலுடன் உள்ளனர்.

இரணைமடுக் குளமானது முல்லைத்தீவு மாவட்டத்துக்குரித்தான வளம்.

இவ்வளத்தினை கிளிநொச்சி விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். மேற்படி இரணைமடுக்குளத்துநீரை யாழ். மாவட்ட மக்களும் பயன்படுத்துவார்களாயின் வடக்கில் மன்னாரை தவிர்ந்த ஏனைய 5 மாவட்டங்களும் நன்மை அடையும்.

மாறாக இத்திட்டம் ஒருங்கிணைந்த ரீதியில் நடைமுறைப்படுத்த எதிர்குரல் எழுப்பப்படுமாயின் மத்திய அரசு வடக்கிற்கு குடிதண்ணீர் கொடுக்கும் திட்டத்தை கையிலெடுக்கும்.

இதன் மூலம் எதிர்காலத்தில் வடக்கு மக்கள் எதிர்கொள்ளும் நன்மை தீமைகளுக்கு வடக்கு மாகாணசபையே எதிர்கொள்ளநேரிடும்.

எனவே இரணைமடுக் குளம் என்பது நீர்ப்பாசனத் திணைக்களத் திடமும் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கவேண்டும் என்பது தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் யாழ். கிளிநொச்சி குடிதண்ணீர் திட்டத்திற்கும் என இரு அமைச்சுக்கள் கொண்டவிடயம்.

இத்திட்டத்தைத் முன்னகர்த்துவதன் மூலம் கிளிநொச்சி-முல்லைதீவு மக்கள் மட்டுமன்றி யாழ். மாவட்ட மக்களுக்கும் முழுதனிமை பயக்கும் திட்டம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்றார் சமூகவியல் நிபுணர் ரி.பாலசுப்பிரமணியம்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை வண. ஜாக்கிர சைதன்னிய சுவாமிகள், வண.செபஸ்டியான் அன்ரனி ஆகியோர் வழங்கினர்.

யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறைத் மலைவர் வைத்திய கலாநிதி இ. சுரேந்திரகுமார், கழகவியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன், புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி பிரதீபா, விபுலன், உறுப்பினர் த.நடனேந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினர் உரையினை வேள்ட்விசன் நிறுவன அதிகாரிகளான ஐ.மைக்கல், அ.கி.றொசைறோ ஆகியோர் வழங்கினர். (92)

### யாழில்...

களும், 30 சாதாரண விபத்துக்களும், 65 சிறிய் விபத்துக்களும் 40 சேதத்தை ஏற்படுத்தும் விபத்துக்களும், இடம் பெற்றன. இதனுடன் ஒப்பிடுகையில் 2014 முதற் காலாண்டுப்பகுதியில் விபத்துக்கள் குறைந்தளவிலேயே இடம்பெற்றுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் போக்குவரத்து பொலிஸாரும், வாகன பரிசோதகர்களும் இணைந்து திடீர் வாகனப் பரிசோதனை மேற்கொண்டதில் ஒரேநாளில் 24பேர் மீது வழங்குப்பதியப்பட்டுள்ளது. பிறேக், கோர்ன், ரயர், கைபிரேக், மின்னொளி என்பன பரிசோதிக்கப்பட்டன. எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இவ்விபத்துக்களில் அதிகளவில் 50-60 வயதுவரையான முதியவர்களே அகப்பட்டு மரணமாகியுள்ளதாக சமிந்த டி சில்வா தெரிவித்தார். (இ)

### இரணைமடுத்திட்டம்...

ளர் அ.செல்வராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில்,

இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை முன்னெடுப்பவர்கள் இதன் பின்னால் அரசியல் இல்லை என்கிறார்கள். அல்லது அரசியலைத் தவிர்த்துவிட்டு அபிவிருத்தியை மாத்திரம் பாருங்கள் என்கிறார்கள், அரசியலை அகற்றிவிட்டு அபிவிருத்தியைப் பற்றி மாத்திரம் பேசுவதற்கு நாம் ஒன்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளோ அல்லது உதவி வழங்கும் நிறுவனங்களின் முகவர்களோ அல்ல, நாங்கள் மக்களால் தேர்வுசெய்யப்பட்ட மாகாண அரசின் பிரதிநிதிகள்.

இரணைமடுக்குளம் புனரமைப்பையும், குடாநாட்டுக்கான குடிநீர் விநியோகத்தையும் ஒருங்கிணைத்த திட்டமாக மேற்கொள்ளாது, தனித்தனித்திட்டங்களாகப் பரிசீலிக்கும்படி இதற்கு நிதியுதவி வழங்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறோம். மாகாணசபை இவ்வாறான ஒரு கோரிக்கையை முன்வைத்திருக்கும் நிலையில், இத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று கோருபவர்களின் பின்னால் உள்ள அரசியலைப் பொதுமக்கள் புரிந்து கொள்வது அவசியம் என்றும் தெரிவித்தார்.

### அரசின்...

கடந்த 2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதலாம் திகதி கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகத்தினால் வோசிங்டன் தலைமையகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்ட இரகசியக் கடிதம் ஒன்றிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புட்டினிஸ் கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் திகதி, உதவி ராஜாங்க செயலாளர் ராபர்ட் ஓ பிளேக்கின் வலியுறுத்தலுக்கு அமைவாக இலங்கையில் வெளிவிவகார அமைச்சராக இருந்த ரோஹித்த போகொல்லாகமவை சந்தித்துள்ளார்.

இதன்போது சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டமை, எம்.டி.வி வலையமைப்பின் மீதான தாக்குதல் மற்றும் அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன், இலங்கைக்கு எதிரான பொருளாதார தடையை விதிக்க முற்படுவதாக கூறிய பாலித்த கோஹன்னவை மேற்கோள் காட்டி பாதுகாப்பு அமைச்சில் வெளியிடப்பட்டிருந்த அறிக்கை போன்ற விடயங்களுக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அரசாங்கத்தின் முறையற்ற செயற்பாடுகள் வெளிநாடுகளுக்கு பிழையான சமிக்ஞைகளை அனுப்புவதாகவும், அதனாலேயே புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மீண்டும் இலங்கைக்கு வந்து, அபிவிருத்திகளுக்கு ஒத்துழைக்க மறுக்கின்றனர் என்றும் புட்டினிஸ் சுட்டிக்காட்டியுள்ளார். எனினும் இந்த விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்துவதாக போகெல்லாகம உறுதியளித்திருந்ததாக கூறப்படுகிறது.

# வறட்சிக்கு முகம் கொடுத்தல்; வேலணையில் இன்று மாநாடு

(வேலணை)

வேலணைப் பிரதேச சபைக் குட்பட்ட 30 கிராம அலுவலர் பிரிவிற்குற்பட்ட மக்கள் குடி தண்ணீருக்காக மிகவும் கஷ்டப் பட்டு அல்லறுகின்றனர்.

இப்பிரச்சினை தீர்ப்பதற்கான உயர்மட்ட ஆலோசனை மற்றும் அபிப்பிராயக் கூட்டமும் உட னடித்தீர்வு தொடர்பாகவும் இன்று காலை 10 மணிக்கு பிர தேச சபையில் இடம்பெறவுள் ளது.

வேலணை பிரதேச சபைத் தவிசாளர் சின்னையா சிவராசா (போல்) தலைமையில் கூட்டம் இடம்பெறவுள்ளது. மேற்படி நிகழ்வில் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீஷன், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், வேலணை பிரதேச சபைக்குட் பட்ட வகையில் குடிதண்ணீர் விநியோகத்தில் ஈடுபடும் பொது அமைப்புக்கள், சங்கங்கள், தனியார்கள், யாழ்.கிளிநொச்சி குடிதண்ணீர் மற்றும் சுகாதார திட்டப் பணிப்பாளர் எந்திரி தி.பாரதிதாசன், சமூகவியல் நிபுணர் ரி.பாலசுப்பிரமணியம், யாழ்.பிராந்திய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் முகாமையாளர்கள், எந்திரி பா.தபேந்திரகுமார் மற் றும் யாழ்.குடிநீருடன் தொடர் புடைய அதிகாரிகள், உறுப் பினர்கள் கலந்து கொண்டு தீர்வுகளை முன் வைப்பதுடன், பின்தங்கிய குடிதண்ணீர் தொட ர்பாகவும், அவசரகால குடி தண்ணீர் மற்றும் வறட்சி கால குடிதண்ணீர் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது.

எனவே இக்கூட்டம் குறித்த நேரத்தில் இடம்பெறவுள்ளதால் அனைவரையும் சமுகமளித்து உதவுமாறு தவிசாளர் சி.சிவ ராசா கேட்டுள்ளார். (92)

# கைத்தொழில் கண்காட்சி கொழும்பில் விளக்கவுரை




சிறிய மற்றும் நடுத்தர கைத் தொழில் - 2014 கண்காட்சி தொடர்பிலான கலந்துரையா டல் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா தலைமையில் இடம் பெற்றுள்ளது.

கொழும்பு ஹில்டன் விடுதி யில் மேற்படி விடயம் தொடர்பி லான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான நிறுவனங்களில் ஒன்றான கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் முன்னெடுக்கப்பட வுள்ள சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் SMIDEX 2014 தொடர்பான கலந்துரையாடல் அமைச்சர் தலைமையில் நடை பெற்றுள்ளது.

இதன்போது கண்காட்சி தொடர்பான விளக்கவுரைகளை கைத்தொழில் அபிவிருத்தி சபைத் தலைவர் நவாப் ரஜாப் தீன், கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சின் செயலாளர் சிறிவர்த்தன, பாரம் பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவி ருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, பிரதியமைச்சர் திசாநாயக்க, பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா ஆகியோர் நிகழ்த்தினர்.

அடுத்த மாதம் 23 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதிவரை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மேற்படி கண் காட்சி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது மேற்படி கண் காட்சி தொடர்பிலான கைத் தொழில் அபிவிருத்தி சபையி னால் வெளியிடப்பட்ட ஒலி, ஒளி தொகுப்பின் விளக்கவுரையும் இதன்போது காண்பிக்கப்பட் டது.

இதில் அமைச்சின் மேலதிக செயலாளர் சுசந்த டிசில்வா உள்ளிட்ட அமைச்சினது துறை சார்ந்த அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# சிற்றூழியர் நியமனம் போதனா மருத்துவ மனைக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசா லையில் நிலவும் சிற்றூழியர் கள் பற்றாக்குறையைப்போக்கு வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் சிறிபவானந் தராசா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இதற்கென யாழ்.போதனாவைத்திசாலையில் நடைபெற்ற சிற்றூழியர்களுக் கான ஆட்சேர்ப்பு நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் மேலும் 130 தொண்டர் பணி யாளர்களின் பெயர்ப்பட்டியல் சுகாதார அமைச்சிற்கு அனுப்பி வைக் கப்பட்டிருப்பதாகவும் அமைச்சின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் இந்த மாதம் அவர் களுக்கான நியமனம் வழங்கப்ப டலாம் என்றும் தெரிவித்துள் ளார். (பா)

# மாரடைப்பால் மரணம்



(அச்சுநகர்)

பளை பொலிஸ் நிலையத் தில் கடமையாற்றிய 46 வயது டைய பொலிஸ் சார்யன்ட் தயாநாயக்க என்பவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மார்படைப் பால் பாதிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேல திக சிகிச் சைக்காக கொழும்பு வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பலனளிக்காமையால் மரண மடைந்தார். (34)

# பளையில் மருத்துவர்கள் இரவுக்கடமை செய்யாதது ஏன்?

## பாதிக்கப்பட்ட மக்கள் கேள்வி

(பளை)

பளைப் பிரதேச வைத்திய சாலையில் இரவு வேளைகளில் வைத்தியர்கள் கடமையில் இல்லை. இதனால் நோயாளர் கள் சாவகச்சேரி வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்ப டுகின்றனர் என்று மக்கள் தெரி விக்கின்றனர்.

தனியார் கட்டடத்தில் இயங் கிய வேளையில் வைத்தியர்க ளுக்கு விடுதி வசதி இல்லாத தால் இரவு வேளைகளில் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்கினர். தற்போது சொந்தக் கட்டடத்தில் சகல வசதிகளும் உள்ள போதிலும் தற்போதும் இரவு வேளைகளில் வைத்திய அதிகாரிகள் கடமைக்கு வருகை தருவ தில்லை. இதனால் நோயாளர் கள் வைத்தியசாலையிலிருந்து அம்புலன்ஸ் மூலம் அல்லது தனியார் வாகனங்கள் மூலம் சாவகச்சேரி வைத்தியசாலை க்கு அனுப்பி வைக்கப்படுகின்ற னர் என்று தெரிவிக்கப் படுகிறது.

வைத்தியசாலை, முன்னர் தனியார் கட்டடத்தில் இயங்கிய காலத்தில் நிரந்தர வைத்திய அதிகாரி நியமிக்கப்படாததால் பளை சுகாதார வைத்திய அதி காரியே வைத்தியசாலை கட மைகளை மேற்கொண்டு வந்த தாகவும் தற்போது வைத்திய சாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி நியமிக்கப்பட்டதன் பின்னரும் இந்த நிலைமை தொடர்கிறது என்றும் கவலை தெரிவிக்கப்பட்டது.

# அழகியல் கண்காட்சி யாழில் துரித ஏற்பாடு

வடமாகாண கிராம அபி விருத்தி திணைக்களத்தின் யாழ். மாவட்ட மகளிர் அபி விருத்தி நிலையங்களில் ஆடை வடிவமைத்தல், அழகியல், மனையியல் கண்காட்சி நடை பெறவுள்ளது.

கிராம அபிவிருத்தித் திணை க்களத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய கல்லூரியில் எதிர்வரும் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அரு மைநாயகம் கலந்து கொள்ள வுள்ளார். (25)

# போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் நியமனம்

(கொழும்பு)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் புதிய தலைவராக ரேனுக பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய தனியார் போக்கு வரத்து அமைச்சர் சி.பி.ரத்நாயக்க இந்த நியமனத்தை வழங்கி யுள்ளார்.

ரேனுக பெரேரா ஸ்ரீலங்கா சுந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட பிரதான அமைப்பாளராக செயற்பட்டு வருகின்றார். கடந்த மேல் மாகாண சபைத் தேர்தலில் ரேனுக பெரேரா கொழும்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு இலட்சம் இனிப்புபொதி நாமலிடமிருந்து



(கொழும்பு)

புத்தாண்டை சிறப்பிக்கும் முகமாக அம்பாந்தோட்டையைச் சேர்ந்த அரசியல்வாதிகளுக்கு இனிப்புக்களடங்கிய 1 இலட் சம் பொதிகளை வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, ஏற்கனவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருவதாக தெரிவிக்கப்ப டுகிறது.

இப் புத்தாண்டுப் பொதி, அம் பாந்தோட்டையைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கும், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், அமைச்சுகளின் தலைவர்கள், இளைஞர் படை உறுப்பினர்கள், அம்பாந் தோட்டை விளையாட்டு வீரர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆர்வலர்கள் என பலருக்கு கொடுக்கப்பட வுள்ளது.

இவற்றிற்கான அனைத்து செலவுகளும், ஜனாதிபதியின் இரகசிய நிதியிலிருந்து எடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. கொக்கிஸ், அதிரசம் போன்ற சிங்கள பாராம்பரிய உணவுப் பண்டங்கள் இப்பொதி யினுள் அனைவரையும் கவரும் வகையில் பொதி செய்யப்பட் டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது.

# 1230 விவசாயிகளுக்கு நிலக்கடலை வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட 1,230 நிலக் கடலைச் செய்கையாளர்களுக்கு விதை நிலக்கடலைகள் நேற்று வழங்கப்பட்டன. 400 ஏக்கர் நிலப்பரப்பில் நிலக்கடலைச் செய்கை மேற்கொள்வதற்காக 16,000 கிலோகிராம் நிலக்கடலை விதைகள் வழங் கப்பட்டன. இதற்கான நிதியுதவியை உலக உணவு ஸ்தா பனம் வழங்கியது.

இதேவேளை, கிளிநொச்சி மாயவன் கிராமத்தில் வடமாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் பயிர்ச் சிகிச்சை முகாமும் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதில் பயிர்களுக்கு ஏற்படும் நோய்களும் அந்நோய்களை எவ்வாறு கட்டுப்படுத்துதல் போன்றவை தொடர்பில் விவசாய போதனாசிரியர்கள் விளக்கமளித்தனர்.

# அழுகிய நிலையில் ஆணின் சடலம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண் டூரில், தனது வீட்டிலிருந்து சென்று கடந்த மூன்று தினங்களாக காணாமற்போனவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் வேற்றுச்சேனையில் உள்ள காட்டுப் பகுதியில் மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் அழுகிய சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டவர் மண்டூரினை சேர்ந்த வைரமுத்து சந்திரசேகரம் (வயது -65) என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் வெல்லா வெளி பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் மீட்கப்பட்டு களுவாஞ்சிக்குடி ஆதாரவைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், இது தொடர்பிலான விசாரணையை வெல்லாவெளிப் பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஏப்ரல் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.